# காவேரி

சர்வஜித் – ஐப்பசி



8/ அணா




போர்ன்-வீடாவிலுள்ள கால்ஷியமும் விடமின்களும், வளரும் குழந்தைகளுக்கு வலுவான எலும்புகளும், கெட்டியான சதையும் வளர உதவுகின்றன. பெரியவர்களுக்கு நிம்மதியான ஆழ்ந்த உறக்கமளித்து ஜீவ சக்தி ததும்பச் செய்கின்றன.

# காட்பரீஸ்

# போர்ன்-வீடா

கால்ஷியம், விடமின்கள் நிறைந்தது.

KB2TM

காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி

சப்ளைகள் கிடைக்காவிட்டால் எழுதவும்:
காட்பரி-ப்ரை(எக்ஸ்போாட்) லிட், (Dept "16" ) தபால் பெட்டி 1417-பம்பாய்.


பனி படர்ந்த
புஷ்பம் போல்
புதுமையானது
Picture courtesy Kodak Ltd.
Brooke Bond Tea
Darjeeling Blend
Brooke Bond Tea
ப்ரூக்
பாண்ட்
தேயிலை
இரு இலையும் ஒரு மொட்டும்

FAS
294


இன்றியமையாதது
Control
லக்ஷக்கணக்கான கிளோ வாட்ஸ் எலெக்ட்ரிஸிடியை உற்பத்தி செய்யும் இந்த மகத்தான மெஷீன் ஒரு முக்கியமான சிறிய 'ஸ்விட்ச்' ஆல் ஆளப்படுகிறது. நூற்றுக்கணக்கான இதயங்களை வசிகரிக்கும் இவ்வழகிய பெண்மணி அதன் முக்கியத்தை உணர்வாள். ஒரு சிறிய மலபார் லிம்டா ஸோப் கட்டி இவ்வற்புதத்தைச் செய்கிறது.
MALABAR
LIMDA
LIMDA
மலபார்
லிம்டா சோப்
வெஜிடபில் சோப் ஒர்க்ஸ்
கள்ளிக்கோட்டை
புரோப்ரைடர்ஸ் சேட். N.P. & Co. கள்ளிக்கோட்டை..பம்பாய்..சென்னை...

# CaOCl2




## ப்ளீச்சிங் பவுடர்

1774-ம் ஆண்டில் குளோரின் வாயு தாவர சத்துக்களாலான சாயங்களை வெளுக்கும் குணம் உடையது எனக் கண்டுபிடித்தனர். இதைத் தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடந்தன. அதே நூற்றுண்டின் இறுதியில் சுண்ணும்பில் குளோரினை ஊட்டும் முறை அறிவிக்கப்பட்டது. குளோரின் கலந்த சுண்ணும்பு ப்ளீச்சிங் பவுடராகும். ப்ளீச்சிங் பவுடர் என்னும் சுண்ணும்பு குளோரைட் மிகவும் சிலாக்யமான சலவைப் பொருளாக இருந்து வருகிறது. தவிரவும் குளோரின் நுண் கிருமிகளை அழிக்கும் சக்தி வாய்ந்தது. ப்ளீச்சிங் பவுடர் நீரில் பட்டவுடன் அதிலுள்ள குளோரின் வாயு வெளிப்பட்டு அருகிலுள்ள கிருமிகளை நாசம் செய்துவிடுகிறது: ஆகவே ப்ளீச்சிங் பவுடர் சிறந்த கிருமி நாசனியாக உபயோகப்படுகிறது. ப்ளீச்சிங் பவுடர் இன்று அநேகமாக எல்லா உற்பத்தி தொழில்களிலும் கையாளப் படுகிறது. பருத்தி உடைகள் வெளுக்க, கம்பளிமேல் அச்சிட, வெள்ளை பேப்பர் தயாரிப்பு, பெட்ரோலியம் சுத்தம் செய்ய, குளோரபாரம் உற்பத்தி, சுகாதார பாதுகாப்பு வேலைகள் இவைகளில் வெகுவாக பயன்படுகிறது.

28 முதல் 32 சத விகிதம் குளோரின் கொண்ட 'காவேரி' பிராண்ட் ப்ளீச்சிங் பவுடர் 28, 98, 160 பவுண்டுகள் அளவில் டின்களிலும் இரும்பு பேரல்களிலும் சப்ளை செய்யப் படுகிறது.

CAUVERY BRAND

Mettur Chemicals
VITAL TO INDUSTRY

வெளியிடுவோர்

மேட்டூர் கெமிகல் &இண்டஸ்ட்ரியல் கார்பொரேஷன் லிமிடெட்

மானேஜிங் ஏஜெண்டுகள்:

**சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட், திருச்சினுப்பள்ளி.**

---

பூரண விற்பனை ஏஜெண்டுகள்:

அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்டிரிப்யூட்டர்ஸ் லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: 120 அரமனைக்காரத்தெரு. மதராஸ்.

பிராஞ்சுகள்: பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கோயமுத்தூர் ஹைதராபாத், கும்பகோணம், மேட்டூர் அணை, சேலம், திருச்சினுப்பள்ளி, திருவனந்தபுரம்.




**உண்மையான நீம் ஆயில் சோப் இதுதான்**

சருமத்தைப் பாதுகாக்க அவசியமென்று நிபுணர்கள் கருதும் நீம் எண்ணெயினின்றும் தயாரிக்கப்படுவது **மார்கோ** ஒன்றுதான்.

தினசரி **மார்கோ** உபயோகித்து உங்கள் மேனியைப் பாதுகாருங்கள்.

# மார்கோ சோப்

டாய்லட் & மெடிஸினல்

**கல்கத்தா கெமிகல்**

CALCUTTA CHEMICAL

# BITA CAFFIN

## பிடாகாபின்

(தலைவலி மாத்திரைகள்)




தலைவலி, பல்வலி, கால்களிலும் மூட்டுகளிலும் வலி, சூதகத்தின் போதுள்ள வலி முதலிய சகல வலிகளையும் நீக்கும். தூக்கமின்மை, மலேரியாசுரம் இவைகளையும் கண்டிக்கும். இருதயத்துக்கோ, குடலுக்கோ எவ்வித தீங்கும் செய்யாது.

**எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்**

**மூன்று மாத்திரைகள் கொண்ட பாக்கெட் அணு 1**

# BITA LAX

## பிடாலாக்ஸ்

(இனிப்பான சாக்லெட் சுகபேதி)

இலேசாகவும், சுகமாகவும், மலச்சிக்கலை போக்க வல்ல குணமுள்ளது.

**எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்**




*Stockist:—*

**M/s DADHA & Co., P. T. Madras**

Manufactured by:—

BOMBAY TABLET MANUFACTURING COMPANY,

Post Box 2092, 176, Zaveri Bazaar, BOMBAY 2




**லிவர்க்யூர்** பிராஞ்ச் ஆபீஸ்
பெரியதெரு
கும்பகோணம்.

**LIVER CURE** Branch Office
Parekh Mansion
Sandhurst Road, (West)
BOMBAY 4.




ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு

ஏஜண்டுகள் :—

**சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,**
பேர்ஹாம்பூர், செகந்திராபாத்,
பெஜவாடா, மதுரை.




Agent:—T. T. KRISHNAMACHARI & Co.
12A Lingha Chetty Street, — G. T. MADRAS.

## தமிழில் அரிய புத்தகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | மேடைக்கலை (ஆ. முத்துசிவன் M.A.) | 2 | 0 | 0 |
| 2 | நீறுபூத்தநெருப்பு (ரா. ஆறுமுகம்) | 1 | 8 | 0 |
| 3 | மீண்ட இந்தியா (N. R. பத்மநாபன்) | 0 | 14 | 0 |
| 4 | ஆதி கவி (கம்பதாஸன்) | 0 | 10 | 0 |
| 5 | ஆசியாவின் அறை கூவல் (பல்குநன்) | 0 | 12 | 0 |
| 6 | கலையும், கலைவளர்ச்சியும் (வ. ரா.) | 2 | 0 | 0 |
| 7 | விஞ்ஞானமும், சமூகமும் (ப. கோதண்டராமன் M.A., B.L.) | 3 | 8 | 0 |
| 8 | புரட்சித்தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் (கொடுமுடி ராஜகோபாலன்) | 3 | 0 | 0 |
| 9 | சோவியத் அரசாங்கம் (S. ஷண்முகம்) | 1 | 8 | 0 |
| 10 | பாச வலை (ய. லக்ஷ்மிநாராயணன்) | 1 | 8 | 0 |

### அச்சிலுள்ளவை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | தமிழ் உணர்ச்சி (யோகி ஸ்ரீசுத்தானந்த பாரதியார்) | 3 | 0 | 0 |
| 2 | ரசிகமணியின் கடிதங்கள் (தொகுத்தவர் "பாஸ்கர்") | 3 | 0 | 0 |

எல்லாப் புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும்,

**கார்த்திகேயினி பிரசுரம்.**

ராமச்சந்திரபுரம் P.O.

புதுக்கோட்டை ஸ்டேட்.


## பொருளடக்கம்


சர்வஜித்து மலர் 7 | ஐப்பசி இதழ் 3



நமது மந்திரி சபை 9

கதம்பம் 11

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் 13

எங்குமில்லை 17
'வங்கத்தமிழன்'

மருந்து 18
ரா. ஸ்ரீ. தேசிகன்

க்ஷீரமும், வீரமும் 24
சி. வி. ராமகிருஷ்ணன்

ஐயர் - வாள் 28
யோகி சுத்தானந்த பாரதியார்

நடன கலா 33
கே. சுந்தரம்மாள்

சபதம் 42
'மானஸீகன்'

ஆசைமுகம் 49
எஸ். கிருஷ்ணன்

காதுக்கெட்டாத இசை 56
நா. கி. நாகராசன்

பட்டாணியன் 59
கான் அப்துல் கனி கான்

'கலைக் கோயில்' 64
ராஜலக்ஷ்மி சுவாமிநாதன்

முத்து மூக்குப் பொட்டு 69
கௌரி

சரித்திர முக்கியத்வம் வாய்ந்தது! 73
''ஜய்லன்'


குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

128887-







## "காவேரி" ஏஜண்டுகள்

**புது டில்லி**

ஸ்ரீ. K. P. அனந்தன்,
14, நூர்ஜஹான் ரோட்,
புது டில்லி.

**கல்கத்தா**

ஸ்ரீ. P. சுப்பையா பிள்ளை,
Prop: சரஸ்வதி ஸ்டோர்ஸ்,
11, ஜதின்தாஸ் ரோட்,
ராஷ் பிஹாரி அவென்யூ P. O,
கல்கத்தா—29.

**பம்பாய்**

M/s. சரோஜினி ஸ்டோர்ஸ்,
பிம்டிவாலா பில்டிங்ஸ்,
மட்டுங்கா (G. I. P.).

**ஆத்தூர்**

ஸ்ரீ. A. அர்ச்சுனன்,
"தினசரி" ஏஜண்டு.

**குளித்தலை**

ஸ்ரீ. M. ராமஸ்வாமி,
நியூஸ் ஏஜண்ட்,
கந்தசாமி பிள்ளைத் தெரு,
கிழக்குக் கடைத்தெரு,
குளித்தலை.

# காவேரி

| சர்வஜித்து மலர் 7 | “சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—” பாரதியார் | ஐப்பசி இதழ் 3 |
|---|---|---|

## நமது மந்திரி சபை

சென்னை மந்திரி சபையினர் வெள்ளப் போக்கில் மோதப்பட்டு, தத்தளிக்கும் துரும்பெனத் தள்ளாடிக்கொண்டு, காலப் போக்கின் வேகத்தையொட்டியும் கூச்சல்போடும் பாமர மக்களின் கோஷத்திற்கு இணங்கியும் ஆட்சிபுரிந்து வருகின்றனர். நீண்டகால திட்டமோ, திடமான கொள்கைகளோ இருப்பதாகத் தெரியவில்லை.

தேசிய சர்க்கார் என்று சொல்லிக் கொள்ளும்படியான என்ன மாறுதலை நாம் சென்னை ஆட்சியில் காண முடிகிறது? மந்திரிகள் குறுக்கும் நெடுக்கும் சுற்றித் திரிகிறார்கள். மக்களுடன் குலாவி மாலை ஏற்கிறார்கள். கூட்டங் கூடிக் கலைகிறது. மக்கள் கண்டபலன் வரி விதிப்பு அதிகம். பொதுமக்கள் வாங்கவேண்டிய ஒவ்வொரு சாமானின்பேரிலும் அதிக வரி.

இதனால் பெருவாரியான மக்கள் சுகப் படப்போகிறார்களா? அதுதான் இல்லை. ஏன்?

பழைய வரிவிகித முறைகள் மாற்றப் படவில்லை. கறக்கும் பசுவையே சுரண்டிக்கறக்கப் பார்க்கிறார்கள். வரிப்பளுவே இல்லாமல் திரியும் கோஷ்டியினரைக் கறக்க முயலவில்லை.

ஒருவன் ரூ. 50,000 ரொக்கமாகப் பணம் பாங்கில் போட்டு சுகஜீவனம் செய்துவந்தால், அவனுக்கு வரிப் பளு ஒன்றும் கிடையாது. அதே பணத்தை அவன் நிலத்தில்போட்டுச்சாகுபடிசெய்து பணத்தைப் பெருக்க முயன்றால் அவன் முதுகெலும்பை ஒடிக்க நில வரி, நீர் வரி, அவன் விற்கும் நெல்லுக்கு வரி—இப்படியாக அவனை வாழவொட்டாமல் அரசாங்கம் செய்துவிடுகிறது. அவன் இனாம் கிராமம் வாங்கிவிட்டால் முதலுக்கே மோசம் வந்துவிடும் போலிருக்கிறது இந்தப் புதிய சட்டப்படி.

வரி விகிதம் சில அடிப்படைக் கொள்கைகளைப் பொறுத்திருத்தல் அவசியம். பொதுவாக அதிகப் பணம் ஒரே கையில் குவியாமல் செய்வது நவீன ஆட்சி முறையின் முக்கிய நோக்கமாய் இருக்கவேண்டும். இப்பொழுது அமுலில் இருக்கும் வரி விகிதம் தன் பணத்தால் மேலும் விருத்திசெய்ய முயலுகிறவனை அது வெகுவாகப் பாதிக்கின்றது.

விற்பனைவரி விகிதத்தை அதிகரித்துக் கொண்டே போகாமல், வரியினால் பாதிக்கப்படாத கோஷ்டியினரை வரிப்பளுவை ஏற்கும்படி செய்வதுதான் தேசிய அரசாங்கத்தின் முதற்கடமையாகும். ஒரு அளவுக்கு மேல் பாங்கில் தூங்கும் பணத்திற்கு ஓர் வரி விகிதம் விதிக்கப்பட்டாலன்றி நாடு சுபிட்சமடையாது. சோம்பேறியான பணக்காரர்களை வரி விதிப்பினால் எழுப்பி, தங்கள் பணத்தை தொழிலில் ஈடுபடுத்தத் தூண்ட வேண்டும்; இல்லையேல் அப்பணத்தை வரியின் மூலம் குறைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

சென்னை மந்திரி சபையினர் மதுவிலக்கினால் ஏற்பட்ட நஷ்ட ஈடு அனைத்தையும் ஒரேதுறையில் மீட்க முயலாமல் இத்தகைய புதிய துறைகளில் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டிக்கொள்கிறோம். ஏழை எளியோர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்வதோடு விலைவாசிகள் அவர்களுக்குக் கட்டக்கூடியதாகச் செய்வதும் அவசியம்.

சென்னை அரசாங்கம் விஷயமறிந்தோரைக் கூட்டி ஓர் கமிட்டி நிறுவி, தீர்க்க தரிசனமும் குறிப்பிட்ட கொள்கையும் கொண்ட ஓர் ஐந்து வருட வரித் திட்டத்தைத் தயாரித்து, அதை அமுலுக்குக் கொண்டுவர முயற்சித்தால் அது பயன் தரும். இல்லையேல் பொதுமக்களுக்குப் பிரிட்டிஷ் ஆட்சிக்கும் தேசிய ஆட்சிக்கும் உள்ள வித்தியாசம் ஒன்றும் தெளிவாகாது.

# கதம்பம்

## பாரதி ஞாபகார்த்தம்

அரசியல் சூழலில் தங்கள் முழுக் கவனத்தைச் செலுத்தி வரும் இக்கால மக்களுக்கு, அச் செய்திகளில் மோகங்கொண்டு வாழும் நாகரிக மக்களுக்கு, எட்டய புரத்தில் நடக்கும் திருவிழா ஓர் படிப்பினையைக் கற்பிக்க வேண்டும். அரசியல் வாழ்வில் படா டோபமும் மக்களின் மோகமும் அதிக மிருக்கும். அரசியல் வாதி, எத்தகைய தலைவனாக இருப்பினும், அவன் நாட்டிற்கு எவ்வளவு பெரிய நன்மைகள் செய்திடினும், அவன் மறைந்தவுடன் அவன் செய்த நன்மைகளும் மக்கள் மனதை விட்டு அகன்றுவிடுகின்றன. சரித்திர புத்தகங்களில் அவன் இடம் பெறலாம். ஆனால் அவனுக்குப் பிற்காலம் வரும் மக்கள் இதயங்களில் அவன் இடம் பெறுவதில்லை.

கவிகள் கதை இதற்கு நேர்மாறு. சுப்பிரமணிய பாரதியார் வாழ்நாளில் அவரைப் புகழ்ந்தவர்களும் போற்றியவர்களும் வெகு சிலரே. ஆனால் அவர் இறந்த பின், அவரைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப் படுத்தியது அவருடைய மேடைப் பிரசங்கங்களல்ல, அரசியல் வாழ்வல்ல, அவர் இயற்றிய பாடல்களே. அவருடைய பாடல்கள் இன்று ஒவ்வொரு தமிழனுடைய அகத்திலும் உள்ளத்திலும் எதிரொலிக்கின்றன. இதைச் சாதித்தது எந்தச் சாதனம், எந்த நினைவு மண்டபங்கள் என்று சற்று ஆராய மக்களை வேண்டுகிறோம்.

எட்டயபுரத்தில் மேற்கு வங்காள கவர்னர் ஸி. ராஜகோபாலாச்சாரியார் திறந்துவைத்த 'பாரதி நினைவு மண்டபம்' பாரதியை வருங்கால மக்களுக்கு நினைவுறுத்த என்று நிறுவப்பட்டிருப்பின் அது வீண் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. இந்நாட்டில் உள்ள கோவில்களும், மண்டபங்களும் கணக்கிலடங்கா. அநேகமாக அவைகள் ஞாபகார்த்தச் சின்னங்களாக அமைக்கப்பட்டவை. ஆயினும் இதன் காரணமாக மக்கள் அவர்களை ஞாபகத்தில் பதியவைத்து உள்ளம் கனிந்து நிற்கிறார்கள் என்றுநினைப்பது தவறாகும். பல கோயில்களில் அரிய பெரிய தொண்டாற்றிய மன்னர்களின் உருவச் சிலைகள் காணப்படுகின்றன. எனினும் மக்கள் அதைக்கண்டு பூரிப்பு எய்தியதாகத் தெரியவில்லை.

ஆனால் நம் நாட்டில் அவதரித்த அநேக கவிகள் எங்கு அவதரித்து, இன்புற்று அல்லது கேட்பாரின்றித் துன்புற்று, மாண்டனர் என்று அறிவிக்க ஒரு கல்லும் கிடையாது. மன்னர்களும், போர் வீரர்களும் பிடி சாம்பலானதும் மக்கள் மனதிலிருந்து மறைந்துவிட்டனர். அவர்கள் ஆற்றிய பணிகள் கதைகளாகி, கட்டுக்கதைகளெனப் புறக்கணிக்கப்படும் காலமும் வந்துவிட்டது. ஆனால் கவிகள் — கம்பன், காளிதாஸன் — சிரஞ்சீவிகளாக மக்கள் உள்ளத்தில் சிங்காஸனம் ஏறி இன்றும் ஆட்சிபுரிந்து வருகிறார்கள். அக்கால மக்கள் அல்லது அவருடைய வாழ்நாளுக்கு அப்பால் ஏற்பட்ட மக்களும் சரி, அவர்களுக்குஞாபகார்த்தச் சின்னங்கள் ஏற்படுத்த முயன்றதாகத் தெரியவில்லை. அக்காலங்களிலும் ஞாபகார்த்தச் சின்னம் அமைக்கும் பழக்கம் இருந்ததாகத்தான் தெரிகிறது.

ஏன்?

கவிகளுடைய தொண்டினைக் கல்லினாலும் சுண்ணாம்பினாலும் நினைவுறுத்த வேண்டியது அனாவசியம். கல்லும் மண்ணும், காரையும் சிமண்டும், அழியுந்தன்மைவாய்ந்தவை; கால வெள்ளத்தில் கரையும். ஆனால் கவிகளுடைய கவித்வம் காலத்தையும் அழிவையும் எதிர்த்து நிற்கும் தன்மை வாய்ந்தது; எனவேதான் அழிவுத் தன்மை யுற்ற மண்டபங்களாலும், கோயில்களாலும் கவிகளை நினைவுறுத்த முயற்சிப்பதில்லை நமது முன்னோர்கள்.

ஆயினும் நாகரிகத்தில் முதிர்ச்சி பெற்ற தமிழ் மக்கள் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரதியாரைப் போதியவாறு ஆதரிக்கவில்லை என்ற குற்றச்சாட்டிற்கு பிராயச்சித்தமாக அவர் வாழ்ந்த எட்டய புரத்தில் ஓர் மண்டபம் எழுப்பி, தமிழ் ஆராய்ச்சிக்கு அர்ப்பணிப்பது தகுதியே.

ஞாபகார்த்தக் கமிட்டியார் பாரதியாரின் பாடல்களை உலக பாஷைகள் அனைத்திலும் கவி பாடச்செய்து, அச்சிட்டு உதவினால் அது மஹோன்னத பாரதி சின்னமாகும். கல்கி அவர்கள் இத்துறையிலும் தம் திறமையான கவனத்தைச் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

**ராமய்யா**

நாள் பார்த்து, நக்ஷத்திரம் பார்த்து, நல்ல வேளை யென்று நிர்ணயித்து, நம்முடைய யத்தினத்திலேயே காரியத்தைச் சாதித்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் நடந்துகொள்வது விசாலமற்ற புத்தியை வகித்திருக்கும் மனிதருக்கு ஸகஜம். ராகு காலம், குளிகை காலம், வர்ஜியம், தாராபலம், சந்திர பலம், வாரசுல்கம், எமகண்டம் எல்லாவற்றையும் பார்த்து, எல்லாம் சரிவரா விட்டால் அதற்குத் தகுந்த பரிகாரங்களை அனுசரித்து, பரஸ்தானம் வைத்து, பாலைக்குடித்து, வெல்லத்தை வினியோகம் பண்ணி, பூனையைத் தூரத்தியடித்து, கழுதையின் காலில் கல்லை விட்டெறிந்து அதைக் கதறச்செய்து, நல்ல வேளையில் நல்ல சகுனத்துடன் காரியங்களைச்செய்வது நமது நாட்டில் உள்ள வழக்கம். இந்த வழக்கத்தை அவிவேகிகளும் நாஸ்திகரும்தான் அதிகமாக அனுசரிக்கிறார்கள் என்று நம்பியிருந்தோம். நமது நாட்டின் தலைவர்களுங்கூட இத்தகைய கொள்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது சுதந்தரதினத்தன்று வெளிக்கு வந்தது. விரதம் கெட்டாலும் சுகம் தக்க வேண்டுமென்பார்கள் — ஆகவே, காசி, கும்பகோணம், குண்டூர், பாலக்காடு, முதலிய பட்டணங்களிலிருந்து சோதிட நிபுணர்கள் சாத்திர ரீதியாகக் குறிப்பிட்ட முகூர்த்தத்தில் சுதந்தரப் பிரபுத்துவத்தை நாம் எடுத்துக்கொண்டும், நமக்கு விமோசனம் கிடைத்ததாகக் காணவில்லையே. சென்ற இரண்டு மாதங்களாக நாம்படும் பாடுகளைப்பார்த்தால், பெரிய தெய்வ குற்றத்துக்கு ஏதுவாயிருந்தார்களோ நமது தலைவர்கள் என்றல்லவோ தோன்றுகிறது. ஒரு வேளை கடவுள் அபிப்பிராயப்பட்டது இப்படியிருக்கலாமோ? "சகலவித சம்பவங்களுக்கும் நான் மூலாதாரமாக இருக்க, என்மீது பாரத்தைப் போட்டு விட்டுக் காரியத்தை நடத்தாமல் கேவலம் நான் சிருஷ்டித்த கிரகங்களின் சக்தியில் நம்பிக்கைவைத்து, அவர்களை யனுசரித்து நிசிராத்தியில் முகூர்த்தத்தை வைத்து, பிரபுத்துவத்தை அங்கீகரித்துக்கொண்ட பாரத தேச மக்களை அபயம் என்று சொல்லும் வரையில் ஆட்டிவைக்கத்தான் வேண்டும்" என்கிறாரோ அவர்? (என்கிறான் அம்மாஞ்சி) — ஆதலால்தான் கொல்லு கொலை, பஞ்சம், பிணி, ரோகம், மனஸ்தாபம் எல்லாம் நம்மை உபத்திரவப்படுத்துகின்றனவோ? ஐயோ தெய்வமே!

இந்த விஷயத்தைப்பற்றி அம்மாஞ்சியின் அபிப்பிராயத்தைக் கேட்பீராயின், சும்மா பழமொழிகளாகவே அவன் உலுக்கிக் கொட்டுகிறான் — கவனியுங்கள்:

"வெடியா மூஞ்சி வேலைக்குப் போனால் வேலையகப்பட்டாலும் கூலியகப்படாது.

"ஆறெல்லாம் பாலாய்ப் பெருகினாலும் நாய்க்கு நக்கித்தான் குடிக்கவேணும்.

"ராமேசுவரம் போனாலும் சனீசுவரன் விடமாட்டான்.

"கடன் வாங்கியும் பட்டினி, கலியாணமாயும் சன்யாசி.

"ஆசையிருக்குது தாசில் பண்ண, அதிர்ஷ்டம் இருக்குது கழுதை மேய்க்க.

"வண்ணானுக்கு வைப்பாட்டியான பிறகும் வெள்ளைத் துணிக்குப் பஞ்சமாம் (ஒருத்திக்கு).

"கலம் வெண்ணெயைக் கையில் வைத்துக்கொண்டு நெய் இல்லையேயென அழுதானும் (ஒருவன்).

அம்மாஞ்சி சொல்வது என்னவென்றால், சுதந்திரம் வந்தபிறகுகூட சண்டை, சச்சரவு, பஞ்சம், வறுமை இவையெல்லாம் நம்மை விட்டுத் தொலைவதாக இல்லையே, நம்முடைய தௌர்ப்பாக்கியம் இப்படிப்பட்டதாக இருக்கிறதே என்பதுதான்! இதற்குக் காரணம் என்ன, பரிகாரம் என்ன, பிறகு விமோசனம் என்ன?

முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்களைப்பற்றி, பூராவாக எழுத உத்தேசித்தால், சுமார் ஐந்து அல்லது ஆறு வியாஸங்கள் எழுத வேண்டிவரும். இந்த வியாசத்தில் உணவுப்பஞ்சம், துணிப்பஞ்சம் இவ்விரண்டு விஷயங்களைப்பற்றி மாத்திரம் எழுத உத்தேசித்திருக்கிறேன். வேறொரு முறை எழுதும்போது மற்றப் பொருள்களின் பஞ்சத்தைப் பற்றியும் ஜாதி, மதம், குலம், கோத்திரம், இவ்வித பேதங்களினால் விளையும் தீமைகளைப்பற்றியும் ஆலோசிக்கலாம். தவிர இந்தச் சந்தர்ப்பத்தில் மத்திய பிரபுத்துவத்தில் நமது தலைவர்கள் செய்துவரும் வேலையைப்பற்றி எழுதுவதாக உத்தேசமில்லை. அவர்களுக்கு மூச்சுவிடக்கூட சமயமில்லாமலிருந்து வருவதால் அவர்கள் ஈடுபட்டிருக்கும் விவகாரத்தைக் குறித்து அங்கீகரிப்பதாகவோ அல்லது வேறுபட்டதாகவோ அபிப்பிராயப்படுவது இந்தச் சமயத்தில் அதிகப் பிரசங்கமாகும். அடித்தாலும், உதைத்தாலும் அவர்களே துணை என்பது போல, நேரு, படேல், ராஜேந்திர பிரஸாத், இவர்களிடத்தில் பரிபூரணமான விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் நாம் நடந்து கொள்ளவேண்டியது அவசியம்.

ஆனால் சென்னை ராஜதானியில் பிரபுத்துவத்தை வஹித்துவரும் நமது மந்திரிகளைப் பற்றியும் அவர்கள் செய்துவரும் வேலையைப்பற்றியும் நம்முடைய அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவது நமது உரிமை. அதிலும் அம்மாஞ்சியின் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவது எனது கடமை. ஜனநாயக சமூகத்தில் சர்க்கார் காரியங்களைக் கவனித்து வரும் மந்திரிகளின் மனப்போக்கை எதிர்ப்பதற்காகவே சிலர் ஏற்படவேண்டும். ஆமோதிக்கவேண்டிய விஷயங்களைப்பற்றிச் சரிவர எழுதவும், எதிர்க்கவேண்டிய விஷயங்களைப்பற்றித் தாக்ஷிண்யமில்லாமல் எழுதவும் எழுத்தாளர்கள் முன்வரவேண்டும். அம்மாஞ்சியின் தரப்பாக நான் தற்சமயம் இந்த வேலையை எடுத்துக்கொள்ளுகிறேன்.

உணவு நெருக்கடியைப்பற்றி முதலில் கவனிப்போம். உணவு என்றால் அரிசியைப்பற்றி மாத்திரம் சென்னைமாகாணத்து உணவு இலாகா மந்திரி எப்பொழுது பார்த்தாலும் பேசுகிறார். அதிலும் மூன்று வருஷங்களாக அரிசி சேமிப்பதைப் பற்றிமாத்திரம் பேச்சும் விவகாரமும் அதிகமாயிருக்கின்றன. இந்த நடவடிக்கையில் பலவித பழுதுகளிருக்கின்றன. முதலாவது உணவு நெருக்கடியில் அரிசிக்குப் பஞ்சம் தவிர, பருப்புகளுக்கும் சர்க்கரை முதலிய பண்டங்களுக்கும், பாலுக்கும், பழங்களுக்கும், காய்கறி வகையராக்களுக்கும் அகோரமான பஞ்சம் ஏற்பட்டிருப்பதாகவும், அந்தப் பிணியைத் தீர்க்கச் சுலபமான வழிகள் உண்டென்றும், அத்தகைய வழிகளில் அதிகமாக ஈடுபடவில்லை என்றும் ஏற்பட்டிருப்பது திண்ணம். அரிசி கொஞ்சமாகக் கிடைத்தாலும் மேற்கூறிய மற்ற வஸ்துகள் நெருக்கடியில்லாமல் கிடைக்கும் பக்ஷத்தில் பஞ்சம் பலவகையில் தீருமல்லவா? பல ஜாதியாருக்கு மாம்ஸ பண்டங்களும் மீன்களும் ஏராளமாகக் கிடைத்தால், அரிசிக் குறைவால் ஏற்படும் வருத்தம் சிறிது நிர்வாகமாகாதா? இதைப்பற்றி முயற்சியும் பேச்சும் காணப்படவில்லையே என்கிறான் அம்மாஞ்சி. பருப்புவகைகள் பயிராகும் பூமி தென்னிந்தியாவில் சிறிதும், வட இந்தியாவில் பெரிதுமாக இருக்கின்றன. அவைகளைச் சேமிப்பதற்கு மாத்திரமே ஸர்க்கார் பிரயத்தனப்படவேண்டும். யுத்தகாலத்திலிருந்து வந்த ரயில்வே நெருக்கடிகள் சிலமாதங்களாக மாறிவிட்டனவல்லவா? அப்படியும் பருப்புகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருப்பது யார் குற்றம்? சுமார் இரண்டு வருஷங்களுக்குமுன் மத்யஸர்க்காரும் மாகாண ஸர்க்காரும் நமது தேசத்திலுள்ள உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்காக மீன்களை அதிகமாக விருத்திசெய்யவேண்டும் என்கிற விஷயத்தைப்பற்றி ஆலோசனைகள் செய்தனர். அந்த ஆலோசனைகள் இன்னும் பூர்த்தியானதாகத்தெரியவில்லை. சென்னை மாகாணத்தில் சுமார் ஆயிரம் மைல்களுக்குமேல் கடல் எல்லை இருப்பது யாவரும் அறிந்த விஷயம். கடலில் மீன்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டதாக விளங்கவில்லை. மீன்களைப்பிடித்துப் பத்திரப்படுத்தி அவைகளைச் சேமித்து விற்பனை செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் மும்

முரமாக வேலை செய்தால் சுமார் ஒரு வருஷத்துக்குள் பலன் கிடைக்கக்கூடியவை. மீன் இலாகா அதிகாரிகள் பிரத்யேகமாக வேலைசெய்துவந்தும் பலனில்லாமலிருப்பது யாருடைய குற்றம்? காய்கறி வகையராக்களைப்பற்றித்தான் கவனியுங்கள். இந்த வஸ்துக்களின் விலைவாசிகள் அபரிமிதமாகப் பெருகிவிட்டன. காரணமென்ன? நெருக்கடிதான்! காய்கறிகளின் விளைவை அதிகரிப்பது நல்ல பிரயத்தனத்துடன் செய்தால், ஆறு அல்லது எட்டு மாதங்களில் பலன் கைகூடும். வெட்டி நிலத்துக்கோ நமது மாகாணத்தில் குறைவு கிடையாது. சென்ற இரண்டு வருஷங்களில் புதிய கேணிகள் ஆயிரக்கணக்காக வெட்டப்பட்டன என்று மாத்திரம் அறிகிறோம். காய்கறிகள் விளைவில் பெருக்கு ஏற்பட்டதாக மாத்திரம் காணவில்லை.

சுமார் ஒரு மாதத்துக்குமுன் வர்தா கல்வி இலாகா அதிகாரியான ஜகதீசன் குமரப்பா என்பவர் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்தவுடன் சொன்னார்:

“இங்கிலாந்தில் சில வருஷங்களுக்கு முன் ஒவ்வொரு வீட்டின் கொல்லைப் புறத்திலும் குப்பையும் கூளமுமே அதிகமாயிருந்துவரும். இப்பொழுது அப்படியில்லை. எல்லாம் மாறிவிட்டன. காலி இடம் என்பதே கிடையாது. புஷ்பச் செடிகள் எல்லாவற்றையுங்கூட எடுத்து எறிந்துவிட்டு, சிறியதோ, பெரியதோ, எல்லா வீட்டுக் கொல்லைப் புறங்களிலும் பச்சு பச்சென்று காய்கறிகளைப் பயிராக்கி விட்டனர். காபேஜ், காலிப்ளவர், டுமாடோ, ராடிஷ், பீட்ரூட், லெட்டிஸ், பட்டாணி, பீன்ஸ், உருளைக் கிழங்கு இத்தகைய காய்வர்க்கங்கள் பெரிய பட்டணங்கள் முதல் சிறிய கிராமங்கள்வரை ஏராளமாகப் பயிராக்கியிருக்கின்றனர். வெள்ளையர்களுக்குப் புஷ்பப் பயிற்சியில் ஏராளமான அனுதாபம் இருந்தபோதிலும் தற்சமயம் உள்ள நெருக்கடியில் காய்கறி விளைவை அதிகரிப்பதே தர்மம் என்பது கொள்கையாயிருக்கிறது. தேசம் முழுதிலும் இந்தக் கொள்கையையே ஒவ்வொருவரும் அங்கீகரித்திருப்பதால், உணவு நெருக்கடியைச் சிறிதுவரை அவர்கள் தீர்த்துக்கொள்கிறார்கள்.

மேற்கூறியதைக் கவனித்து நமது மாகாணத்தில் நாமென்ன செய்கிறோம் என்பதைப்பற்றி ஆலோசியுங்கள்! சென்னைப் பட்டணத்தில், மவுண்டுரோட்டில், ஸெயின்ட் ஜார்ஜ் கதீட்ரல் என்பதற்கடுத்ததாக மதராஸ் ஹார்டிகல்சரல் ஸொஸைடி என்று ஒரு சங்கமிருக்கிறது. சில வாரங்களுக்குமுன் அங்கு வருஷந்தோறும் நடைபெறும் ஒரு புஷ்பக்காட்சி நடைபெற்றது. அதற்கு ஸ்ரீமான். பக்தவத்ஸலம் என்கிற மந்திரியானவர் சபா நாயகராக இருந்தார். அன்று அவர் பேசியபோது, உணவு நெருக்கடியை அனுசரித்துத் தோட்டங்களை என்னவிதமாக உபயோகிக்க வேண்டுமென்று புத்திமதி சொல்லாமல் புஷ்பங்களும், செடிகளும், கொடிகளும் கண்களுக்கு மிகவும் ரம்யமானவையென்றும், பட்டணத்தில் எங்கே பார்த்தாலும் ஹார்டி கல்சர் விருத்தியாக வேண்டும் என்றும் சொன்னதாகப் பத்திரிகையிலிருந்து தெரிகிறது. இங்கிலாந்தில் உள்ள பொதுமக்களின் நடவடிக்கையைப் பற்றி ஜகதீசன் குமரப்பா எடுத்துரைத்தும், சென்னை மாகாணத்தில் அவர்களைப்போல் நாமும் செய்வோமே என்கிற ஊக்கம் நமக்கு வரவில்லை. சுதந்திரம் வந்து என்ன பிரயோஜனம் என்கிறான் அம்மாஞ்சி.

பாலுக்கும் கடலைப் பருப்புக்கும் உளுத்தம் பருப்புக்கும் சர்க்கரைக்கும் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்கு முக்கிய காரணமென்ன என்பீரோ? ஏராளமாக எங்கே பார்த்தாலும் காபி ஹோட்டல்கள் அதிகரித்திருப்பதினால் தான் என்கிறான் அம்மாஞ்சி. சென்னைப் பட்டணத்தில் காலை வேளையில் ஸென்ட்ரல் ஸ்டேஷன் அல்லது மாம்பலம் ஸ்டேஷன் இவ்விரண்டுக்கும் போய்ப் பார்த்தால் ஆயிரக்கணக்கான குடங்களில் பாலை எடுத்துக் கொண்டுபோய் ஹோட்டல்களுக்குக் கொடுக்கும் காட்சியைக் கண் குளிரவோ கண் எரியவோ பார்க்கலாம்! ஹோட்டல்களுக்குப் போய்ச் சாப்பிட்டு வருபவர்கள் எத்தகைய ரீதியானவர்கள் என்பதைப் பற்றிச் சற்று ஆலோசித்தால் காப்பி ஹோட்டல்கள் அதிகரித்ததால் நெருக்கடி யாரைப் பாதிக்கிறதென்பது விளங்கும். காப்பி ஹோட்டல்கள் ஒன்

றுக்காவது பால், சர்க்கரை, பருப்பு, மாவு முதலிய வஸ்துக்களுக்குப் பங்கீட்டுக் கஷ்டம் உள்ளதாகத் தெரியவில்லை. வறுமையாலும் நெருக்கடியாலும் பீடிக்கப்பட்ட கூலியாட்கள், தொழிலாளர்கள், குமாஸ்தாக்கள் முதலியவர்களுக்குக் காப்பி ஹோட்டல்களுக்குப் போய், சிற்றுண்டி புசிக்க அவகாச மில்லாததால் அவர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும், குழந்தைகளும் எவ்வளவு சஞ்சலப்படுகிறார்களென்பதைப் பற்றி யார் கவனிக்கிறார்கள்? ஹோட்டல்கள் தத்தம் கட்டடங்களிலேயே வியாபாரம் செய்வதல்லாமல், மோட்டார் வான்களிலும், 'ஐஸ்க்ரீமென்ன, பஜ்ஜி, போண்டா, பகோடா, காராபூந்தி யென்ன, Fruit Salad என்ன, இவைகளை எடுத்துப்போய் ஸமுத்திரக் கரை ஓரத்தில் Queen Mary's College அருகில் அங்கு வரும் மாணவர்களுக்கும் மோட்டார்காரில் வந்திறங்கும் ஷோக் பேர்வழிகளுக்கும் ஸப்ளை செய்வதைப் பார்த்திருக்கிறீர்களா? பங்கீட்டு நெருக்கடியில் இது எவ்வளவு அஸந்தர்ப்பமான காரியம் என்பது ஒருவருக்கும் தோன்றவில்லையே! ஆகவே நமது மாகாணத்தில் உணவு நெருக்கடி யென்பது ஏராளமாகப் பணம் வைத்திருப்பவர்களுக்கு லவலேசம் கிடையாது. எந்த விதமாகவோ அவர்கள் சுகமாகச் சாப்பிடுவதற்கு அவகாசமுண்டு. சொல்ப சம்பளக்காரர்களுக்கும் வெளியே சுற்றித்திரிய ஸௌகரியமில்லாதவர்களுக்கும் கிழங்கட்டைகளுக்கும் குழந்தைகளுக்குமே நெருக்கடி பீடிக்கிறது. நமக்குச் சுதந்திரம் வந்தபின்னும் இப்படிப்பட்ட அநியாயங்கள் இருக்கலாமா என்கிறான் அம்மாஞ்சி. அவன் சொல்வது என்ன? பங்கீட்டுக் கட்டுப்பாடுகள் ஹோட்டல்களிலும் இருக்க வேண்டும்; மாவு பால் தவிர கறந்த பால் அவர்கள் உபயோகிக்கக் கூடாது. ஹோட்டல்களுக்கு ஏன் சர்க்கரை கொடுக்கவேண்டும்? அவர்களும் தான் வெல்லத்தை உபயோகிக்கட்டுமே? ஹோட்டல்களில் பலகாரங்கள் இரண்டு அல்லது மூன்று ரகங்கள் மாத்திரம் அல்லவோ இருக்கவேண்டும். மேல் நாடுகளில் விதித்திருக்கும் கட்டுப்பாடுகளைப்போல் நாமும் ஏன் விதிக்கலாகாது? அப்படிச் செய்தாலல்லவோ நெருக்கடியிலும் தர்மமிருக்கும்.

துணி நெருக்கடியைப் பற்றி ஜகதீசன் குமரப்பா சொல்லுகிறார் :—

"இங்கிலாந்தில் அநேக வெள்ளையர்கள் காந்திஜி அணிந்திருக்கும் உடையைவிடக் குறைவாகவே அணிந்திருக்கிறார்கள். பலர் அரை கால்சட்டையை மாத்திரமே உடுக்கிறார்கள். பெரும்பாலர் ஒரு கால் சட்டையும் ஒரு மேல் சட்டையும் மாத்திரமே இடுகிறார்கள். நல்ல உடைகள் அணிந்திருக்கும் ஜனங்கள் வெகு குறைவு. Fashion என்பதே போய்விட்டது." சில தினங்களுக்கு முன் Sir Stafford Cripps என்பவர் ஸ்திரீகளுடைய உடையைப்பற்றித் தம்முடைய அபிப்பிராயத்தை வெளியிட்டார். அதாவது ஸ்திரீகள் அணியும் பாவாடைகள் முழங்கால்வரை யிருந்தால் போதுமென்றும், துணிப் பஞ்சத்தில் அதற்கு அதிகமாயிருந்தால் நெருக்கடி அதிகரிக்கும் என்றும் சொன்னார். இந்த அபிப்பிராயத்தை Dress-makers எல்லோரும் அங்கீகரித்ததாகவும் பொது மக்கள் அனைவரும் ஆமோதிப்பதாகவும் பிரசுரிக்கப்பட்டு இருந்தது. சுதந்திரத்தை முற்றிலும் பல நூற்றாண்டுகளாக அனுபவித்து இருக்கும் ஆங்கிலர்களுக்கு இத்தகைய கட்டுப்பாடுகள் சகஜமாக இருக்கின்றனவல்லவா? நமது மாகாணத்தில் இதுபோன்ற கட்டுப்பாடுகளை மந்திரி சபையார் விதிக்கட்டுமே பார்ப்போம். அவர்களை ஒரே நிமிஷத்தில் நமது ஜனங்கள் எல்லோரும்சேர்ந்து தவிடுபொடியாக்கிவிட மாட்டார்களா, என்கிறான் அம்மாஞ்சி.

வாஸ்தவமாகவே, யோசியுங்கள். சென்னை மாகாணத்தில் ஆண் மக்கள் ஒவ்வொருவருக்கும் பெண் மக்கள் ஒவ்வொருவருக்கும் சௌகரியமாக உடுத்திக்கொள்ளவும், நாகரிகத்துடன் காணப்படவும் எவ்வளவு துணி வேண்டும்? ஆணுக்கு ஒரு நாலரை முழம் வேஷ்டியும் ஒரு சட்டையும் அல்லவா? மலையாளத்தில் ஆண் மக்கள் எல்லோரும் இது போதுமென்பார்கள். தமிழ் நாட்டிலும் அப்பிராம்மணரில் பெரும்பாலர் இதை அங்கீகரிப்பார்கள். ஆனால், அந்தணர்களில் வெகுபேர் பஞ்ச கச்சம் மூலைகச்சம் இவைகளுக்கு ஒன்பது முழமும் பத்து முழமும் வேண்டுமென்பார்கள். ஆந்திர

தேசத்திலும் கர்னாடக தேசத்திலும் ஏழு அல்லது எட்டு முழம் அவசியமென்பார்கள். இந்த வகுப்பினரில் ஆங்கில ஸம்பிரதாயத்தைத் தழுவின பலர், (கால் சட்டை, ஷர்ட் கோட், ஹாட், பூட் ஸம்பரதாயத்தைக் கைக் கொண்டவர்கள்) கட்டுப்பாடே கூடாது என்பார்கள். ஆனால் சமயோசிதமாக எல்லாரும் சேர்ந்து "மகாத்மா காந்திக்கி ஜேய்" என்று மாத்திரம் கரகோஷம் செய்வார்கள். துணிகிடைப்பது வெகு கஷ்டமாயிருப்பதாலும் வெள்ளையர்கள் நம் நாட்டை விட்டுப் போனபிறகும் அவர்களுடைய நடை உடை, பாவனையை நாம் எதற்காகத் தழுவ வேண்டும் என்றும் நமது மாகாணத்திலுள்ள சீதோஷ்ண நிலைமையை உத்தேசித்தும் சிக்கனமாகவும் சுலபமாகவும் சுதந்திரம் வந்த பின்னாவது உடையை மாற்றிக்கொள்ளலாமே என்கிற தத்துவத்தை ஒருவரும் ஆமோதிக்கமாட்டார்கள்!.

இது இப்படியிருக்க, பெண் மக்களின் விஷயத்தைக் கவனிப்போம். ஐந்து அல்லது ஆறு கஜத்தில் புடவைகளிருந்தால் சாதாரணமாக உடுக்கலாமல்லவா? அதவா சிறிது பாரி சரீரம் உள்ளவர்களுக்கு ஏழு கஜம் தாராளமாகப் போதுமே? ஆனால் அநேகர் ஒன்பதரை அல்லது பத்தரை கஜம் வரையில் உள்ள புடவை கட்டி வருகிறார்கள். Sir Stafford Cripps போலுள்ள ஒருவர் அவர்களிடம் போய் தம்முடைய சிக்கனமான நிபந்தனையை எடுத்துரைத்தால், பத்துப் பெண்மக்களாகச்சேர்ந்து அவருடைய கண்களைப் பிடுங்கிவிடுவார்கள்! முக்கியமாக நாம் கவனிக்கவேண்டியது என்னவென்றால் நமது நாட்டில் ஜனங்களுடைய மனப்போக்கு ஜனநாயக ஸமூகத்தின் கட்டுப்பாடுகளுக்குப் பிரதிகூலமாக இருக்குமே தவிர அனுகூலமாயிருக்காது, சுதந்திரம் வந்தபின் அதனால் விளையும் ஸௌகரியங்களை யெல்


# இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்.

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ... ரூ. 10,00,000
ரிஸர்வ் பண்டு ... ரூ. 10,00,000
மொத்த ஆஸ்தி ... ரூ. 6 கோடிக்குமேல்

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைனபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பெரியமேட், திருவல்லிக்கேணி

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | திருநெல்வேலி ஜங்ஷன் | ராமநாதபுரம் |
| அனகாபள்ளி | சாலூர் | திருச்சிராப்பள்ளி | மதுரை |
| அம்பாசமுத்திரம் | சிப்பூருபள்ளி (Vizag) | திருவாரூர் | மாருடேரு |
| ஆம்பூர் | சிதம்பரம் | தூத்துக்குடி | விழுப்புரம் |
| ஈரோடு | சித்தூர் (கொச்சி) | தென்காசி | விருதுநகர் |
| கடலூர் N. T. | சீயாழி | நாகப்பட்டணம் | விஜயநகரம் |
| கடலூர் O. T. | தஞ்சாவூர் | பரமக்குடி | வேலூர் |
| காஞ்சீவரம் | தாடபள்ளிக்கூடம் | பாலக்காடு | வேதாரண்யம் |
| காரைக்குடி | திலாரு R. S. | பார்வதிபுரம் | ஜெய்பூர் |
| | திருநெல்வேலி டவுன் | புதுக்கோட்டை | (ஒரிஸ்ஸா) |

பிக்ஸட் டிபாஸிட்கள்:- ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... $2\frac{3}{4}\%$ விதம்
இரண்டு „ „ ... ... 3% „
சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/வாங்கக்கூடியது ரூ. 10,000/வரை வட்டி $2\frac{1}{2}\%$ „
கரண்ட் கணக்கு .. .. .. .. $\frac{1}{2}\%$ „

தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்,

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

லாம் நாம் அனுபவிக்க ஆவலுள்ளவர்களாயிருக்கிறோமே தவிர கஷ்ட நிஷ்டூரங்களை ஸமப்படுத்தி அதற்காக வேண்டி வரும் நிபந்தனைகளுக்கு உட்படுவோமே என்கிற தத்துவம் கிடையாது. அப்பொழுதுதான் சாஸ்திரம் என்றும், ஜாதி என்றும், ஆசாரம் என்றும், அனுஷ்டானம் என்றும் பிரமாதமாகப் பேசுவோம். சாத்திரக்குப்பையை ஒழிப்போமே என்று கோபால கிருஷ்ண பாரதியார் சொன்னாரல்லவா? ஆஹா! அவர் என்ன மஹான் என்று அவரைத்தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு குதிப்போம். ஆனால் அவர் இகழ்ந்து பேசின அந்தக் குப்பையையும் தலையில் வைத்துக் கட்டிக்கொண்டிருப்போம். ஜாதி மதங்களைப் பாரோம் என்று சுப்ரமண்ய பாரதியார் பாடினாரல்லவா? அவரைத் தமிழ் நாட்டுத் திலகம் என்று புகழுவோம். புகழ்ந்துகொண்டே ஜாதி மத பேதத்திலுள்ள கொடுமைகள் எல்லாவற்றையும் கட்டி அணைத்துக் கொண்டிருப்போம். சுதந்திரம் வந்தும் நமக்கு ஒருவிதமான மேன்மையும் ஏற்படாது என்கிறான் அம்மாஞ்சி. ஒற்றுமையை ஏற்படுத்தாத சுதந்திரம் என்ன சுதந்திரம்? வறுமையாலுள்ள கொடுமைகளை நிவர்த்தி செய்யாத சுதந்திரம் என்ன சுதந்திரம்? பணப் பேய் ஆடும் ஆட்டத்தை நிறுத்தாத சுதந்திரம் என்ன சுதந்திரம்? பிறவியிலேயே மேன்மையும் தாழ்மையும் ஏற்பட்டு, அதை நிவர்த்தி செய்ய மார்க்கம் இல்லாமல் ஆசாரமும் அனுஷ்டானமும் கைப்பற்றிய மக்களின் சுதந்திரம் என்ன சுதந்திரம்?

---


வேலை செய்யும்
ஒவ்வொரு மணி
நேரத்துக்கும்

**லக்ஷ்மி**

தன் பாலிஸிதாரர்களுக்கும், நலனடைவோருக்கும் 1946-ல் செலுத்தியது

**ரூ. 1000-க்கு அதிகம்**

**லக்ஷ்மி பாலிஸிகள்**

என்றுலே பாலிஸித் தொகையை உடனுக்குடன் பைசல் செய்வது

**லக்ஷ்மி இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

தலைமை ஆபீஸ்: புது டெல்ஹி

**தேவை**

ஆர்கனைஸர்கள்: இன்ஸ்பெக்டர்கள், அனுபவம், நம்பிக்கை, செல்வாக்கு திறமை உள்ளவர்கள் பிரதிநிதிகள் இல்லாத இடங்களில் தக்க சம்பளத்திலே உழைக்க மேற்கண்டவருக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

பிராஞ்சு மேனேஜர்:

**லக்ஷ்மி இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட்,**

தபால் பெட்டி 1244 :: மதராஸ்.

# எங்குமில்லை

'வங்கத்தமிழன்'

எங்குமில்லை! எங்குமில்லை! எங்குமில்லை உலகிலே!
எங்கள் மகான் காந்திக்கிணை எவரும் எங்குமில்லையே!

நாடுவோர்க்கு நன்மை செய்யும்
நல்ல தந்தையாகவும்
தேடுவோர்க்குத் தேவையான
தெம்பளிப்ப ராகவும்
ஏங்குவோர்க் கிதங்கள் சொல்லும்
ஏற்ற நண்பராகவும்
துலங்கும் எங்கள் காந்தியைப்போல்
எங்குமில்லை புவியிலே! (எங்கு)

ஐரோப்பியர் அநேகருக்கு
அரிய போதம் அளிப்பராம்
ஆங்கிலச் சர்க்கார்க்குமவர்
அருமமைச்ச ராவராம்.
அரிசனங்கள் அவதி நீக்கும்
அன்புத் தந்தை யாவராம்
சரிசமத்தொ டெவரும் வாழச்
செய்யும் சமுகத் தலைவராம்! (எங்கு)

புத்துணர்ச்சி, புதிய செயல்கள்
புரிய ஊக்கும் புனிதராம்
எத்துணை இடர்கள் எதிர்க்கின்
ஏற்கும் சாந்த ரூபியாம்!
அவனி மாந்த ருளத்தில் அன்பு
விதையை நன்கு நட்டவர்!
அற்புத மிளிர் சக்தி வாய்ந்த
அரசியல் நிபுணத்துவர்! (எங்கு)

புண்ணியனைப் பார்க்கும்போது
புனித காந்தம் இழுக்குது!
பொக்கை வாய்ச் சிரிப்பிலேயோர்
பொற்கவிதை பிறக்குது!
காந்தியத்தைக் கரித்தொதுக்கும்
கசடர்கட்குச் சொல்லுவேன்
சாந்தி யிருக்குததிலே என்று
சத்தியம் நான் செய்யுவேன். (எங்கு)

# மருந்து

ரா. ஸ்ரீ. தேசிகன்

வெய்யோனின் மறைகின்ற சுடர் வெள்ளத்தில் இமயமலைச் சிகரங்கள் ஓர் அமானுஷ்யமான சோபையை அடைந்தன. அந்தி அழகின் மந்திரத்திற் கட்டுண்டு உலகச் சிருஷ்டி அப்படியே மயங்கிக் கிடந்தது. அந்தத் தெய்விகப் பொழுதில் ஒரு புத்தகமுங் கையுமாய் என் குருநாதரைப் பார்க்க நான் போயிருந்தேன். அவருடைய ஆசிரமம் ஒரு குன்றின்மீது இருக்கிறது. அந்த ஆசிரமத்திற்குப் பக்கத்தில் ஓர் ஆசனம் கல்லால் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிற் சாய்ந்துகொண்டு கீழே ஓடுகிற கங்கையைப் பார்த்தவண்ணமாய் அவர் இருந்தார்.

என் காலடியரவம் அவர் செவியில் விழவே உதட்டில் புன்னகை அரும்ப முகத்தில் புகலரும் சாந்தி ததும்ப என்னை அவர் நோக்கினார். அவருக்கு வந்தனங்கள் கூறி அவர் அருகில் அமர்ந்தேன்.

"கையில் என்ன புத்தகம்?" என்று வினவினார்.

"ஒரு புத்தகத்தின் விமர்சனமென்றேன். சில வரிகளைப் படிக்கும்படி சொன்னார். நான் படிக்கத் தொடங்கினேன்.

"கடலுக்குக் கடலே சமானம்; ஆகாயத்திற்கு ஆகாயமே சமானம்; கடவுளுக்குக் கடவுளே சமானம்; இந்த நூலுக்கு இந்த நூலே சமானம்"

"போதும் போதும், நிறுத்துங்கள். பொய்க்குப் பொய்யே சமானம்; அறிவில்லாதவர்களுக்கு அறிவில்லாதவர்களே சமானம்" என்ற சொற்கள் அவர் உதடுகளில் அப்படியே நடுங்கி ஓய்ந்தன.

"ஆர்வத்தில் புகழ்ந்திருக்கிறார். அதிற் குற்றமுண்டோ" என்றேன்.

"குணத்தை அதிகப்படுத்திச் சொன்னாலும், அது அநாகரிகந்தான்" என்றார்.

பேசாமலிருப்பதே நாகரிகத்தின் சிகரமாகும். மௌனம் என்றால் வாய்பேசாது, புத்தகங்களை எழுதிக் குப்பை கூளங்களாக் குவிப்பதன்று; வாழ்க்கையில் மிதந்தான் அழகு".

"நம்மிடத்தில் மிதமில்லையா?"

"மிதம் இருக்கிறது; கீதைப் புத்தகத்தில் தானிருக்கிறது, ஆனால் இலக்கியத்தில் இல்லை; உண்மையில் இல்லை; தியாகத்தில் இல்லை; அஹிம்சைத் தத்துவத்தில் இல்லை; ஒன்றிலும் மிதமில்லை. வைராக்கியத்திலே கூட மிதம் வேண்டும். விருப்பு வெறுப்பு அற்ற நிலைதான் உயர்ந்த நிலை" என்றார்.

"வைராக்கியத்திலேகூடவா மிதம் வேண்டும்"

"ஆமாம்; பெண் வேண்டாம் என்று பெண்ணைத் தூற்றுவார்கள்; செல்வம் வேண்டாம் என்று செல்வத்தைக் கண்டு நடுங்குவார்கள். ஒன்றையுங்கண்டு அஞ்சாத நிலைவேண்டும். மரணத்தை நினைத்துக் காயமது பொய்யடா காற்றடைத்த பையடா என்று வாழ்வை வெறுப்பார்கள். வாழ்வின் இன்சுவையை மாந்தக் கருதி மரணத்தைக் கண்டு அஞ்சுவார்கள். வாழ்க்கையையும் மரணத்தையும் ஒன்று போலக் கருதவேண்டும். கண்ணனுக்கு மேல் அஹிம்சைத் தத்துவத்தில் ஒருவர் போயிருக்கிறாராம். அவருடைய அஹிம்சை ஹிம்சையாய் முடியும் என்ற விஷயம் ஞாபகமிருக்கவேண்டும். உலகத்தை அழிக்கக் கிளம்பியிருக்கிறேன் என்ற கண்ணனுடைய பேரிடி முழக்கமும் அன்பிலேதான் எழுந்தது என்றதை மறந்து பேசுகிறவர்களைப்பற்றி நாம் என்ன சொல்லுவது."

"அழிப்பது அன்பாகுமா?"

"மருத்துவன் வாளால் அறுத்துச் சுடுகின்றானே அதை என்ன நினைக்கின்றீர்கள்."

"வியாதி நீங்க, மனிதன் இன்புற ஒரு சிறிய ஆப்பிரேஷன் செய்கிறான் இம்மருத்துவன்" என்றேன்.

"இந்த மருத்துவனைக்காட்டிலும் அந்த மருத்துவன் பெரியவன்" என்றார்.

"எந்த மருத்துவன்?"

"உலகங்களை அந்தரத்தில் சாட்டையில்லாப் பம்பரங்கள்போல ஆட்டிவைக்கின்றானே ஒருவன்".

"கடவுளைச் சொல்லுகின்றீர்களா?".

"ஆமாம்" என்று புன்னகைகொண்டார். "அவன் பெரிய ஆப்பிரேஷன் புரிகிறான்"

"அது எது?"

"மரணந்தான்"

"மரணம் ஒரு மருந்தாகுமா?"

"ஆமாம், அது ஒரு மா மா மருந்து; அது ஓர் அமிர்தம். உளுத்துப்போன உடலை அழித்துப் புதிய உடலைத் தருகிறது அம் மருந்து. அம்மருந்தை அளிக்கிற அந்தத் தெய்வத்திற்குக் கருணை இல்லையாம். அக் கண்ணன் செய்த உபதேசத்திற்குமேல் ஒருவர் போயிருக்கிறாராம். அந்த அவதாரத்திற்குமேல் இந்த அவதாரம் புனிதமான அவதாரமாம்."

"நம்முடைய இலக்கிய விமர்சனத்தைப் பார்த்தோம்; இலக்கியத்தைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்" என்றேன்.

"எல்லாம் ஒரு குலைக்காய்தான். ஒரு குட்டையில் ஊறின மட்டைதான். சிதக்களபச் செழுஞ் சேற்றில் யானைக்கால் வழுக்குமென்று கேட்டதில்லையா? தேரின் மீது கட்டியகொடிகள் சந்திரனைத் தேய்த்து விடுகிறதாம். இத்தகைய வர்ணனைகளைப்புகழ்கின்ற ரசிக சிகாமணிகள் இருக்கிறார்கள், அவர்கள் அவைகளில் களிக்கட்டும். நமக்கு மிதத்தில்தான் உண்மையான இன்பம் இருக்கமுடியும்."

"உண்மையிலும் மிதம்வேண்டுமா?"

"ஆமாம்: உண்மை எது என்று நிச்சயமாய்ச் சொல்லமுடியுமா?"

"சொல்லமுடியாது,என்று நினைக்கிறேன்"

"உண்மையைச் சொன்னால் விபரீதமான சம்பவங்கள் நிகழக்கூடிய நிலைகள் வந்திருக்கின்றனவா? இல்லையா?"

"வந்திருக்கின்றன. ஆனால் எது உண்மை?"

"ஹிதத்தைச்செய்கின்ற யாவும் உண்மைகள்தான்" என்றார்.

"உண்மையைச் சாதிக்க வந்த அரிச்சந்திரன் கதை எதைப்போலிருக்கிறது?"

"பொய் போலத் தோன்றுகிறது"

"இதைப்பற்றி யோசித்தீர்களா?

அதிகமாய் உண்மையைப்பற்றிப் பேசினால் இப்படித்தான் முடியும். கற்பு கற்பு என்று ஏன் அடிக்கடி முழங்கவேண்டும். கற்பு கற்பு என்று அதிகமாய்ப் பேசினால் அதைத்தவிர வேறில்லை என்று போய்விடும். உள்ளன்பிருந்தால் கற்புத் தானே பிறக்கின்றது"

"வள்ளுவர் ஒவ்வொரு குணத்தைப் பேசுகிறபொழுது இதைத்தவிர வேறில்லை என்கிறாரே, நியாயமா?"

"நியாயமில்லைதான்; ஒவ்வொரு குணத்திற்கும் வாழ்க்கையில் இடமிருக்கிறது. அந்த அந்த இடத்தில் குணங்கள் அமைந்தால் குற்றமில்லை. ஒன்றையும் ஆகாயத்தளவு தூக்கிவைத்துப் பேசுவதில் குணந் தோன்றாது. அறிவுமட்டும் போதாது. அதர்மத்தை அழிக்க க்ஷத்திரிய தர்மமும் வேண்டியிருக்கிறது. பண்டங்கள் இல்லாமற்போனால் உலகம் நிலைபெற்று நிற்க முடியாது. வைசிய உணர்ச்சி நம்மிடத்தில் எழ வேண்டும். பண்டங்களோடு நின்றால் போதுமா? அகில ஜனத் தொண்டர்களாக ளாகவும் நாமிருக்கவேண்டும். தனிச்சாதிகளை நான் குறிக்கவில்லை. எல்லா உணர்ச்சிகளும் நம்மிடத்தில் இருக்கின்றன. இவைகள் ஒன்றுக்கொன்று முரண்படாதபடி மிதத்தில் நின்றேமானால் சமுதாயச் சக்கரங்கள் நல்லபாதைகளில் ஓடும். வேதாந்தத்திலும் இதே குழப்பந்தான்."

"என்ன குழப்பம்?"

"பெண்களைத் திட்டுகிற வேதாந்திகள் தங்கள் தாயாரை மறந்துவிடுகின்றனர்."

"பால் உணர்ச்சி (Sex) மோட்சப்பாதையில் தடையை யெழுப்பாதோ?" என்றேன்.

"பால் உணர்ச்சி தீராத ஓர் வியாதியாக மாறக்கூடாது. அதை அழிக்கமுடியாது."

"பின் என்ன செய்யலாம்?"

"ஆழ்வார்கள் என்ன செய்தார்கள்?

"ஆண்டவன்மீது அதைச் செலுத்தினார்கள்.

"அவ்வுணர்ச்சியை வேறு வாய்க்காலில் திரப்பவேண்டும்: அதனில் தான் மனிதனுடைய சாமர்த்தியம் இருக்கிறது."

உங்கள் தினசரி உபயோகத்திற்கு




ணிமலைத் தென்றல் போன்று குளிர்ச்சி வாய்ந்ததும், அரிய மலர்களின் நறுமணம் போன்று களைப் பாற்றுவதுமான **டாடா ஓடிகொலோன்** உங்கள் தினசரி உபயோகத்திற்காயினும் சரி, ஜுரத்தால் வேகும் நெற்றித் தடத்தைக் குளிரப் பண்ணுவதற்காயினும் சரி, உகந்ததுதான்.

எப்பொழுதும் ஒரு பாட்டில் வீட்டில் கையோடு காவலாய் வைத்திருங்கள்.

டாம்கோ விற்பனை இலாகா 19A, வாணியர் தெரு, தபால் பெட்டி நெ. 31, மதராஸ்.

"வேதாந்தத்தில் குழப்பமென்றீர்களே அது என்ன?" என்றேன்.

"ஒருவர் ஞானம் போதுமென்றார், மற்றொருவர் பக்தியினால் சாதிக்கலாமென்றார். இன்னுமொருவர் கர்மத்தின் மூலம் அடையலாமென்றார்."

"இவைகளைப் பிரிக்க முடியுமோ?"

"பிரிக்கமுடியாதுதான். ஞானம் வந்தால் பக்தி பிறக்கும். பக்தி பிறந்தால் மக்களிடத்தில்—ஏன்—எல்லாப்பிராணிகளிடத்தில் அன்பு பிறக்கும். அன்பு காரியங்களில் பரிணமிக்கும். ஆத்மா கொல்லுகிறதில்லை: கொல்லப்படுகிறதுமில்லை என்று மாந்தர்களை வெட்டி வீழ்த்தினோமானால் அதைவிடத் துக்ககரமான நிலையில்லை. எல்லாம் சரீரத்தின் சேஷ்டைகள்தாம். ஆத்மா சாட்சி மாத்திரமாயிருக்கிறது என்ற உபதேசத்தை வைத்துக்கொண்டு இந்திரிய சுகங்களில் இறங்கினால், அதைவிட நீசமான தொழிலுண்டோ. அரைகுறை வேதாந்தம் இந்த நிலைக்கு நம்மை அழைத்துச் சென்றுவிடும்."

"ஆமாம் நீங்கள் கூறுவது உண்மைதான்."

"உலகம் மாயை என்றால் உலகத்தில் வெறுப்பு ஏற்படும், உலகத்தைத் தவிர வேறில்லை என்றாலும் பொருத்தமில்லை. சரீரமில்லாமல் ஆத்மா இல்லை. ஆத்மா இல்லாமல் சரீரமில்லை. உயிரும் உடலும் போல உள்ள நிலையை உணரவேண்டும்."

"வைணவ சித்தாந்தமாயிருக்கிறதே."

"நான் கண்ட உண்மையைச் சொல்லுகிறேன். உண்மை வைணவமாயிருந்தால் வைணவமென்று சொல்லுவோமே; அதில் இழுக்குண்டோ!"

"தியாகத்தைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?"

"அதிலும் மிதம்வேண்டும், தம் மனைவியைக் கொடுத்த பக்தர்களுண்டு என்று சொல்லுவார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. தான் விற்கப்பட உடன்படுவாளா? யாரை யார் தியாகஞ் செய்கிறது?" அவள் ஒரு பெட்டியா;?—மாடா—ஒரு காணி நிலமா? ஒன்றும் விளங்கவில்லை. அவள் நம்மைப்போல உயர்ந்த நிலை அடையக்கூடிய ஓர் ஆத்மா ஆயிற்றே. தன்னையே தியாகஞ்செய்யக்கூட முடியாது. தமக்கொன்றுமில்லையே என்று ஆழ்வார் அருளிய பாசுரம் நினைவுக்கு வருகிறதோ. பாடிக் கேட்டு நிரம்ப நாளாகிவிட்டது. பாடுங்கள்" என்றார்.

"எனதாவி யுள்கலந்த
பெருநல்லுத விக்கைம்மா
றெனதாவி தந்தொழிந்தே
னினிமீள்வ தென்பதுண்டே
யெனதாவி யாவியுநீ
பொழிலேழு முண்டவெந்தாய்
எனதாவி யார்யானார்
தந்தநீகொண் டாக்கினையே"

என்று பண்ணிசைத்துப் பாடினேன். பாட்டெழுந்து சூழ்நிலை அமைதியில் கரைந்து விட்டது.

"பார்த்தீர்களா? நம் ஆத்மாவே நமக்குச் சொந்தமில்லையே. நாம் யாரைத் தியாகஞ் செய்யமுடியும். பிள்ளைக் கறி கேட்ட கடவுளைப்பற்றிக் கேட்டிருக்கிறீர்களே. இதுதான் தியாகத்தின் எல்லையாம்.

"அப்பிள்ளை அத்தியாகத்திற்கு உடன்பட்டிருக்குமா? பாருங்கள்."

"ஒருபொழுதும் உடன்பட்டிராது. நாம் உடன்படுவோமா?"

"இவ்விதமே கதைகளை எழுதினால் உண்மைக்கு எத்தனை முரண்பாடாகும் என்ற விஷயத்தை நான் சொல்லவேண்டியதில்லை. பகவான் பக்தனுக்கு எல்லாம் செய்வாராம். அத்தனை சுலபராம். பெண்தேடித் தருவராம். பாங்கில் உள்ள பணத்தைக் கொள்ளையடித்துக் கோயில் திருப்பணி செய்த பக்தனுக்குப் பணமாய்ச் சொரிவராம். அவருடைய சௌலப்பியத்தைக் காட்ட இப்படியா கதைகள் நெய்கிறது" என்று என்னை நோக்கினார் என் குருநாதர்.

"அஹிம்சைத் தத்துவத்தைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்" என்றேன்.

அதிலும் மிதந்தான் வேண்டுமென்றார். முதலில் சமுதாயத்தில் வாழ முடியாது. போர்க் கருவிகள்மீது எழுப்பப்பட்ட அரசாங்கத்திற்கு ஒரு வரியுஞ் செலுத்தக்கூடாது. செலுத்துவோமானால் அஹிம்சைத் தத்துவத்திற்கு விரோதமாய் நடந்ததாகும். வெண்டை கொத்தவரை முதலியவைகளைச் சாப்பிட முடியாது; அவைகளிலும் உயிர் இருக்கிறது. கிருமிகளினால் எழுகிற வியாதிகளை நீக்கக்கூடாது. கிருமிகள் இறந்துவிடும். உயிர் உயிர்மேல் தான் ஜீவித்து நிற்கிறது. ஆதலால் நம்

முடைய உயிரை மாய்த்துக்கொள்ளாத வரையில் அஹிம்சைத் தத்துவத்தை நிறைவேற்ற முடியாது. அஹிம்சை இல்லாத பொழுதே கிடையாது. நாமிருப்பதே ஒரு பெரும் ஹிம்சைதான்"

"பின் என்ன செய்கிறது என்றேன்."

"வேறு வழியில்லையே என்று அனுதாபத்தோடு அத்தனை ஜீவராசிகளையும் நோக்கவேண்டும்"

"நம்மைத் துன்புறுத்துகிறவர்களை எப்படி நடத்துகிறது"

"அறியாமையால் செய்கிறார்களே என்று இரங்கவேண்டும். அன்புக்கு அன்புகாட்டுவது வாணிகமாகும்."

"மேலும் மேலும் சகிக்காத ஹிம்சையைப் புரிந்தால் என்ன பண்ணுகிறது".

"உபதேசம் செய்து பார்க்கிறது. அதற்கும் அவர்கள் வழிக்கு வராதுபோனால், உலகத்தின் நன்மையின் பொருட்டு, அவர்களுடைய க்ஷேமத்தின் பொருட்டு அவர்களை அழிப்பதே அறமாகும். அந்த அறத்தின் மடியில்தான் அன்பு துயிலும். அன்பைக்காட்டிலும் பேரன்புமயமாயுள்ள அறம் பெரிதன்றோ" என்றார்.

"அதோ தெரிகிறதே ஒரு கோயில் பார்த்தீர்களா?"

"ஆம் தெரிகிறதென்றேன்"

"அது ஒரு காளி கோயில். வருஷந்தோறும் கணக்கிலா ஆடுகளையும் மாடுகளையும் பலிகொடுப்பார்கள். சில சமயங்களில் திசை தப்பின அயலூர் மனிதர்கள் அவ்வூர்க்காரர்களின் கையில் இரவில் சிக்கினால், அவர்களையும் பலிகொடுத்துவிடுவார்கள். இது ஒரு கொடிய வழக்கம் என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. ரத்தம் குளமாய்த் தேங்கிக் கிடக்கும். இதைத் தடுக்க ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது. அது ஒரு கருணைக் கழகம். அதிலுள்ளவர்கள் அதிக அன்புள்ளவர்கள் தாம். வண்டி மாட்டின் கழுத்தில் புண்ணிருக்கிறது. தார்க்குச்சி போட்டாய் என்று ஏழை வண்டிக்காரர்களுக்கு அபராதம் போட்டும் நிதம் ஆட்டு மாமிசம் மாட்டு மாமிசம் இவைகளை இரக்கமின்றி உண்கிற கருணை வள்ளல்கள் இவர் அல்லர். உண்மையிலேயே அஹிம்சா தர்மத்தை உள்ளம், உரை, செயல் இம்மூன்றிலும் காட்ட முயன்றவர்கள் தாம்— அவர்க


அழகிற்கு மூன்று ★★★

ஐடெக்ஸ் (Eyetex) கண் மை,
பிந்தி (Bindi) குங்கும் வாசனைச் சாந்து.
அரவிந்த் டால்கம் (Aravind Talcum) பவுடர்.

இவை மூன்றும் பெண்மணிகளின் அழகுக்கென்றே அரவிந்த் லேபரடரீஸாரால் புராதன சாஸ்திரிய முறைப்படி தயாரிக்கப்பட்டவை. புருஷர்களும் குழந்தைகளும் உபயோகிக்கக் கூடியவை.

"ஐடெக்ஸ்" (Eyetex) கண் மையை தவறாமல் உபயோகித்துவந்தால் உங்கள் அழகைப் பன்மடங்கு அதிகரித்து கண்களின் உஷ்ணத்தைத் தணிப்பதுடன் வசீகரமான பார்வையையும் அளிக்கிறது. "ஐடெக்ஸ்"ஸின் குணத்தைப் பற்றிப் பல டாக்டர்கள் அத்தாக்ஷி செய்துள்ளார்கள்.

"பிந்தி" (Bindi) குங்கும் சாந்து இந்தியாவில் இதுவரை எவராலும் செய்யப்படாத நூதன தினுசுகளான மஜந்தா, ரோஜாசிவப்பு, பச்சை, வயலட் மற்றும் சிவப்பு கறுப்பு ஆகிய ஆறு குங்குமக் கலர்களில் மனதைக் கவரும் வாசனையுடன்கூடியது.

அரவிந்த டால்கம் பவுடர் (Aravind Talcum) குளுகுளுப்பான வாசனையுடன்கூடிய வெள்ளை, இயற்கை ஆகிய இரு வர்ணங்களில் கிடைக்கும். போலிகள் நிறைய வந்துகொண்டிருப்பதால் இவைகள் நற்சாக்ஷிகளும் நன்மதிப்பும் பெற்ற அரவிந்த் லேபரடரீஸாரால் தயாரித்தவைதானா என்று பார்த்துவாங்கவும்.

எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.




Aravind's Beauty Aids

அரவிந்த் லாபரடரீஸ் தயாரிப்பு

விநியோகிப்பவர்கள்:

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்-

திருவல்லிக்கேணி —மதராஸ்-5

ளுக்கே நேர்ந்த நிலையைப்பற்றிச் சொல்லுகிறேன்" கேளுங்கள்.

"காளி அம்மன் திருவிழா ஆரம்பித்துவிட்டது. பத்தாம்நாள் பலிகொடுக்கிற நாள். ஆயிரக்கணக்கான ஆடு மாடுகள் அங்கே நின்றன. அவைகளின் கொம்புகளில் பூவைச் சுற்றினர். கழுத்தில் மாலைகள் அசைந்தன. நெற்றிகளிலும் உடம்புகளிலும் மஞ்சள் குங்குமப் பூச்சுக்கள் காலை இளங்கதிர்களில் மின்னின. பறைகள் விண்கிழியக் கறங்கின. ஆவேசம் வந்து சிலர் ஆடினர் ஒரு பால்; பாடினர் சிலர் ஒருபால். மேளம் வாசித்தனர் ஒரு பால்; மத்தளம் கொட்டினர் ஒரு பால். 'அம்பிகே!, அம்பிகே! உன் சரணமடி' என்று அலைக்குமேல் அலையாகச் சக்தி தாசர்கள் குங்குமப் பொட்டுக்கள் நெற்றிகளில் மின்ன, கண்கள் கோவைப் பழம்போலச் சிவந்து காட்ட ஆரவாரித்தனர். கால்களில் சலங்கைகள் "கலீர் கலீர்" எனச் சிலர் குதித்தனர். ஆவேசங்களில் சிலர் குறி சொல்லினர். சாம்பிராணிப் புகை மேகமென எழ அக்குறி சொல்லுகிறவர்களைச் சுற்றிச் சிலர் அண்ணாந்து நின்றனர்.

"குன்றின் மீதிலிருந்து இக்காட்சியை நோக்கினர் கருணைக் கழகத்தினர். ரத்த வெறிபிடித்த தெய்வம் ஒன்றிருக்குமா? என்று அவர்கள் உள்ளந்துடித்தது, 'இந்தக் கொடிய வழக்கத்தை இன்றே நிறுத்திவிடவேண்டும்' என்றெழுந்தனர்.

"ஒரு பெரிய கலகம் ஏற்பட்டுவிட்டது. ஆடு மாடுகளை வீசவைத்திருந்த வாட்களினால் கழகத்தார் மீது வீசினர். என்ன இருந்தாலும் கழகத்தாரின் சதை ஆடா மற்போகுமா. கழகத்தாரின் கொள்கை அந் நிலையில் பறந்துவிட்டது. அவர்களும் அங்குள்ள வாட்களை அவர்கள் மீது எறிந்தனர். இரண்டு பக்கங்களிலும் பலர் மாண்டனர். போலீஸார் கலகத்தை அடக்குகின்ற பாவனையில் துப்பாக்கிப் பிரயோகஞ்செய்தனர். அதில் சில ஆடு மாடுகள் இறந்தன. மற்றுஞ் சில பிராணிகள் கயிறுகளை அறுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தன. திருவிழாப் பார்க்கவந்த ஒன்றும் அறியாத ஜனங்களில் சிலர் குண்டு பட்டுக் கீழே விழுந்தனர். காளி உவப்ப ஆடுமாடுகளைப் பலியிட அவர்கள் கொணர்ந்தனர். அஹிம்சைத் தத்துவத்தை நிலை நாட்டக் கருணைக் கழகத்தினர் விரைந்தனர். அமைதியை நிறுவப் போலீஸார் அக்களத்திற்குப் பறந்தனர். "முடிவென்ன?" என்று சற்று நிறுத்தினர்.

"ரணகளமென்றேன்."

"வாயில்லாப் பிராணிகளின் மீதுவைத்த அன்புகோரமான காரியத்தில் இறங்கும்படி அவர்களைத் தூண்டிவிட்டது. தேசத்திற்காக, மதத்திற்காக எழுகிற சண்டைகளும் சச்சரவுகளும் இத்தகைய சச்சரவுகள்தாம். அன்பே சிவமென்று சமணர்களைக் கழுவேற்றிவிடுவார்கள். அன்பு நெறி ஒன்றே உலகத்தை உய்விக்கும் வழி என்று சொல்லுகிற சமணர்கள், படுக்கைக்குப் போகுமுன் அந்தணர்கள் அழிக என்று சபிப்பார்கள். மலை உபதேசத்தை மறந்து கிறிஸ்துவர்கள் ஒருவரை ஒருவர் வெட்டி மடிகின்றனர். கொசுவைக்கூட, கொல்ல மனமில்லாதவர்கள் ஏதோ ஒரு கொள்கைக்காக, தமக்கொன்று ஏற்பட்ட ஒரு நியாயத்தை நிலை நாட்டுவதற்காகக் கோடிக்கணக்கான ஜனங்களைப் பலியிடுவார்கள். இதெல்லாம் எதிலிருந்து விளைகின்றன தெரியுமா?" என்றார்.

"மிதமில்லாமற் போனதால் விளைந்தவை" என்றேன்.

"ஆம்" என்று தலையை அசைத்தார். "கத்தி முனையில் போவதுபோலப் போகவேண்டும். ஒரு மயிரிழைகூட அந்தப் பக்கமாவது இத்தப்பக்கமாவது சாயக்கூடாது. சாய்ந்தால் ஆபத்துத்தான். வாழ்க்கையோ அநேக தந்திகளையுடைய யாழ் என்று வைத்துக்கொளுங்கள். ஓர் அபஸ்வரம் பேசினாலும் கசப்பு வந்துவிடும். யாழ் என்ன செய்யும்? வாசிக்கிறவனைப் பொறுத்தது" என்று முடித்தார்.

இதற்குள் நீள்வான வீதியில் நக்ஷத்திர மலர்கள் உதிர்ந்து கிடந்தன.

சுற்றியுள்ள குன்றுகள் இருட்பிழம்புகள் போலக் காட்சி அளித்தன. குருநார்தரிடம் விடை பெற்றுக்கொண்டு என்னுடைய இருப்பிடத்திற்குக் கங்கைக்கரை ஓரமாய்ச் சென்றேன். அன்றிரவு என்னுள்ளத்திலே ஒலித்தது மிதம், மிதம், என்ற உபதேசம்தான். என் அகக்கண்முன் தோன்றியவை உலகத்தின் உதய காலமுதற்கொண்டு நிகழ்ந்து வருகிற அசுரச் செயல்களே. கால இருட்டின் குறுக்கே அக்கோரச் செயல்கள் ஓர் அழியாக் குருதிக் கோட்டை வரைந்திருப்பதை நோக்கி நான் சிந்தையில் ஆழ்ந்தே படுத்திருந்தேன். கீழே கங்கை அமைதியாய் ஓடிக்கொண்டிருந்தாள்.

# க்ஷீரமும், வீரமும்

**சி. வி. ராமகிருஷ்ணன்**

ஒரு சமயம் க்ஷேத்திராடனம் செய்யும்பொருட்டு ஒரு புண்ணிய ஸ்தலத்திற்குச் சென்றிருந்தேன். வீதிகளில் ஏராளமாக ஆண்களும், பெண்களும், குடங்களும், கூடைகளும் ஏந்தி, புற்றுகளிலிருந்து எறும்புகள் சாரி சாரியாகச் செல்லுவதுபோல, சென்றுகொண்டிருப்பதைப் பார்த்தவுடன் ஏதோ திருவிழாப்போல இருக்கிறது என்று சந்தேகித்தேன். வீதியில் சென்றுகொண்டிருந்தவன் ஒரு நிமிடம் நின்று யோசித்தேன். நிச்சயமாக அந்த மாதத்தில் திருவிழா ஒன்றும் இல்லை என்று தெரியவந்தது. வியப்புற்றவனாய் அருகில் சென்றுகொண்டிருந்த ஒரு ஆசாமியிடம், கூட்டத்திற்குக் காரணம் என்ன என்று கேட்டேன். அவர், ஒரு சாமியார் ஊருக்கு வந்திருப்பதாகவும், அவருடைய முக தேஜஸையும், உடல் கட்டையும் கண்ட எவரும் பக்தி பரவசம் அடைவரென்றும் ஆகவே, அத்தகைய கடவுள் அம்சமான அம்மகானைத் தரிசித்து, பழமும், பாலும் காணிக்கையாகச்செலுத்தி, அவர் ஆசீர்வாதம் பெற்றுவரச்செல்கின்றனர் என்றும் கூறினார். கூட்டத்தைப் பின் தொடர்ந்து சாமியார் இருந்த இடத்திற்கு நானும் சென்றேன். ஆள் வாட்ட சாட்டமாக, திடகாத்திரராய், மேனி பள பள என்று ஜொலிக்க, தேஜஸுடன் வீற்றிருந்தார். அருகில் இருந்த மனிதர் சாமியாரின் மகிமைகளைச் சொல்ல ஆரம்பித்துவிட்டார். சாமியார் அதிகாலையில் எழுந்து பாதாம் எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு, தியானத்திற்கு (நித்திரைக்கு என்றுதான் நினைக்கிறேன்) உட்கார்ந்துவிடுகிறாராம். மக்கள் காணிக்கையாக அளிக்கும் பழத்தையும், பாலையும் தவிர மற்ற எதையும் கையால்கூடத் தொடுவதில்லையாம். இவ்வளவு குறைந்த ஆகாரத்தை அருந்தியும் கடவுள் சக்திபெற்று, திடகாத்திர புருடராய் விளங்குகின்றார் என்று அகமகிழ்ந்து கொண்டிருந்தார் அருகிலிருந்த ஆத்மா! அப்பொழுதுதான் நமது பாட்டாளி மக்களின் அறியாமையை நினைந்து மனம் வேதனையடைந்தது. பாலிலோ விடமின் C (Vitamin C) என்ற சத்துப்பொருளைத் தவிர மற்ற உடலுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் இருக்கின்றன.

அந்த விடமின் C யும், அமிலப் பொருள்களும் பழத்திலிருந்து கிடைத்துவிடுகின்றன. தவிர பாதாம் எண்ணெய் ஸ்நானம் என்றால் கேட்பானேன். கொழுப்பை (Fat) உள்ளே ஊசிவைத்து ஏற்றுவது போலத்தான்! இதுமாதிரி உயர்ந்த ஆகாரப் பொருள்களைத் தின்று கொழுப்பேறி உறங்குவது தியானம் செய்வதாம்! சாதாரண மக்கள் ஒவ்வொருவரும், அந்தச் சாமிகள் சாப்பிடும் பாலிலும், பழத்திலும் எட்டில் ஒரு பாகம் சாப்பிட்டாலும் கூடத் திடகாத்திரராய் ஆகிவிடுவர். ஆகவே இதுமாதிரி மக்களை ஏமாற்றும் செப்பிடு வித்தைக்காரராகிய அந்தப் போலிச் சாமியாரைப் பார்த்ததின் பயன்தான் இக்கட்டுரை எழுதத் தூண்டுகோலாயிற்று.

அந்நியர்கள் (Westerners) அநேகமாக எதை வேண்டுமானாலும் தின்று காலங்கழிக்கும் அநாகரிகப் பேய்கள். அவர்கள் நாகரிகத்தைக் கற்றதின் பயனாகவோ என்னவோ, அநேக இந்தியர்களும் எதையும் புசிக்க ஆரம்பித்துவிட்டனர். மாடுகளும், ஆடுகளும் மனித இரையாயின. இது மாதிரி காலம் சென்றுகொண்டிருக்குமாயின் ஒரு காலத்தில் மாடு என்பதற்கு அர்த்தமே தெரியாமல் போய்விட்டாலும் போய்விடலாம்! அதை முன்னிட்டுத் தானோ என்னவோ சேட் டால்மியாஜி (Seth Dalmia) அவர்கள் அரசாங்கம் கோஹத்தியை (Cow Slaughter) நிறுத்தச் சட்டம்கொண்டுவரவேண்டும் என்று கதறுகிறார். பசு, எருமை முதலியவைகளைக் கொல்லாமல்

நன்றாகத் தீனி போட்டு வளர்த்தால், அவைகள் எல்லாச் சத்துக்களையும் உடைய பாலைப் பிரதி உபகாரமாக அளிக்கின்றன. பாலின், சத்தானது மாமிச சத்தைவிட எவ்வளவோ பங்கு உயர்ந்தது. அதுவுமன்றி மாமிசம் ஒரே நாளில் உபயோகப்பட்டுவிடுகின்றது. ஆனால் பாலோ எனில் அநேக நாட்கள் கிடைக்கும். ஆகவே ஒரு நாள் ஆசைக்காகப் பசுவைக் கொல்வது, "பொன் முட்டை இட்டுக்கொண்டிருந்த வாத்தை, அவசரக்காரன் புத்தி மட்டால் கொன்ற கதை" போல முடியும். வேண்டுமாயின் பசு இறந்தபிறகு அதனுடைய தோலைச் செருப்புகள் செய்யவும், அதனுடைய எலும்புகளைச் சர்க்கரை சுத்தம் (Bleeching Sugar) செய்யவும் உபயோகிக்கலாம். அது உயிருடன் இருக்கும் பொழுது தரும் பாலோவெனில் தேக புஷ்டிக்கு ஏற்ற ஆகாரமாயிருக்கிறது. எனவே இக்கட்டுரையின் முக்கிய நோக்கம், பசு, எருமை, ஆடு முதலியவைகளினின்றும் கிடைக்கும் பாலின் சத்துக்களை ஆராய்ந்து, அவைகளை எப்படி அதிகப்படுத்தலாம் என்று சாதாரண மக்களுக்குப் புரியும்படி எடுத்துரைப்பதாகும்.

நம் நாட்டில் சாதாரணமாகப் பசு, எருமை, ஆடு, கழுதை முதலியன பால் கொடுக்கும் மிருகங்களாம். பொதுவாக எருமையின் பாலும், ஆட்டுப்பாலும் சற்று ஜீரணம் செய்வது கஷ்டம். பசு, கழுதைப்பால்கள் எளிதில் ஜீரணமாகும் வகையைச் சேர்ந்தவை. கழுதைப் பால் வளரும் குழந்தைகளுக்கு வியாதிகளால் பீடிக்காமலிருக்கப் பாதுகாப்பாக (Protection against disease) கொடுக்கப்படுகிறது. பொதுவாகப் பாலானது எளிதில் ஜீரணமாகும் வஸ்துக்களைக் கொண்ட ஒரு திரவ பதார்த்தமாகும். அதில் வபை (Fat), தண்ணீர் (Water), சர்க்கரை (Milk sugar or Lactose), புரதம் (Proteins), அல்புமினுய்ட் (Albuminoids consisting of casein, Lacto-albumin and globulin), கால்சியம், சோடியம் பாஸ்பேட், சிட்ரேட், க்ளோரைட்கள் (Calcium, Sodium Phosphates, Citrates and chlorides), விடமின்கள் (Vitamins), ஆக்ஸிடேஸ் கெடலேஸ் முதலிய தாவர உகைப்பான்கள் (Enzymes like oxidase, catalase etc.), முதலியவைகள் இருக்கின்றன. சர்க்கரை சக்தியை அளிக்கிறது. தண்ணீர் ஜீரணத்திற்கு உதவுகிறது. வபை கொழுப்பைத் தருகின்றது. புரதம் உடல் வளர்ச்சிக்கு உதவுகின்றது. விடமின்களும், உப்புச்சத்துக்களும் உடல் கெடாமல், பொதுவாக வியாதிகள் வராமல் தடுக்கின்றன. உகைப்பான்கள் (Enzymes) சிக்கலான புரதம் போன்ற பொருள்களைப் பிரித்து எளிதில் ஜீரணமாகும் பொருள்களாக மாற்ற உதவுகின்றன. ஆகவே உடல் நலத்திற்கு வேண்டிய எல்லாப்பொருள்களும் கலந்த கலப்பு உணவாக (Mixed diet) இருப்பதால்தான் பால் மிகச்சிறந்த ஆகாரமாகும்.

மிருகத்தினின்றும் பால் கிடைக்கும் அளவும், பாலில் மேலே சொன்ன பொருள்கள் கலந்திருக்கும் அளவும், மிருகத்தின் தன்மையையும், அதன் கன்று வளருவதற்கு வேண்டிய வசதிகளையும் பொறுத்திருக்கின்றன. பொதுவாக அவைகள் (1) மிருகச் சேர்க்கை (Inter-breed), (2) ஆகாரம் (Diet), (3) பால் வற்றும் காலமும், விதியும் (condition and dry period), (4) பால் கொடுக்கும் காலம் (Stage of Lactation), (5) கர்ப்பமாவதின் கோளாறு (Effect of Pregnancy), (6) பருவகாலம் (Season of the Year), (7) பால் கறக்கும் நேரங்களுக்கு இடையே உள்ள இடைவெளி (Interval between milking), (8) எஸ்ட்ரஸ் (Estrus), (9) வயது, பரிமாணம், வியாதி, அப்பியாசம் (Age, Size, Disease, Exercise, etc) முதலியவைகளைப் பொறுத்திருக்கின்றன. மேற்சொன்னவைகளில் பால் கொடுக்கும் காலம், கால மாறுதல் ஆகாரம் இவைகள்தான் முக்கியமாகப் பாலின் தன்மையையும், அளவையும் பாதிக்கின்றன. உதாரணமாக ஆகாரத்தில் கொஞ்சம் வபை (Fat) அதிகமிருப்பின், கிடைக்கும் பாலின் அளவு அதிகமாகிறது. பாலின் தன்மையை ஆராய, ஆடு, மாடுகளைப் புல் வெளிகளில் மேய விட்டு

விட்டு, தவிர கடலைப் பிண்ணாக்கு (Groundnut cakes), சோடியம் க்ளோரைட் (Sodium chloride) பெரஸ் ஸல்பேட் (Ferrous Sulphate), காப்பர் ஸல்பேட் (Copper Sulphate) முதலிய உப்புகள் கலந்த உணவு கொடுக்கப்பட்டு, அவைகளினின்றும் கிடைக்கும் பாலில் உள்ள வெவ்வேறு பொருள்களின் அளவு நிர்ணயிக்கப்படுகின்றது. அவைகளினின்றும் பாலின் தன்மை ஆகாரத்தினால் எப்படிப் பாதிக்கப்படுகின்றது என்று அறியலாம்.

மிருகங்களினின்றும் கிடைக்கும் பாலை இரு விதமாகப் பிரிக்கலாம். பால் கொடுக்க ஆரம்பித்த உடன் கிடைக்கும் பாலுக்குச் சீயப்பால் (Colostrum) என்று பெயர். முதல் நான்கு நாட்களில் பாலில் எல்லாப் பொருள்களும் மிகவும் அதிகமாயிருக்கும். ஆகவே, மக்களுக்கு அது எளிதில் ஜீரணமாகக் கூடியதில்லையாதலால், சாதாரணமாக உபயோகப்படுவதில்லை. நாளுக்கு நாள் வெவ்வேறு பொருள்களின் அளவுகள் குறைந்து நான்காவது நாளுக்குப் பிறகு பாலின் தன்மை அநேகமாக மாறுமல் நிற்கிறது. இதற்குத்தான் குடிக்கத் தகுந்த பால் (Normal milk for use) என்று பெயர். இதுதான் மக்களால் உபயோகப்படுத்தப்படுகின்றது.

பாலை அதிகப்படுத்த செய்த ஆராய்ச்சிகளில் ஒன்று சேர்க்கையாகும் (Inter breed). மூன்று விதமான ஆடுகள் பொறுக்கப்பட்டன. டெக்கான் ஆடு, டெக்கான் மரினு என்ற இருவகைகளுக்குப்பிறந்த ஆடு, டெக்கான் ஆட்டிற்கும், இரண்டாவது வகை ஆட்டிற்கும் பிறந்த ஆடு இவை மூன்றும் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. டெக்கான் ஆட்டிற்குப் பால் கொடுக்கும் காலம் (Period of Lactation) 92 நாட்களாகும். இரண்டாவதற்கு 79 நாட்களும், மூன்றாவதற்கு 70 நாட்களும் ஆகும். டெக்கான் ஆடு அதிக நாள் பால் கொடுப்பினும், பாலின் அளவு மூன்றுவது வகையில்தான் மிகவும் அதிகம். தவிர பாலின் தன்மை (Ingredients of Milk) எல்லா வகை ஆடுகளிலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. ஆகவே வெவ்வேறு வகை மிருகங்களினின்றும் கலப்பு உண்டாக்குவது நல்லது என்று தோன்றுகின்றது.

ஒரு மனிதனுக்கு மிகச் சிறந்தஉணவில் சர்க்கரைப் பொருள், வபை, புரதம் மூன்றும் 5:1:1 என்கிற ரீதியில் (Carbotydrates: Fat: Proteins ::5:1:1) இருக்கவேண்டும், ஆனல் எருமைப்பாலில் 1;1.5:1 என்கின்ற ரீதியிலும், பசும்பாலில் 1.5:1:1, கழுதைப்பாலில் 5:1:1, ஆட்டுப்பாலில் 1:2:1.5 என்ற ரீதியிலும் அமைந்துள்ளன. இதிலிருந்து கழுதைப்பால் மிகச்சிறந்தது என அறியலாம். பசும்பால் அடுத்தபடி சிறந்த உணவாம். அதில் குறைவாயுள்ள சர்க்கரைப்பொருளைப் பதம் முதலியவைகளின் மூலம் சரிக்கட்டி விடலாம். எருமை ஆட்டுப்பால்களில் வபை, புரதம் அதிகமாயிருப்பதால்தான் ஜீரணிப்பது கஷ்டமாயிருக்கிறது.

மேற் சொன்னவைகளிலிருந்து நல்ல ஆகாரத்தைத் தேர்ந்தெடுத்து மிருகங்களுக்குக் கொடுத்தும், கலப்பு மிருகங்களை உற்பத்தி செய்தும், அவைகளினின்றும் கிடைக்கும் பாலை அருந்தினுல் அதைவிடச் சிறந்த உணவோ அல்லது டானிக்கோ கிடையாது என்று தெரிகிறது. ஆனல் அளவுக்கு மீறி ஜனத்தொகையைக் கொண்டுள்ள நமது நாட்டில் பால் கொடுக்கும் மிருகங்களின் அளவு மிகக் குறைவாயிருப்பதால், பால் பஞ்சம் அதிகரித்திருக்கிறது. பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் பாலை எப்படி அதிகம் கிடைக்கும்படி செய்யலாம் என்று ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர். ஒரு ஆராய்ச்சியாளர் வற்றின பசுவிற்கு (Dry cow) ஒரு மருந்தை உள்ளே செலுத்துவதன் மூலம் பால் கொடுக்கும்படி செய்யலாம் என்கிருர். இன்னும் சிலர் சோயா விதையிலிருந்து (Soyabeans) பாலை எடுத்து மனித உபயோகத்திற்கு ஏற்றவாறு எவ்வாறு மாற்றலாம் (Making it alright for human consumption) என்று ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர். செடி கொடி மரங்கள் ஏராளமாக உள்ள உலகத்தின் நந்தவனம் (Garden of the world) என்று சொல்லும்படியான நமது நாட்டிலே எவ்வளவோ தாவரங்களினின்றும் பால் எடுக்கமுடியும். ஆனல் சிக்கனமான

முறையில், அதிக அளவில், அபாயகரமான வஸ்துக்கள் இல்லாமல், மேற்சொன்ன வபை, புரதம் முதலியபொருள்களெல்லாம் தகுந்த அளவில் இருக்கின்றதா என்று ஆராய்ந்து மனித உபயோகத்திற்கு ஏற்றதாய்த் தாவரப்பாலைத் தயார் செய்தால் அதுவே பசும் பாலுக்குச் சிறந்தமாற்ருகும் (Substitute).

பாலிலிருந்து கிடைக்கும் வஸ்து நெய்யாகும். இது பல்வேறு அமிலங்களைச் சிக்கலான க்ளைஸரைட்ஸ்களாகக்கொண்டுள்ள வபை பதார்த்தம் (Ghee is a fatly substance containing different acids in the form of glycerides). நெய் எளிதில் ஜீரணமாக வேண்டின் குறைந்த உருகும் தன்மை வாய்ந்ததாயும் (Low melting point) கனம் குறைந்ததாயும் (Low molecular weight), சுலபமாகக் கரையும் படியாகவும் (Easily soluble), சீக்கிரத்தில் பிரியக்கூடியதுமான அமிலங்களைக் கொண்ட க்ளைஸரைட்ஸ் (Glycerides) களைக் கொண்டிருக்கவேண்டும். நெய்யை ஒரு பாத்திரத்தில் சிறிது நேரம் வைத்திருப்பின் மூன்றுவிதப் பாகங்களை (Layers) பார்க்கலாம். மேல் பாகம் திரவமாகவும் நடுப் பாகம் பாதி திரவமாகவும், கடைசிப் பாகம் திடமாகவும் (Solid) இருக்கும். திரவபாகம்(Liquid layer) தான் சீக்கிரம் ஜீரணிக்கக்கூடியது. மற்ற இரண்டும் கரையாப் பொருள்களையும் (Insoluble substances), அதிக கனப் பொருள்களையும் (Weighty matters) கொண்டிருப்பதால் ஜீரணிக்கக் கூடியதல்ல. தவிர பசு, எருமை நெய்களில் கரையும் பொருள் அதிகமாக இருப்பதால் சீக்கிரத்தில் ஜீரணிக்க முடிகிறது. ஆனல் ஆட்டு நெய்யில் கரையாப்பொருள் அதிகமிருப்பதால் சீக்கிரத்தில் ஜீரணமாகிறதில்லை.

நெய்யை அதிக உஷ்ணமுள்ள இடத்திலும், இருட்டறைகளிலும், காற்ருேட்டம் இல்லாமல் வைத்தால், க்ளைஸரைட்ஸ்களில் உள்ள அமிலங்கள் பிரிந்து நெய் கெட்டு விடுகிறது (Rancidity). ஆகவே நல்ல வெளிச்சமுள்ள, மிதசீதோஷ்ண ஸ்திதி உள்ள இடங்களில் வைத்தால் வெகு நாள் கெடாமல் இருக்கும். சில ஆராய்ச்சியாளர் சாதாரண உப்பைச் சிறிது போட்டால் நெய் கெடாமல் பாதுகாக்கப்படுகின்றது என்று கூறுகின்றனர். இதுமாதிரி செய்வதன்மூலம் பல நாட்கள் உபயோகிக்கலாம்.

மேற்சொன்னவைகளிலிருந்து பாலும் நெய்யும் மனிதனுக்கு அத்தியாவசியமானவை என்று அறிந்தோம். கலப்பு மிருகங்களை அதிகப்படுத்தியும், சரியான ஆகாரங்களை அவைகளுக்கு அளித்தும், அவைகளினின்றும் பாலைப் பெற்று, போதாததற்குத் தாவரப் பால்களை உற்பத்தி செய்தும், நம் நாடு முழுவதும் பால் பெருக்கெடுத்து ஓடும் படி செய்தால், ஒவ்வொருவனும் பாலுண்டு, களிப்பெய்தி, வீரசிங்கனுய் வீட்டிற்கு வீடு தேஜஸ் பொருந்திய திடகாத்திர சாமியாராகி மூடக்கொள்கைகளை அறவே ஒழிக்கலாம் என்பதையே "க்ஷீரமும், வீரமும்" என்ற தலைப்பால் குறிப்பிட்டோம். அப்பாலாறு காணும் நாள் எந்நாளோ!

[குறிப்பு:—சில நாட்களுக்குப் பிறகு அப்போலிச் சாமியார் திடீரென்று ஒரு நாள் அந்தர்தானம் ஆகிவிட்டார் என்று அறிந்தேன்].

# ஐயர்-வாள்

யோகி சுத்தானந்த பாரதியார்

ஸ்ரீ வ. வே. சு ஐயர் ஒரு வாள் வைத்திருந்தார்; அதை எப்போதும் தலையணைக்கடியில் வைத்துக்கொண்டே அவர் உறங்குவது வழக்கம். காலை எழுந்ததும் அதைத் தடவிப் பதம் பார்த்து வைப்பார்; தலைக்கு எண்ணெய் தடவிச் சீவிக் கொள்ளும்போது வாளுக்கும் சிறிது தடவித் தேய்த்து, துருவேறாமல் பளபளப்பாக வைத்திருந்தார்; நான் ஒரு நாள் அந்த வாளை எடுத்து அப்படி—இப்படி சுழற்றிப் பார்த்துக்கொண்டிருந்தேன். எனக்கு அதில் ஒரு மதிப்பே விழவில்லை; பிரென் பீரங்கியும், எம்டனும், ஜெப்லினும், ஆகாச குண்டும், கண்ணிகளும் அமளிப்படும் இந்தக் காலத்தில் வில்லும் அம்பும் வாளும் ஈட்டியும் என்ன பயன்? இந்த வாள் இளநீர் வெட்டத்தான் லாயக்கு. இதைப் பிரமாதமாகப் பாதுகாப்பதேன் என்று கேட்டேன். ஐயர் "இந்த வாள் ஒரு வீரன் பிடித்த வாள்—அவன் மஹா தீரன். இந்த வாள் அவன் கையில் இருப்பதைக் கண்டால் பாரதி இப்படிப்பேச முடியாது," என்றார். யாரந்த வீரப்புலி என்று நான் ஆவலாகக் கேள்வி போட்டேன். ஐயர் ஐந்து நிமிஷம் வாளைத் தடவிக்கொண்டே சிந்தனையிலிருந்து பிறகு, சாப்பிட்டுக்கொண்டே பேசலாமே என்றார். இருவரும் நிலக்கடலையும் வாழைப்பழமும் மெதுவாக உண்டுகொண்டே பேசினோம். ஐயர் புரட்சி வீரனான மாடசாமியைப்பற்றிச் சொன்னார். அதையே விரிவு படுத்தித் தமிழருக்கு இன்று சொல்லுகிறேன்.

1910—15—வரையில் இந்திய சுதந்தரம் புரட்சிக் கோலம் கொண்டிருந்தது. புதுச்சேரியிலிருந்து ஐயர் நாடெங்கும் புரட்சித் தீ பரப்பினார். ஐயருக்குக் கைபோல் உதவிய வீரருள் இருவரை நாம் மறக்க முடியாது—நீலகண்டன், மாடசாமி. எருக்கூர் நீலகண்ட பிரமசாரியை நான் இரு முறை சந்தித்துப் பழகியதுண்டு. ஒருதரம் சென்னைக்குச் சென்றிருந்தேன். அப்போதே மஹாத்மா இராஜகோபாலாசாரியார் வீட்டில் தங்கி ஒத்துழையாமைச் சங்கூதினார். எனது நண்பன் மஹாதேவன் அன்றிரவு நீலகண்ட பிரமசாரியை அறிமுகப்படுத்தினான். அக்காலம் எனக்கு மஹாத்மாவிடம் பரமபக்தி. அவர் வழியே வழி என்று நான் வாதாடினேன் "அவர் பழியே பழி!" என்று நீலகண்டன் எதிர்வாதம் செய்துகொண்டே ஒரு தாராபாய் சர்கஸ் கொட்டகைக்கு இட்டுச் சென்றான். அங்கே டிகெட் கேட்டான் காவலன். நீலகண்டன் இந்தா டிகெட் என்று மடியிலிருந்து ஒரு முழம் எடுத்தான்—துப்பாக்கி. அதைக் கண்டதும் காவலாள் பயந்துபோனான். நான் தேசாபிமானி, தியாக வீரன்—என்னை உள்ளே விடு—உடனே—என்று உரத்த குரலில் பேசினான். காவலன் பயந்துபோய் ஆளை உள்ளே விட்டுவிட்டான். "பார்த்தீரா பாரதியாரே துப்பாக்கிக்குள்ள மதிப்பு—இதைப் பிடித்தே பிரிட்டிஷ்காரன் நம்மை மிரட்டி ஆள்கிறான். இதைக் கொண்டே நாமும் அவனை மிரட்டி விரட்ட வேண்டும்—என்று எனக்குப் பலாத்கார உபதேசம் செய்து தீர்த்தான். நான் "அதெல்லாம் அந்தக்காலம்—இதுகாந்தி காலம்" என்றேன். "என் அண்ணா இருந்தால் உமக்குச் சரியான பதில் சொல்வான்—நான் மாடசாமிக்குத் தம்பி (கொள்கையில் தம்பி)" என்றான். பிறகு மாடசாமி கதை வளர்ந்தது.

இன்று இந்தியா வெள்ளையரிடமிருந்து விடுதலை பெற்றது; இந்த விடுதலைப் பாதையில் எத்தனையோ தியாகிகளின் இரத்தம் படிந்திருக்கிறது; பலரை நாம் மறந்துவிடுகிறோம்; மிகச்சிலரையே நினைக்கிறோம். ஏராளமான தியாக வீரரின் பெயர்கூட மறைந்துவிடுகிறது. கால வெள்ளத்தை மீறி நிற்கும் பெயர்கள் மிகச் சிலவே—திலகர் காந்தி, நேரு, போஸ், பாரதி, தாகூர்

போன்றவையே. ஆனால் உள்ளத் துடிப்பை வைத்து அளந்து பார்த்தால் மறைந்த மாணிக்கங்கள் பலருடைய மாண்பை அறியலாம்.

இந்திய சுதந்திரத்திற்காகவே வாழ்ந்த தியாக வீரருள் நமது வ. வே. சு ஐயரை மறக்கமுடியாது. அவர் அருங்கலைச் செல்வர்; பன்மொழிப் புலவர்; சீரிய நேரிய நன்னடைப் பெரியார்; சுபாஷ் போஸ்போலவே வீரக்கனல்; லண்டனி லும் பாரிஸிலும், புதுச்சேரியி லுமிருந்து அவர் செய்த வீரச்செயல்களும், தேசத் திற்காக அவர் செய்த பயங்கரமான தியாகங்களும் சரித்திரப் புகழ் பெற் றவை.

அத்தகைய ஐயர் மஹாதீரன் என்று மெச்சிய ஒரு வீரனை நாம் இன்று நினைப்போம்—மாடசாமி. இந்தப் பெயரை இன்று மிகச்சிலரே அறிவார்கள். கவிக் குயில் பாரதியாருக்கும், கலை வீரர் ஐய ருக்கும், கண்ணுகவும், கையாகவும் இருந்துதவிய வீரர் மாடசாமி. நல்ல கட்டுமஸ்தான உடல்; தமிழ்ப் பண் புள்ள நடை; உரமான பேச்சு; நிமிர்ந்த நடை; நேரிய பார்வை; சமயோசித புத்தி; எதிரியை மடக்கும் திறமை; போர்த்தினவு—இவையே மாடசாமி.

ஐயர் அந்தக்காலம் கரிபால்டி, நானு சாகெபு போன்றும், குரு கோவிந்த சிங் கன் போன்றும், தேச சுதந்திரத்திற் காக வாளைத் தீட்டினர். புதுச்சேரியில் ஒரு தோட்டத்தில் வீரப் பயிற்சி யளித் தார். அப்பயிற்சி பெறுவோர் பாரத மாதாவையே மஹாகாளி சக்தியாக வணங்கவேண்டும்; தேச சேவைக்கே தங்கள் உடல் பொருள் ஆவியை அர்ப் பணிக்க வேண்டும். வாட் பயிற்சியும் துப்பாக்கிப் பயிற்சியும் பெறவேண்டும்; பலாத்காரத்தால் அன்னியரை விரட்டி யடித்து நாட்டை விடுதலை செய்ய இரத் தம் சிந்தவேண்டும். தங்கள் இரகசிய சங்கத்தில் நடப்பதை வெளியே பேசக் கூடாது; எல்லாம் அடக்கமாக நடக்க வேண்டும்.

இந்த வீர சுதந்திர சங்கத்தில் சேர்ந்த வனை ஐயர் நன்ருகச் சோதிப்பதுண்டு; அவர்களுடைய முதல் சோதனை, வாளால் கையில் சிறிது அறுத்து இரத்தமெடுத்து பாரத மாதாவுக்குப் பொட்டு வைத்து வீர சுதந்தரவிரதம் பெறுதலேயாகும்.

ஐயர் ஒரு நாள் தோட்டத்திற்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தார்; அவருடன் நான்கு வீரரும் புறப்பட்டனர்; அப் போது ஒரு வீரத்தமிழன் வந்தான்; ஐயர் சட்டென்று கூடத்திற்குப் போனர்; தமிழன் அவரைத் தொடர்ந் தான்; "வந்தேமாதரம்!" என்ருன்.

ஐயரும் வந்தேமாதரம் போட்டு, விளக்கு வெளிச்சத்தில் ஆளை அளந்து பார்த்தார். கண்கொட்டாமல் சிங்க விழியால் அவன் விழிகளை ஊடுரு விப் பார்த்தார். 'இஹம்' என்றெரு கனைப்புடன் பேச்சுத் தொடங்கினர்.

ஐயர்: நீர் யார்? எங்கே வந்தீர்?

மாட: என்பெயர் மாடசாமி; உங்களி டமே வந்தேன்.

ஐயர்: எதற்காக?

மாட: என் ஆத்திரந் தீர ஒருகாரியம் செய்வதற்காக.—[ஐயர் அவனை ஒற் றன் என்றே ஐயுற்று ஒருநிமிஷம் வைரப் பார்வை பார்த்தார்.]

ஐயா நான் ஒற்றன் என்று சந்தேகிக்க வேண்டாம்; என் மீசை துடிக்கிறது; என் உள்ளம் துடிக்கிறது; என் கை துடிக்கிறது—எதற்குத்தெரியுமா— எனது நாடு வெள்ளையரிடமிருந்து விடு தலை பெறத்தான்.

ஐயர்: அதற்காக நீர் என்ன செய்யப் போகிறீர்?

மாட: நீர் என்னசெய்யப்போகிறீர்? அதையே நானும் செய்வேன்.

ஐயர். நான் என்னப்பா செய்யப்போ கிறேன்; ஏதோ இலக்கிய சிருஷ்டிக் கனவு கண்டு கொண்டு, ஒற்றர் தொல்லை களைப் பொறுத்துக்கொண்டு இங்கே வசிக்கின்றேம்.

மாட: ஐயரே, இலக்கியம் கிலக்கிய மெல்லாம் பிறகு எழுதிக் கொள்ள லாமே. நாடு கொள்ளைபோகிறது; அடி மைச்சங்கிலி வர வர இறுகிக்கொண்டி ருக்கிறது. அதை வெட்டி யெறிவதுதான் முதல் வேலை.

ஐயர்: சங்கிலியை வெட்டும்போது கையை வெட்டிவிட்டால்—

மாட: கழுத்தை வெட்டினாலும் கவலையில்லை ஐயா? அடிமைச் சங்கிலி அறுபட்டாலே போதும்.

ஐயர்: அதை அறுக்க நம்மாலாகுமா?

மாட: ஆகும் என்றுதானே நீங்களெல்லாம் சர்வதியாகம் செய்து இங்கே வீரச் சங்கம் நடத்துகிறீர்கள். ஐயரே, நான் அறிந்தே வந்தேன்.

ஐயர்: என்ன அறிந்து வந்தீர்?

மாட: சென்ற ஆண்டு, மண்டபம் ஸ்ரீநிவாசாசாரியார் வீட்டிற்கு ஒரு சாகெபு வந்தார். அவரைச் சிலர் துருக்கரென்றே எண்ணியிருந்தனர்; இந்தத் துருக்கர் கெய்ரோவிலிருந்து ஹஜ்ஜு யாத்திரைக்குப் புறப்பட்ட பக்கிரி சாகெபுகளுடன் சேர்ந்து கப்பலேறி அல்லாஹு அக்பர் போட்டுக்கொண்டே பம்பாய்க்கு வந்து சேர்ந்தார். அங்கே இறங்கி இரகசியமாக நாசிக் சென்று அபிநவபாரத சங்கத்தினருடன் ஏதோ பேசினார். அப்போது ஜாக்ஸன் கொலைவழக்கு நடந்தது; சாவர்கார் கைதிக்கூண்டில் வீற்றிட்டுக்கொண்டிருந்தார். அவர் சிறைக்குள் "நீ மார்சேல்ஸில்செய்த வீரச் செயலை உலகம் வியக்கிறது" என்றொரு சீட்டெழுதி நுழைத்துவிட்டு, அந்தப்பக்கிரி மறுபடியும் கப்பலேறிக் கொழும்பு வழியாக இங்கே வந்து சேர்ந்தார்.

ஐயர்: யாரந்தப்பக்கிரி—ஏதோ கதை பேசுகிறீரே.

மாட: சாமீ, அந்தப்பக்கிரிதான் லண்டனில் சாவர்காருக்கு வலதுகையாயிருந்தவர்; அவரே டிங்கிரா கையில் ஊசி ஏற்றியவர்; அவரே கர்சான்வில்லி கொலைக்குப் பிறகும் லண்டனில் கூட்டம் போட்டு "தேசத்திற்காக இரத்தம் சிந்துங்கள்" என்று வீறிட்டார். கார்சான் வில்லிக்காக நடந்த அனுதாபக் கூட்டத்தில் சாவர்க்கார் டிங்க்ராவை மெச்சிப் பேசினார்! ஆங்கிலேயர் 1857–முதல் செய்த படுகொலை அட்டூழியங்களைக் கண்டித்தார். அப்போது ஒரு சார்ஜெண்டு சாவர்காரை முகத்தில் அறைந்தான்! சாவர்காரின் மூக்குக் கண்ணாடி உடைந்து இரத்தம்சிந்தியது; உடனே தம் கைக்குட்டையால் இரத்தத்தைத் துடைத்து, சட்டைப்பையிலிருந்த ரிவால்வாரை எடுத்து, அந்தச் சார்ஜெண்டைச் சுடப்போனார்;. சாவர்காரே அவரைத் தடுத்தார். அவரே சாவர்காரைச் சிறையில் பார்த்துத் தாமும் சிறைபுகுவதாகச் சொன்னார்; "நண்பா, போ, இந்தியாவுக்கு; அங்கே வேலை ஏராளமாயிருக்கிறது" என்று முடுக்கினார். ஐயர் விக்ரமசிங்காக மாறிப் பாரிஸுக்கு வந்தார்.

மாதாம் காமாவுடன் தங்கிப் போர்ப் பயிற்சியில் தேர்ந்தார். இச்சமயமே சாவர்காரைப் பிரிட்டிஷ்புலிகள் கப்பலில் இந்தியாவுக்குக் கொண்டுசென்றனர். மார்சேல்ஸில் சாவர்கார் மிகத்தந்திரமாக மல அறைக் குழாய் வழியாகக் கடலில் இறங்கி, அலைகளை நீந்திக் கரைக்கு வந்து சேர்ந்தார். அங்கே ஐயர் மோட்டார்வைத்துக் காத்துக்கொண்டிருந்தார். ஆனால் அதற்குள் பிரெஞ்சுபோலீஸ் அவரைப் பிரிட்டிஷ் புலிகளிடம் பிடித்துக் கொடுத்துவிட்டது.

ஐயர்: (வியச் சிரிப்புடன்) இதெல்லாம் உமக்கு எப்படித் தெரியும்—?

மாட: சரியான பேர்வழியிடமே கேட்டுத் தெரிந்தது.........இன்னும் எத்தனையோ தெரியும்.

ஐயர்: சரி. பேசாமல் இரும், சுற்றிலும் ஒற்றர்......

மாட: ஐயரே, நீர் ஒற்றருக்குப் பயந்த பேர்வழியா? அவர்கள் கவனத்தைப் பிரஜில் பக்கம் திருப்பிவிட்டு டபாய்த்த பேர்வழியல்லவா நீர்? "நான் பிரஜிலுக்குக் கப்பலேறிச் செல்கிறேன்; இனி இந்தியாவுக்கு வரமாட்டேன் என்று கட்டுக் கட்டாகக் கடிதம் எழுதி மாதாம்காமாவிடம் கொடுத்துவிட்டு......

ஐயர்: உஷ் ...... போதும் கதை...... உமக்கெப்படித் தெரியும் நான் கடிதம் எழுதியது.

மாட: ஐயா, நீர் பாரிஸிலிருந்து புறப்பட்டு இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்த

போதுதான் மாதாம் காமா கடிதக்கட்டு களை ஒவ்வொன்ருகக் காலிசெய்து தபாற் பெட்டியிற் சேர்த்தான்......கடைசிக் கடிதத்தில் தாங்கள் "நான் பிரேஜிலில் விவசாயம் செய்து கொண்டிருப்பேன்; அங்கே நிலம் மலிவு; எனக்குதவியாக ஏராளமான தமிழர் வேண்டும்—விரும்பினவர்களைச் சேர்த்து அனுப்பலாம்— என்று அப்பாவுக்கு வந்த கடிதத்தை நான் அறிவேனையா.

**ஐயர்:** இந்த உளவறிந்த நீர் ஒற்றரே. போம் வெளியே.

**மாட:** ஐயா நான் ஒற்றனில்லை. ஒற்றனுக்கு விரோதி; எந்தச் சர்க்காருக்கு ஒற்றன் நாய் வேலை செய்கிருனே அந்தச் சர்க்காருக்கு முழு விரோதி—பாரும் தீட்டி வைத்திருக்கிறேன்.

மாடசாமி திடீரென்று தன் இடுப்பில் மறைத்து வைத்த வாளை எடுத்துப் பளபளவென்று காட்டினன். ஐயர் கலகலவென்று சிரித்தார் — அந்த வாளை வாங்கிப் பார்த்தார்.

**ஐயர்;** சரி, இதைக்கொண்டு என்ன செய்யப்போகிறீர்?

**மாட;** என்னவா? இதனுலேதான் என் வீர விரதம் முடியப்போகிறது— நமது தேசத்தைப் பாழ்படுத்தும் அன்னியர் விதியும் முடியப்போகிறது.

**ஐயர்:** உமது பேச்சு உண்மையா? உமது நெஞ்சம் தேச பக்தியால் துடிக்கிறதா?

**மாட:** ஆம், ஆம்—ஐயா ஆம். எனது நெஞ்சில் வேகும் தீ லண்டனுக்குத் தாவுகிறது. நான் பாரதமாதாவின் பலிதானம்.

**ஐயர்** உமது பலிதான உணர்ச்சி உண்மையானுல், இதே வாளால் கையில் இரத்தம் அறுத்துக் காட்டும்; தன் இரத்தம் சொட்டக் காண்பதே புரட்சியின் முதல் சிக்ஷை.

மாடசாமி தாமதிக்கவில்லை...மணிக்கட்டில் சட்டென்று ஒரு குத்துக்குத்தினன்—இரத்தம் இரத்தினமாலைபோல் சொட்டியது. அதில் ஒரு துளி எடுத்து ஐயருக்கே பொட்டுவைத்தான். பிறகு மஹாகாளிக்குப் பொட்டுவைத்தான்.

**ஐயர்:** மாடசாமி! உன் இரத்தம் புனிதமான வீர ரத்தம்—இனி நீ அடுத்த காரியத்தைச் செய்யலாம். உன் வாளும் புனிதமானது. இப்படிப் பேசியபோதே பாரதியார் வந்துசேர்ந்தார். உடனே கலகலவென்று சிரித்தார்.

**பாரதி:** அட மாடசாமியா; எனக்கு முன்னே வந்துவிட்டாயே—ஐயரே ஆளைப் பாருங்கள்—சரியான வீரன்— உமக்கேற்ற வீரன். அட இதென்ன இரத்தம்,—? ஆஹா அதற்குள் காட்டிவிட்டாயா உன் வீரவரிசையை—

ஓம் சக்தி ஓம்சக்தி ஓம் பராசக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்–
வெற்றி வடிவேலன்–அவனுடை
வீரத்தினைப் பணிவோம்
சுற்றி நில்லாதே போ–பகையே
துள்ளி வருகுது வேல் –

பாரதியார் மெச்சியபிறகு ஐயருக்கு உறுதி ஏற்பட்டது.

அன்றுமுதல் மாடசாமி புதுவைப் புரட்சி இயக்கத்திற்கு உயிராய் இருந்தான். ஐயருக்குக் காவலும் உதவியுமாயிருந்தான். ஆயுதங்களை வரவழைப்பது ஒளித்து வைப்பது, தருவது பெறுவது, பழக்குவது, எல்லாவற்றிலும் ஐயருக்குத் துணை செய்தான். ஆஷ் கொலைக்குப் பிறகு ஐயருக்கு ஏற்பட்ட ஆபத்துகள் பல. அவற்றைத் தாண்ட ஐயருக்கு அரிய உதவி செய்து மந்திரி போல விளங்கினன் மாடசாமி. மாடசாமியை ஒற்றர் துரத்திய மணியமாயிருந்தனர். ஆனுல் ஆசாமி நாளொரு வேஷம் பொழுதொரு இடமாயிருந்து ஒற்றர் கண்களில் பொடி தூவினன். இவ்வளவு ஆபத்தோடும் மாடசாமி யாரையும் பிச்சை கேட்டதில்லை. பொய் சொன்னதே இல்லை.

ஒருநாள் அவன் பரதேசிக் கோலத்துடன் ஒரு வீட்டில் இரகசியமாக — ஒரு தேசீயப் பணியில் ஈடுபட்டிருந்தான். ஒற்றர் வந்துவிட்டனர். ஒருவன் மெல்ல உள்ளே புகுந்து "தாங்கள் யார்? என்ன பெயர்" என்று கேட்டான்.

"ஐயா நான் யார் என்று அறியத்தானே இவ்வளவு பாடுபடுகிறேன். நானுர் என்பதை அறிந்துகொண்டால், இந்த உடல் இங்கே இராதே—ஹா—

பரமசிவம். என்னப்பனே—"என்று விபூதி இட்டுக்கொண்டு அப்படியே கண்ணை மூடிக்கொண்டான். ஏதோ ஞானப் பைத்தியம் என்று அந்த ஒற்றன் சென்றான். மற்றோர் ஒற்றன் "அந்தப் பரதேசியை நல்லாப் பார்க்கணும்" என்று மெல்லப் புகுந்தான்.

பரதேசியைக் காணோம். சட்டை போட்ட ஒரு கனவான் வீட்டுப் பின்புறம் சென்று எங்கோ மறைந்தார்.

இப்படி மாடசாமி பலதடவை ஒற்றரை ஏமாற்றி ஒளிந்து திரிந்தான். ஒருமுறை அவனுக்குக் கொடிய அதிசாரம் கண்டது; வைத்தியரிடம் அவனைக் கொண்டு செல்ல நண்பர் வந்தனர். "ஐயா வைத்தியசாலைக்குச் சென்றால் என் பெயர் சொல்லியே மருந்து வாங்க வேண்டும்"

நண்பர்: ஏன் புனை பெயர் சொல்லி விடலாமே—கேட்டால் இந்த வீட்டு விருந்தாளி—மதுரைப்பேர்வழி என்கிறோம்.

மாட: அது சரியில்லை; அப்படிப் பொய் சொல்லிப் பிழைப்பதைவிட நான்நோயால் இறப்பதே மேல்.

மாடசாமி எந்த வைத்தியரையும் நாடவில்லை — பாரதமாதாவையும் ஐயரையுமே நினைத்துத் தைரியமாயிருந்தான். நோயும் தீர்ந்தது......

அந்தக்காலமே முதல் உலகப்போர் கடுமையாக நடந்தது. எம்டன் இந்தப் பக்கம் வந்தது. ஒற்றர் ஐயரை இரவும் பகலும் காவல் காத்தனர். ஐயரை அல்ஜீரியாவுக்கும் அனுப்ப முயன்றனர்—பலிக்கவில்லை. இக்காலம் துருக்கி ஜர்மனியுடன் சேர்ந்தது.

மாடசாமி உள்ளம் துடிதுடித்தது, "ஐயரே போரில் சேர்ந்தாவது என் வீரத்தினவைத் தீர்க்கிறேன்" என்று கிளம்பினான்.

பாரதியாரும் ஐயரும் விருந்து வைத்து நல்லுரை கூறி, மாடசாமியைக் கப்பலேற்றினர். மாடசாமி துருக்கியில் நடந்த போரில் கலந்து வாட் பணி செய்து திரும்பினான். அதன் பிறகு அவன் தீரா நோயால் வருந்தினான்—எனினும் தேசத்தையும் ஐயரையும் மறக்கவில்லை.

இறுதிக் காலம் மாடசாமி ஐயரிடம் தன் வீரவாளைத் தந்து, "தேசமே என் பாசம்—தேச விடுதலையே மோட்சம்—தேசபக்தியே தெய்வபக்தி—இந்தவாளே என் தேசபக்திக்கு அடையாளம்" என்றான்.

ஐயர் தம் வாளை "மாடசாமி" என்றே அழைப்பது வழக்கம். ஆனால் இது அவர் மனத்துள் இருக்கும். மாடசாமியை இன்று நாம் நினைக்கவேண்டும்.



தொடர் கதை




கே. சுந்தரம்மாள்

5

மூன்று வருஷகாலம் மோஹினியின் வாழ்வு தெவிட்டாத இன்பத்தில் கழிந்தது. காதலின் ஜோதியில் வெளியுலகமே அவர்கள் கண்களுக்குத் தென்படவில்லை. ராஜாராம் தமது பெற்றோர் இருக்கும் ஊருக்குள் மட்டும் மோஹினியை அழைத்துச் செல்லமாட்டார். அவ்விடம் போகும் சமயங்களிலெல்லாம் மோஹினியைத் தாயாரிடம் விட்டுச் செல்வார். மற்றப்படி அவர் மாற்றலாகிச் செல்லும் ஊர்களுக்கெல்லாம் மோஹினியை அழைத்துச் செல்லுவார். பார்ப்பவர்கள் பொருத்தமான தம்பதிகள் என்று கொண்டாடுவார்கள். உயர் குடும்பப் பெண்களைவிட, மிக்க மேன்மையான முறையில் குடும்பத்தை நிர்வகித்து வந்தாள். அவள் தமக்குச் செய்யும் பணிவிடைகளையும், மிக்க சிரமக வீட்டு நிர்வாகத்தை வகிக்கும் பாணியையுங்கண்டு மிக்க ஆச்சர்யப்படுவார் ராஜாராம். தேனில்விழுந்த ஈயின் நிலைமையை அடைந்த ராஜாராம், பெற்றோர் ஏற்பாடு செய்யும் கல்யாணத்திற்கு இணங்காததுபற்றி ஆச்சர்யமில்லை.

கொஞ்சகாலம்வரை கல்யாணம் அவசரமில்லையென்று சொல்லிவந்தார். பிறகு இவர் மோஹினியுடன் வாழ்க்கை நடத்துவது பெற்றோர் காதிற்கு எட்டவே, புதல்வனை அழைத்து, இச்செய்கைபற்றி விவாதித்தார்கள்.

"என்னவானாலும் மோஹினியைக் கைவிடமுடியாது. அவளைப் பிரிந்து மற்றொரு பெண்ணுடன் வாழ்க்கை நடத்த முடியாது" என்று கண்டிப்பாகத் தெரிவித்தார்.

"மோஹினியும் இருக்கட்டும். அவளை விடவேண்டாம், ஏக புத்ரனை நம்பியிருக்கும் எங்கள் வம்ச விளக்கு அணையாமல் ஏற்ற, நம் மரபில் ஓர் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்" என்று வேண்டினார்கள்.

"மோஹினியினால் ஏற்படும் வம்ச விளக்கே சுடர்விட்டுப் பிரகாசிக்கும். நான் கல்யாணம் செய்துகொள்ள முடியாது" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

தமது புதல்வன் இவ்வளவு உயர்வாகக் கொண்டாடும் அம்மோஹினி எப்படியிருக்கிறாள் என்று பார்த்துவிட்டுத்தான் வருவோமே என்ற சிந்தனையுடன் தந்தை மட்டும், ராஜாராம் மோஹினி குடும்பம் நடத்தும் ஊருக்கு வந்தார். அவர் பங்களாவிற்குள் நுழையும் சமயம் ராஜாராம் வெளியில் சென்றிருந்ததினால் மோஹினியே வரவேற்றாள். வேலைக்காரன்வந்து "யஜமானனுடைய தகப்பனார் வந்திருக்கிறார். வாசல் வராந்தாவில் உட்கார்ந்திருக்கிறார்" என்று சொன்னவுடனேயே, சட்டென வெளியில் வந்து அவர் பாதத்தில் விழுந்து வணங்கினாள் மோஹினி.

"அவளைக் கண்டதுமே அவர் மனதில் ஓர் வித ஆனந்தமேற்பட்டது. தீர்க்க சுமங்கலி பவ" என்று வாழ்த்தினார்.

"ஆஹா! என்ன ஸௌந்தர்யம்! ராஜாராம் இவளைப் பிரியேனென்றதில் ஆச்சர்யமென்ன? அழகுக்கேற்ற அடக்கமான குணமும் இருக்கும்போலும். சாந்த சொருபியான தேவதைபோல் தோன்றுகிறாளே" என்றது அவரது மனம்.

அவர் எண்ணியது வீண் போகாமல் மிக்க பணிவாகவும் அன்பாகவும் நடந்து கொண்டாள் மோஹினி.

சமையல் அறைக்குள் தான் செல்லாமல் சமையல்காரனைக் கொண்டே அவருக்குச் சாப்பாடு டிபன் முதலியன ஏற்பாடு செய்தாள். அவர் வந்தவுடனேயே "தாங்கள் என்னைக் கௌரவிக்க வந்ததுபற்றி மிகவும் ஆனந்தமாக இருக்கிறது. இது தங்கள் வீடு. தங்கள் இஷ்டம்போல் எல்லாம் நடத்திக்கொள்ளலாம். பிராமணப் பையன்தான் சமையற்காரன். நான் சமையலறைப் பக்கம் வரவேமாட்டேன்" என்ருள். ராஜாராம் சாயங்கலம் வருவதற்குள் அவருக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்தாள். பிறகு அவ்விடமிருந்த பத்து நாளும் ஸ்வர்க்கானுபவமாகவே தோன்றிற்று அவருக்கு. ராஜாராம் மோஹினி இருவரும் வெகு அன்பாக நடந்துகொண்டார்கள். காரில் இருவரும் சேர்ந்தே அவரைப் பல இடங்களுக்கு அழைத்துச் செல்லுவார்கள். ஸ்தலங்களில் சுவாமி தெரிசனத்திற்கு மூவரும் போலீஸ் அதிகாரத்துடன் சென்று வரும் பொழுது, "சரியான ஜோடிகள், மனமொத்த தம்பதிகள்" என்று பலர் பேசிக்கொள்ளுவது அவர் காதில் விழும் பொழுது மனம் பூரிப்படையும். 'ராஜாராம் கல்யாணம் செய்துகொள்' என்று சொல்ல அவர் மனதில் கொஞ்சங்கூட இடமில்லை.

அதிலிருந்து மாதத்தில் பத்துநாள் இவர்களிருக்குமிடம் வந்து தங்கிப்போவது சர்வ சகஜமாகிவிட்டது. ராஜாராம் அஸிஸ்டெண்ட் கமிஷனராக நியமனம் பெற்ற சமயம் அவர் தந்தை வழக்கம்போல் அவரிடம் வந்திருந்தார். அன்று ராஜாராம் காம்ப் சென்றிருந்தார். சாயங்காலம் ஐந்துமணி சமயத்தில் பங்களாவின் முன்புறம் தோட்டத்தில் ஈஸிச்சேரில் சாய்ந்துகொண்டு ஏதோ சிந்தனையிலாழ்ந்திருந்தார் ராஜாராமின் தந்தை. ஒரு வெள்ளித் தட்டில் ஆரஞ்ச் ஆப்பிள் முதலிய பழங்களை வைத்து எடுத்துக்கொண்டு அவ்விடம் வந்தாள் மோஹினி.

அவள் காலின் மெட்டிச் சப்தம் கேட்டுத் திரும்பிய பெரியவர் "வா அம்மா! இப்படி உட்கார்" என்று எதிரிலிருந்த பளிங்காசனத்தைச் சுட்டிக் காண்பித்தார்.

நறுக்கின பழத்துண்டங்களையும் உரித்த ஆரஞ்சுகளையும் தட்டுடன் அவர் பக்கம் வைத்துவிட்டு அவர் காண்பித்த இடத்தில் உட்கார்ந்துகொண்டாள்.

"உன் அன்பின் பணியை எப்படிப் போற்றுவது என்பது தெரியவில்லை. பெற்ற பெண்கூட இப்படிச் செய்யமாட்டாள். தாகமாக இருக்கிறதே ஆரஞ்சு சாப்பிடலாமா என்று நினைத்தேன். நினைத்த கணமே பழத்துடன் வந்துவிட்டாய். உன் மாமியாரிடம் உன்னைப்பற்றிச் சொல்லுவேன். ஆனந்தமாகக் கேட்டுக் கொள்ளுவாள். சமீபத்தில் உன்னைப் பார்க்க வேண்டுமென்றுகூட ஆவலாக இருக்கிருள். ஆனுல்........." என்று இழுத்த வண்ணம் ஆரஞ்சு சுளையை எடுத்து வாயில் போட்டுக்கொண்டார்.

"எனக்கும் அவர்களைப் பார்க்கவேண்டுமென்று மிகவும் ஆவலாக இருக்கிறது. என்னைப் பார்த்தால்கூட தோஷமா? நீங்கள் மனமிரங்கி என்னை ஒருதடவை உங்கள் ஊருக்கு அழைத்துச் சென்று அவர்களைத் தெரிசிக்கும் பாக்யம் கிடைக்கும்படி செய்யலாகாதா? அவரிடம் எவ்வளவோ முறை கேட்டேன். அவர் சம்மதப்படவில்லை"

"உன்னை நாட்டுப் பெண்ணுக அடைந்தது பற்றி எங்கள் ஹ்ருதயம் அடையும் ஆனந்தம் சொல்லத்தரமன்று. உன் படத்தைப் பார்த்துப் பார்த்து ஆனந்தமடைவாள் உன் மாமியார். என்னசெய்வது? பாழும் சமூகத்திற்கு நாங்கள் கட்டுப்பட்டே ஆகவேண்டியிருக்கிறது. பிரம்ம குலத்தில் பிறந்துவிட்டதினுல் அதன் தன்மையை விடமுடியாதல்லவா? யாராக இருந்தாலும், குலத்தின் முக்ய கடமையைச் செய்துதானுகவேண்டும். வருங் காலத்தில் சமூகத்தின் முன்னணியில் நிற்கும் வாலிபர்கள் வேண்டுமானுல் உன்னத லக்ஷ்யத்தை நிறைவேற்ற முடியும். இன்னும் சமூகமானது பக்குவமடையாத நிலைமையில் தனிப்பட்ட ஒருவன் என்ன செய்யமுடியும். தானுகக் கனிந்த பழத்திற்குத்தான் ருசி அதிகம். தடிகொண்டு அடித்தால் வெம்பி ஒருவருக்கும் உபயோகமில்லாமல் போய்விடும். அதுபோல் அகண்டமான சமூகத்தின் கொள்கையை நான்மட்டும் மீறி நடப்பது சாத்யமாகுமா? அதனுல்தான் அவளும் வரவில்லை. உன்னையும் அழைக்கவில்லை. மேலும் உன்னிடம்......" என்று நிறுத்தினுர்.

"என்னமோ சொல்ல வந்து, நிறுத்திக் கொண்டுவிட்டீர்களே, ஏன்?"

ஒரு நீண்ட மூச்சு விட்டுவிட்டு "மோஹினி, உன்னிடம் எப்படிக் கேட்பது என்று என் மனம் அஞ்சுகின்றது.''

''நன்றாக இருக்கிறது உங்கள் பேச்சு. நீங்கள் என்மீது வைத்திருக்கும் பாசத்தை என் மனம் அறியாதா? நீங்கள் எது சொன்னாலும் என் மனம் ஏற்கும். விஷயத்தைச் சொல்லுங்கள்''.

''சற்றுநேரம் அவளை உற்றுப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். பிறகு ஒரு நீண்ட மூச்சு விட்டுவிட்டு, ''மோஹினி! உன்னிடம் ஒரு விஷயம் யாசிக்கிறேன். நீ மனம் வைக்காவிடில், சமூகத்தின் முன் தலைவணங்கி எனது முடிவை எதிர்பார்க்கவேண்டியதுதான்'' என்றார் தழுதழுத்த குரலுடன்.

திடுக்கிட்டவளாக, ''ஐயோ' இதென்ன இப்படிப் பேசுகிறீர்கள்? கட்டளையிடுங்கள். எதுவானாலும் சிரசால் வகித்துச் செய்கிறேன். வீணாக என்னை அபராதியாக்காதீர்கள்'' என்றாள்.

''மோஹினி! ஓடம் வண்டி ஏறும் காலமும் உண்டு. வண்டி ஓடமேறும் காலமும் உண்டு. உன்னை யாசிப்பதினால் எனக்குக் குறைவில்லை. நான் உன்னிடம் கேட்பது ஒரு வரம். எங்கள் வம்ச விளக்கு அணையாமல் பிரகாசிக்கவேண்டும். ராஜாவின் உள்ளத்தில் இக்கடமை முக்கியம் என்பதை நீதான் தெளிவு படுத்தவேண்டும். என் மனப்பூர்வமாக நீ ஏற்றிவைக்கும் தீபமே ஜோதியாகப் பிரகாசிக்கும் என்று நம்புகிறேன். ஆனால் சமூகத்தின் கட்டுப்பாட்டின் சாகரத்தில் கடமையின் அலைகளைக் கடக்க இதை யாசிக்கிறேன். உன் வாழ்க்கையை இது எவ்வளவுதூரம் பாதிக்கும் என்பதை அறிந்தும் உனக்குத் துன்பத்தைத் தருவதற்கே யாசிக்கிறேன்'' என்று சொல்லும்பொழுதே தொண்டை அடைத்தது. கண்களில் நீர் நிரம்பிற்று.

''அட! இவ்வளவுதானே. இதற்கு ஏன் இவ்வளவு வருத்தப்படுகிறீர்கள்? கவலையை விடுங்கள். இந்த விஷயத்தில் உங்கள் மனச்சாந்திக்காக நான் எந்த விதத் தியாகமும் செய்யத் தயார். உங்கள் அன்பிற்கு இதுகூடக் கைம்மாறாகாதே'' என்றாள்.

''மோஹினி! நீ ஒரு தெய்வப் பெண். தவறித் தாசி குலத்தில் பிறந்துவிட்டாய். என்னுடைய இந்த மனச்சாக்ஷிக்கு விரோதமான கடும் சொற்களை எவ்வளவு உயர்ந்த குடும்பப் பெண்களும் அங்கீகரிக்கமாட்டார்கள். உனக்குக் கைம்மாறு என்னால் கொடுக்கக்கூடியதல்ல. இருந்தாலும் எனது ஓர் மனத் திருப்திக்காக ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எனது சொத்து முழுவதும் நானே தேடியது. அதை என்னிஷ்டப்படி செய்யச் சட்டம் இடமளிக்கும். அதனால் சரிபாகம் உனக்கும், சரிபாகம் எங்களுக்குப்பின் ராஜாவிற்கும் எழுதிவிடுகிறேன். பிரியப்பட்டால், ஒற்றுமையிருக்குமானால் சேர்ந்து இரு. இல்லையேல் தனிப் பங்களாவில் இரு. ராஜா உன்னுடன்தான் அதிக நேரத்தைக் கழிப்பான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. நான் வந்தாலும் உன்னிருப்பிடமே தங்குவேன். ''இது சத்யம்'' என்றார்.

''ஐயோ! இவையெல்லாம் எதற்கு? என்னை அவர் ஒருநாளும் புறக்கணிக்கமாட்டார். இவ்விஷயத்தில் மிக்க பிரயாசையுடன்தான் வெற்றிபெறவேண்டும். என்மீதுள்ள அன்பின் காரணமாகவே வாக்குறுதி பெறவேண்டும். அவ்வளவே. நீங்கள் கவலையை விடுங்கள். உங்கள் மனோரதம் பூர்த்தியாகும்'' என்றாள்.

## 6

ஆகாயத்தில் பூர்ண கலையுடன் பவனி வந்துகொண்டிருந்தான் ஸோமதேவன் சரத்ருதுவில். பங்களாவின் பக்கத்திலுள்ள புஷ்பத்தோட்டத்து மத்தியில் போடப்பட்டிருந்த சிமிண்ட் பெஞ்சியில் தனது கையால் தலையைத் தாங்கியவண்ணம் ஆகாயத்தை நோக்கியவாறு படுத்திருந்தாள் மோகினி.

மாமனாருக்கு வாக்களித்துவிட்டாள். ஆனால் தன் காதலனைப் பிரிவது, காதலைப் பங்கீடு செய்வது என்பதை நினைக்க அவள் ஹ்ருதயத்தைப் பிளப்பதுபோன்ற வேதனையடைந்தது. அடுத்த நிமிஷம் பெரியவரின் பரிதாபகரமான கவலை தோய்ந்த முகம் மனத்திரையில் தோன்ற, அவரது ஒவ்வொரு சொற்களும் அவள் ஹ்ருதயத்தைத் தொட்டன. இப்படி மாறி மாறி எழும் எண்ண அலைகளுக்கு முடிவு ஏற்படாமல் கொந்தளித்தது மனக் கடல். கடைசியில் பெரியவரின் பரிதாபகரமான சொற்களே வெற்றிபெற்றன. எப்படியாவது ராஜாராமின் மனதைத் திருப்பவேண்டியது, தனது வாழ்க்கையில் முக்கியமான கடமை என்ற முடிவிற்கு வந்த சமயம்,

''நான் தான் உண்மையான சந்திரன் யார் என்பதை நிர்ணயிக்க முடியாத நிலை

மையில், இரு சந்திரனின் குளிர்ச்சியில் மயங்கிப் பித்தனாய் நிற்கிறேன். நீ எதைப் பற்றிய சிந்தனையில் லயித்திருக்கிறாய் மோஹினி, நான் வந்து பதினைந்து நிமிஷமாக நிற்பதைக்கூட அறியாமல்?'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

''வேண்டாம் ஏன் எழுந்திருக்கிறாய்? இந்த நிலவில் இன்று நீ படுத்திருந்த லாவண்யத்தை ஓர் சைத்ரீகன் பார்த்திருந்தால் என்றும் அழியாத திரையில் புகுத்தியிருப்பான். நான் அவசரப்பட்டு விட்டேன். இன்னும் சற்று நேரம் அனுபவிக்காமல்'' என்று சிரித்தவாறு கூறிக்கொண்டே உட்கார்ந்து தமது மடிமீது மோஹினியைப் படுக்க வைத்துக் கொண்டார்.

''ஏது கவிபாடத் தொடங்கி விடுவீர்கள் போலிருக்கிறதே. அந்த ரோகிணியின் லாவண்ய ஒளி நாளுக்கு நாள் எவ்வித இன்பத்தைக் கொடுக்கின்றதோ, அதைவிட மோஹினியின் காதலனின் அறிவின் ஒளி நாளுக்குநாள் எனது ஒவ்வொரு நரம்பிலும் அளவிட முடியாத இன்பரசத்தைப் பெருக்குகின்றது. பூர்வ ஜன்மத்தில் நான் நல்ல மல்லிகை மலரை எடுத்துத் தேவியைப் பூஜை செய்திருப்பது உண்மை. மல்லிகையின் நிறம் போலுள்ள தூய்மையான உள்ளம் படைத்த அன்பனை யடைந்து களிக்கும் பாக்யம் கிடைக்குமா? உங்களது வீரரசம் பொருந்திய முகத்தைக்காண வெட்கி மேகத்தினுள் மறைந்துகொண்டான் காமத்தில் மதிமயங்கிய தாரகையின் காதலன்'' என்று அவர் மோவாயைப் பிடித்துத் திருப்பிச் சந்திரனை பார்க்கும்படி செய்தாள்.

''இல்லையடி பாலே! செந்தாமரையை யொத்த முகத்திலுள்ள நீலோத்பலம் போன்ற நேத்திரங்களைக் கண்டு''

''ஓ! என்ன! கவிக்குமேல் கவியாகப் பெருகுகிறதே. இனி புலவர் பெருமானே என்றுதான் அழைக்கப் போகிறேன்.''

''சந்திரனைக்கண்டு சமுத்திரம் பொங்குவதுபோல் உன் முகத்தைக் காணும் தோறும் என் ஹ்ருதயாகாசத்தில் கவி மேகந்தான் தோன்றுமா? இந்திர ஜால வித்தைகூடத் தோன்றும். பார், இன்னும் கொஞ்சநாளில் பவானிபுர சமஸ்தானத்தில் நடக்கும் கவிப்போட்டியில் பரிசு கூட வாங்கிவிடுவேன்''

''பவானிபுரம் கவிப்போட்டி யென்ன, அவ்வளவு பெருமை பெற்றதா?''

''சந்தேகமென்ன? இப்போதிருக்கும் ஜமீந்தாரைச் சகல கலா வல்லவர், என்றே சொல்ல வேண்டும். கலைமாது சாந்நித்தமாக இருக்கிறாள் அவ்வூரில். சித்திர கலா சாலை, நாட்யகலாசாலை, சம்ஸ்கிருத பாடசாலை, தமிழ்ச் சங்கம் எல்லாம் சகல சௌகரியங்களுடன் நடந்து வருகின்றன. ஏழை மாணவ மாணவிகள் நன்கு கவனிக்கப் படுகிறார்கள். வருஷந்தோறும் சிறந்த பரிசு அளிக்கப்பட்டு வருகின்றன. எல்லா வற்றையும்விட உலக முழுவதும் நாட்டியத்தில் சிறந்தது பவானிபுரம் என்று போற்றவேண்டும், எந்தத் தேசத்து நாட்டியக்காரர்கள் வந்தாலும் தமது சம்ஸ்தானத்திற்குத் தலைவணங்கியே செல்லவேண்டும். சகல தேச நாட்டியங்களும் தமது சம்ஸ்தானத்தில் கற்பிக்கப்பட வேண்டுமென்று ஒவ்வொரு தேசத்து நடன ஆசிரியர்களையும் அதிக ஊதியம் கொடுத்து ஏற்படுத்தியிருக்கிறார். அகில நடன மஹாநாடு கூட்டவேண்டுமென்று அதற்குத் தகுந்த பெண்மணியைத் தமது சம்ஸ்தானத்திலேயே தேடிக் கொண்டிருப்பதாகவும் பிரஸ்தாபம். பூர்ண கலையுடன் நடனம் சோபிக்கப் பத்துப் பன்னிரண்டு வருஷமாவது செல்லும். ஒரு சமயம் உதயமாகப் போகும் ஜீவன் பெண்ணாக இருக்குமானால் அவளே அவரது லக்ஷ்யப் பெண்ணாக இருக்கலாம்.''

''அப்பா, எவ்வளவு மனக்கோட்டை'' என்று சிரித்தவாறு கூறிக்கொண்டே அவர் கன்னத்தை லேசாகக் கிள்ளினாள்.

''ஏன்? கனவு நனவாகக் கூடாதா?'' என்றார் அவளை உற்று நோக்கியவண்ணம்.

''ஏன்? பெண்தான் நனவாக்க வேண்டுமா? தாயே நினைவாக்கினால்'' என்ற ஓர் சிறிய சிந்தனை தோன்றவே மாமனாரின் வேண்டுகோளை நிறைவேற்ற இது ஒரு சாதனமாகும் என்ற சிந்தனையில் எவ்விதமாகப் பேச்சைத் துவக்குவது என்ற பிரச்னையில் காதலின் ஒளி கண்களில் திகழ அவரையே புன்சிரிப்புடன் உற்றுப் பார்த்தவண்ணமிருந்தாள்.

''அப்பார்வையின் சக்தியைத் தாங்க மாட்டாது இன்பலாகிரிகொண்டு, குழந்தையைப்போல் வாரியெடுத்து..............'' அந்த ஸ்பர்சத்தின் உத்வேக உணர்ச்சியில் கண்களை மூடியவண்ணம் மதுவுண்ட வண்டைப்போலக் கழுத்தில் கைபோட்டு முகத்துடன் முகம் சேர்த்தாள். மெய் மறந்த அந்த நிலைமையில் மாமனாரின் வேண்டுகோள் மனதில் தோன்ற ''ஐயோ!





VWR. 23-23 TM

VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND

என்ன கொடுமை! இவ்வின்பத்தைப் பகிர்ந் தளிக்கவா?'' என்றது அவள் மனம்.

சற்றுப் பொறுத்து மறுபடியும் அவளைத் தம் மடிமீது படுக்கவைத்துக்கொண்டு கை வளைகளை முன்னுக்குப் பின்கைத் தள்ளிய வண்ணம், ''மோஹினி! கர்ப்பவதி களுக்கு விநோதமான ஆசையெல்லாம் தோன்றுமென்பார்களே! உனக்கு அப் படி ஏதாவது தோன்றினால், அதை வெளி யிட்டால் என்ன நினைப்பார்களோ என்று நினைக்காமல் உன் மனதில் தோன்று வதை வெளியிடு. அதன்படி நான் நடக் கிறேன். செய்கிறேன், நாம் அப்படி இருந் தால்தான் நமது காதலின் உண்மைத் தத் வம் புலனாகும்''.

''எனக்கு அப்படி ஒன்றும் தோன்ற வில்லையே''.

''ஊம், நான் நம்பமாட்டேன். ஏதா வது உன் மனதில் இருக்கும். நீ ஏதா வது கேட்டால்தான் எனக்குத் திருப்தி யாக இருக்கும்''

சற்று நேரம் சிந்தனை செய்தாள். 'காற் றுள்ளபோதே தூற்றிக் கொள்' என்பது போல், நாம் இத்தருணத்தைக் கைநழுவ விடக்கூடாது என்ற முடிவிற்கு வந்தாள். ஆனால் விஷயம் தனது ஜீவனைவிட மேலா னதே! எப்படி இழக்க முடியும்? என்று நினைக்கும் பொழுது செயலற்றுவிட்டது மனம். பிறகு இதனாலென்ன? ஏதோ கொஞ்ச நாள் பிரியவேண்டிவரும். பிறகு நாம் எவ்விதத்திலும் வருகிறவளுடன் சமா தானம் செய்துகொண்டு விடலாம். நயந் தால் நாடும் பெறலாம். நமது சுகத்திற்கா கப் பெரியவரின் மனம் நோக என்று நினைக் கும்பொழுது மாமனாரின் பரிதாபகரமான முகத்தோற்றம் அகத்தில் காட்சியளிக்கவே வரம் கேட்க மனம் உறுதிகொண்டது. ''சரி நான் எது கேட்டாலும் உங்களால் நடத்த முடியுமா?'' என்றாள்.

''சந்தேகம் ஏன்? ஆக்ஷேபணையின்றி உனது மனம் எதை விரும்புகிறதோ அதைச் செய்வதில் எதையும் லக்ஷியம் செய்யமாட்டேன். மானாவமானத்தைக் கூடப் பார்க்கமாட்டேன். அச்சமில்லாமல் கேள்.''

''நிச்சயமாக?''

''சத்யமாக''

''பிறகு இப்படிக் கேட்பாயென்று எதிர் பார்க்கவில்லை. அதனால் இதைக் கொஞ் சம் மாற்றிக்கேள் என்றெல்லாம் சொல் லக்கூடாது''

''மோஹினி! ஏன் இச்சந்தேகம்? ஆகாய வாணி பூமாதேவி சாக்ஷியாக உன்வயிற்றி லிருக்கும சிசுவின்மீது ஆணையாக நீசொல் லியபடி நடக்கிறேன் என்றார்''.

''சொல்லட்டுமா?'' என்றாள் புன்சிரிப் புடன். ஆனால் ஹ்ருதயம் கடிகாரத்தின் விசைபோல் அடித்துக்கொண்டது.

''உம்'' என்றார் நிதானமாக அவள் கை யைத் தம் இரு கைகளுக்குமிடையே பிடித் துக்கொண்டு.

''தங்களது வம்ச தீபம் தங்களுடன் அணையாமலிருக்க, உங்களது வயதுசென்ற தந்தையின் மனம் குளிர, தங்கள் கடமை யைச் செய்யவேண்டும்'' என்றாள் உற்று நோக்கியவாறு.

''இது என்ன? அர்த்தமற்ற கேள்வி? வம்ச விளக்குத் தோன்றியாகிவிட்டதே? அப் பாவிற்கு உன் மீது அளவு கடந்த பாசம். பரம திருப்தி. சமூகத்தின் கட்டுப்பாட்டிற் காக விலகி நடக்கிறார் அவ்வளவே,''

''தங்களுக்குத் தெரியாத விஷயமல்ல. எனது வயிற்றுச்சிசுவினால் உங்கள் குலம் ஓங்கிவிடுமா?''

''சந்தேகமென்ன?''

''சபைக்குதவாத பேச்சு. காதல் தெய்வீ கம், ஒன்று பட்டோம் அவ்வளவே. எனது சிசுவைச் சமூகத்தின் முன்னதாக உங்கள் தந்தை தைரியமாக உரிமை கொண்டாடு வாரா? முடியுமா? படிப்படியாகவேதான் ஏறவேண்டும். கீழ்ப்படியிலிருந்து மேல் மாடிக்கு ஒரே தாவாகத் தாண்டினால் கீழே விழுந்து மூக்கு உடைவதே பலனாகும். படிப்படியாக ஏறி வந்தால் காலம், இடம் சேரும்பொழுது லக்ஷ்யம் நிறைவேறும். நாளை உங்கள் பெற்றோர் காலமானால் அந் திமக்கிரியைகளுக்கு நான் வந்து உதவ முடி யுமா? சமூகம் இடந்தருமா? நான் நன் றாக ஆர அமரச் சிந்தனை செய்து தெளிவு பட்டே சொல்லுகிறேன். உங்கள் தந்தை யைப் பார்க்கப் பரிதாபகரமாக இருக் கிறது. நிச்சயமாக உங்கள் குலத்தில் ஓர் கன்னிகையை மணந்து கடமையைப் பூர்த் திசெய்வது அவசியமாகிறது. ஏக புத்ர விஷயமாதலால் என்னால் தாங்கள் கடமை யினின்று தவறுவது என்பது கூடாது என்பதே எனது மசக்கையின் ஹ்ருதய பூர் வமான விருப்பமாகிறது''

இவ்விதமான கேள்வியை எதிர்பார்க்கவில்லையாதலால் திடுக்கிட்டுப்போனார். மனம் சஞ்சலமடைந்தது. தமது வாக்குக் காப்பாற்றப்படவேண்டும். ஆனால் விஷயம் மனதிற்கு முற்றும் ஒவ்வாதது. திக்பிரமை பிடித்துப் பதில் சொல்ல வகையின்றிச் சிலைபோல் அசைவற்று அவளை உற்று நோக்கிய வண்ணம் உட்கார்ந்திருந்தார்.

அவர் வாயிலிருந்து என்னவிதமான பதில் வருமோ. என்ற ஆவலுடன் எதிர் நோக்காகப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

சற்றுப் பொறுத்து, "ஏன் பதிலைக்காணோம்?"

ஒரு நீண்ட மூச்சு விட்டு விட்டு. "மோஹினீ! என் ஹ்ருதய மறிந்த நீயா இப்படிக்கேட்பது? என் ஹ்ருதயாசனத்தில் மற்றவர்களுக்கு இடமில்லையே. கண்ணே! வீணாக என்னைச் சோதனைக்குள்ளாக்காதே" என்றார் தழு தழுத்த குரலுடன்.

நீண்ட மூச்சுக்குப்பின்னர் "என்ன செய்வது? கடமையென்று பலவந்தமாக இடமளித்துத்தான் ஆகவேண்டும்!" என்றாள்.

"மோஹினீ! தற்சமயம் தோன்றும் கடமை. ஒரு எண்ணத்தினால் இப்படிக் கேட்கிறாய். கேட்டபடி செய்துவிட்டால் உன்நிலைமை என்னாகும்? என்னைப்பிரிந்து என்ன செய்வாய்?"

"உங்களைப் பிரியாமலே இருக்கலாம். காலமாறுபாட்டினால் அப்படிப் பிரிய நேரிடுமானால் பவானிபுரம் சென்று வசிக்கிறேன். உங்கள் வாழ்க்கைச் சக்கரம் இடையூறில்லாமல் ஓடட்டும்."

"பவானிபுரம் சென்று என்ன செய்வாய்?"

"நாட்டியத்தின் முன்னேற்றத்தில் பொழுதைக்கழிப்பது"

"என்னைப் பிரியத் துணிந்துவிட்டாய்? நாட்டியத்தில் என்காதலைக் காணமுடியுமா?"

"உங்கள் காதலைக் காணமுடியாது தான். ஆனால் ஜீவியத்தின் லக்ஷ்யத்தைக் காணமுடியும். சற்றுமுன் தாங்கள் சொன்னதிலிருந்து, பவானிபுரம் கலை மன்றமும் அதன் மஹாராஜாவும் பார்க்கப்படவேண்டிய லக்ஷ்யம் என்று தோன்றுகிறது"

'மனம் குரங்கின் தன்மையை உடையது' என்று நன்றாக ஆராய்ந்தே பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்போலும். ராஜாராமின் மனம் ஓர் விநாடி மோஹினிக்கு விரோதமாகச் சிந்தனையில் ஈடுபட்டது. மூன்று வருஷ காலத்தில் ஓர் நிமிஷம்கூடத் தம்மைவிட்டுப் பிரியச்சம்மதிக்காதவள், தகப்பனாரைப்பார்த்துவரும் மூன்று நாளைக்குள் வாடிவதங்கிக் காணப்படுவாள், அப்படிப்பட்டவள் தம்மைவிட்டுப் பிரிந்து வாழ்க்கை நடத்துகிறேனென்றது என்ன ஆச்சர்யம்? மகாராஜாவும் பார்க்கப்படவேண்டியவர் என்ற சொல் சிந்தனையில் வந்து நின்றதும் விரோத உணர்ச்சி மேலே மூந்தது. அந்த உணர்ச்சியில் அவள்யாசித்த விஷயமானது சுயகாரியத்தைச் சாதித்துக் கொள்ளவே, முன் யோசனையுடன் தம்மைத் தம் வார்த்தையைக்கொண்டேமடக்கிவிட்டாள் என்று தோன்றிவிட்டது. பொறாமையின் வேகம் முன் நின்றது. ஹ்ருதயத்திலெழுந்த பொறாமைத் தீச்சுடர் சொற்களில் தெரிந்தது.

"ஏன் இவ்வளவு அக்கறை எனது தந்தையினிடத்தில் என்று நினைத்தேன். மஹாராஜாவின் மீது நோக்கம் விழுந்து விட்டது போலிருக்கிறது அதற்காக இத் தந்திரம் கையாளப்பட்டது போலும்" என்று அவள் கையிலிருந்த தம் கையை இழுத்துக் கொண்டார்.

எதிர்பாராத கடுஞ்சொற்கள் மின்சாரம் தாக்கியது போன்ற உணர்ச்சியை எழுப்பவே, "ஹா! என்ன வார்த்தை சொன்னீர்கள்?" என்றாள். அவ்வளவே அவ்வுத்யானவனம் ஆகாயத்திலுள்ள சந்திரன் எல்லாம் ஓரே சுற்றாகச் சுற்றுவதுபோன்ற உணர்ச்சி யேற்பட்டது. ஹ்ருதயம் பிளந்துவிடும்போல் தோன்றினது. ஹ்ருதயத்தை அழுத்திப் பிடித்தவாறு. "ஐயோ! தங்கள் வாயில் வரும் வார்த்தைகளா இவை. இதைக்கேட்டும் என் ஜீவன் போகாமல் நிற்கிறதே" என்றாள்.

துக்கத்தின் வெப்பம் அவள் தேகமெல்லாம் பற்றி யெரிவதுபோன்று அனல் காய்ந்தது. எந்தச் சொல்லம்பானது ஸ்திரீகளின் ஹ்ருதயத்தை ஊடுருவிப்பாயுமோ அந்தச் சொல்லைத் தாங்கள் இஷ்டவிரோதமாகத் தவறிநடந்த சமயங்களில் பேதையர்கள்மேல் எய்வதற்கு எந்த ஆண்பிள்ளையும் தவறுவதில்லை. இது சர்வ சகஜ அனுபவம். எதிராளியின் ஹ்ருதயத்தைப் பற்றிச் சிந்திக்கப் பொறுமை இருப்பதில்லை. மோஹினி புழுவெனத் துடித்தாள். 'ராம்' என்னைப் பாருங்கள். கற்பக விருக்ஷத்தை அடைந்த பின்பு காஞ்சிரங்காயை உண்ண யாராவது விரும்புவார்

களா? ஏன் உங்கள் மனம் இக்கீழ்த்தர எண்ணத்தைக் கொண்டது? எந்தக் காரணத்தைக்கொண்டு என் மனம் சலனமடையவேண்டும். தெவிட்டாத இன்பத்தில் திளைக்கும்பொழுது வேறு சிந்தனைக்கு இடமேது? உங்கள் கடமையைக் காப்பாற்ற உங்கள் பிரிவைச் சஹிப்பேன் என்பதற்காகச் சொன்னேன். உங்கள் பிரிவின் வருத்தத்தைச் சஹித்துக்கொள்ள நாட்டியத்தின் உதவியை நாடலாம் என்பதற்காகச் சொன்னேன். பவானி புரத்தையாவது அதன் ராஜாவையாவது நான் கண்டதில்லை. அதிகமாகக் கேட்டதுமில்லை, சற்றுமுன் தாங்கள் சொல்லிய வன்மையிலிருந்து அவ்விடத்திற்குச் செல்லலாமோவென்று நினைத்தேன். என்னை மன்னியுங்கள்'' என்றாள் கண்ணீர் கன்னத்தில் உருண்டோட.

''அப்படியானால் என்னைக் கல்யாணம் செய்துகொள்'' என்ற வரத்தை மாற்றிக் கேள்''

''பார்த்தீர்களா? அப்பொழுதே நான் கேட்டுக்கொண்டபொழுது சிசுவின்மீது ஆணையிட்டு வாக்களித்தீர்களே. அதனால் அதன்படி நடந்துதானாகவேண்டும். கடமை என்றால் தவறலாகாது'' என்றாள்.

சற்றுநேரம் மௌனமாக வெறும் வெளியை நோக்கினார். நிலைமை சங்கடப்பட்டது. ஒன்றும் புரியாமல் தத்தளித்தார், கடைசியில் விஷ விதை ஊன்றிவிட்டால் அது முளைக்காமல் அவிந்து போவது என்பது அநேகமாக நடவாத விஷயமல்லவா? அதனால் மோஹினி பவானிபுரம் போவதற்குக் கடமையைக் கருவியாக உபயோகிக்கிறாள் என்ற முடிவிற்கு வரச் செய்தது சித்தம். உடனே, ''சரி சரி, கடமை என்பது வியாஜம், உன் எண்ணம் வேறு. இல்லையேல் இவ்வளவிற்குப் பின்னும் கடமை கடமை எனச் சொல்லுவாயா? என்ன இருந்தாலும் ஜாதிக் குணம் போகுமா? நான் ஏமாந்தேன்'' என்றார்.

''ஜாதிக்குணம்'' என்ற சொல் பெண்மையின் ஹ்ருதய உணர்ச்சியைத் தூண்டிவிட்டது. அவளின் துக்கமெல்லாம் கோபமாக மாறிற்று. அடிபட்ட பெண் புலியென எழுந்துநின்றாள். ''என்ன? ஜாதிக் குணம்?'' என்று பல்லைக் கடித்தாள், பிறகு ஜாதியினரை ''இந்தக் குணமாகப் பழக்கியவர் எந்த வர்க்கத்தினர்? தங்கள் மிருக இச்சையைத் தணிக்கும் ஓர் கருவியாகக் கருதி, முன்னேறவிடாமல், ஆண்மையின் பெருக்கினால், பணத்தின் திமிரினால் பேதையர்களை மயக்கி, ஆசைவார்த்தை காட்டி, சுயமரியாதையை அடியுடன் தகர்த்தெறிந்து, அதிகாரத்திற்கு அடங்கி நடக்கும்படி நாகரிகமற்ற நாளில் சிலர் செய்த அநியாயத்தை, ஆண்மைக்கு உபயோகிக்கும் ஒரு வழியாகக்கொண்டு, 'தாசி' என்பது ஒரு ஜாதி, அவர்களுக்கு ஹ்ருதயமே கிடையாது, கண்டவனையெல்லாம் கட்டியழவேண்டும் என்ற விதியை ஏற்படுத்தி, இதைவிட்டால் தங்களுக்குவேறு வழியே கிடையாது என்ற நினைப்பை அவர்கள் உள்ளத்தில் பதியவைத்து, அதுவே ஸ்வர்க்க போகமென்றும், தங்கள் குலப் பெருமையென்றும் நினைத்து அவர்களே துணிந்து நடக்கும்படி செய்தது உங்கள் ஜாதிக் குணமல்லவா? சரி, இனிமேல் இந்தத் தாசியின் சம்பந்தமே வேண்டாம். வயிற்றிலிருக்கும் சிசுவின் நிமித்தம் என் ஜீவனைக் காப்பாற்றுகிறேன்; இல்லையேல் இந்த க்ஷணமே நாக்கைப் பிடுங்கிக்கொண்டு உங்கள் காலடியிலேயே என் ஜீவனை அர்ப்பணம் செய்திருப்பேன்'' என்றாள்.

''அக்கிரமம் செய்வது எங்கள் இனமென்றால் அதற்கு இடமளிக்காமல் நடந்து வரலாமே உங்கள் இனம். மனமிருக்கும் பக்ஷத்தில்தானே இடமேற்படுகிறது''

''அதுதான் சொல்லிவிட்டேனே. நாகரிகம் அறியாத நாளில் பேதையர்கள் ஏமாந்தார்கள். நாகரிகம் முதிர்ந்துவரும் இந்த நாளில் நாங்கள் விழிப்படைந்துள்ளோம். ஆதி நாட்களில் குடும்பத்தில் ஈடுபட்டால் கலையில் முன்னேற முடியாது என்பதற்காகக் கல்யாணமில்லாமல் நாட்டியக் கலைக்கு அர்ப்பணமாக, சுவாமிக்கும் கலைக்கும் தொண்டுசெய்ய ஏற்படுத்திய எங்கள் ஜாதியை நாளாவர்த்தியில் மிருகத்திலும் கேடான நிலைமைக்குக் கொண்டுவந்தவர்கள். அகம்பாவம் பிடித்த ஆண்பிள்ளைகளே. கல்வியின் அறிவு ஓங்கிவரும் இந்நாளில், பவானிபுரத்தைப் போன்ற கலைகளில் விருப்பங்கொண்ட நாடுகளினால் நாங்கள் முன்னேறும் வழி உண்டாகிவிட்டது. பாரதமாதா ஈன்ற மக்களில் 'யாவரும் சமம்' என்ற கொள்கை தோன்றும் இந்நாளில், 'பெண்மைக்கு வெற்றி' என்று கதறிய பாரதியாரின் திருவாக்கைப் போற்றும் இந்நாளில், கற்பை விலைக்கு வாங்கும் ஈனவிக்கிரய வியாபாரம் நடக்காது. உண்மைக் காதலுக்கே எங்கள் வாழ்நாள் அர்ப்பணம். இதன் உண்மையைத் தாங்கள் ஒரு காலத்தில் அறியாமல் போகமாட்டீர்கள். தாங்கள் என்னை எவ்வளவு அவமதித்தாலும் எவ்விதமான துன்பத்திற்கு ஆளாக்கினாலும் என் மனதில் உங்களைத் தவிர மற்றவர்களுக்கு

இடமிருக்காது. இது முக்காலும் சத்யம். வீணாகத் தாங்கள் என் இனத்தைப் பழிக்க வேண்டாம்'' என்றாள்.

அந்தச் சமயம் அவளின் ஒவ்வொரு சொல்லும் வேத வாக்காகவே தோன்றியது அவருக்கு. நாம் அவளின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்கப்போக அவள் கோபத்தைக் கிளறிவிட்டதாக ஆகிவிட்டதே என்ற வருத்தம் ஏற்பட்டது. 'உண்மையில் அவள் பரிசுத்தமானவள்; அவள் ஹ்ருதயாசனத்தில் தம்மைத் தவிர ஒருவருக்கும் இடமிருக்காது' என்பது அவர் மனமறியும், ஆனாலும் பவானிபுரம் போகிறேனென்று சொன்னதை அவர் மனம் ஒப்பவில்லை. ஆனாலும் அவளது கடமை என்பது எது வரையில் என்பதை அறிந்து கொள்ளும் சக்தியற்றவரானார்.

''மோஹினி! ஏதோ பதட்டத்தில் பேசிவிட்டேன். மன்னித்து விடு. நீ சொல்வதெல்லாம் உண்மையான விஷயம். எதற்காக நாம் வீண் வாதம் செய்யவேண்டும். என் கண்ணல்ல; வா இப்படி; என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, கல்யாணம் என்ற சொல்லை மட்டும் எடுக்காமல் வேறு எந்த விஷயமானாலும் கேள்'' என்றுசொல்லிய வண்ணம், அவள் கையைப் பற்றி இழுத்துப் பக்கத்தில் உட்காரவைத்து இடது கையினால் அணைத்த வண்ணம் வலது கையினால் கைக்குட்டையை எடுத்து அவள் முகத்தில் அரும்பும் வியர்வையையும் கண்ணில் தளும்பின நீரையும் துடைத்தவண்ணம் ''சட், உப்புப்பெறாத விஷயத்தில் உன்முகம் வாடிவிட்டதே'' என்றார் அன்பு ததும்ப.

அன்பின் அணைப்பில் குற்றம் மறைந்துவிட்டது; என்றாலும் மனதின் ஓர் மூலையில் வேதனைச் சுடர் இருந்துகொண்டிருந்தது. வெகு நாளைய ஆத்திரத்தை உங்கள் சொல் கிளறிவிட்டது. வாயறியாமல் பேசிவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். ஆனாலும் நீங்கள் மட்டும் இப்படிப் பேசலாமா? என்னை அறிந்தவராகத் தோன்றவில்லையே உங்கள் சொல். என்ன இருந்தாலென்ன, எமாந்தவர்கள் பேதையர்கள். உங்கள் ஆறுதல்மொழியிலும் அன்பின் அணைப்பிலும், பெண்மையின் மதிப்பைப் பறிகொடுத்து விட்டேன். இதனால்தான் ஸ்திரீகள் பலஹீனர்'' என்ற சொல்லிற்கு ஆளாயினோம்'' என்றாள்.

''உங்கள் பலஹீனம் எங்கள் மடமையை மறைத்து விடுகிறது. சரி, அதெல்லாம்போகட்டும். சிசுவின்மீது ஆணையிட்டுவிட்டேனல்லவா? அதனால் உனக்குவேண்டிய எதுவானாலும் கேட்டுத்தான் ஆகவேண்டும்''

''தாங்கள் அழகிய கன்னிகையை மணந்துகொண்டு பெற்றோர் மனம் களிக்க அவர்களுடன் கொஞ்ச நாள் இருந்து விட்டு வருவீர்களாம். நான் பவானி புரத்தின் அதிசயங்களைப் பார்த்த வண்ணம் பொழுதைக் கழிப்பேனாம். பிறகு மூன்றாவது ஜீவனுடன் தங்களிடம் வந்துவந்து சேருவேனாம். இதுதான் எனது விருப்பம்'' என்றாள் கடைக்கண்ணால் பார்த்தபடி புன்சிரிப்புடன்

''பார்த்தாயா மறுபடியும் அதையே சொல்லுகிறாயே''

''ஆமாம். சிசு மீது ஆணை இட்டிருப்பது நினைவிலிருக்கட்டும். கடமையைக் காப்பதே எனது லக்ஷ்யம், செய்து தானாகவேண்டும்.''

''நிச்சயமாக' மனப்பூர்வமான எண்ணம் அதுதானா?''

''ஆமாம் துரையே'' என்றாள் முகத்துடன் முகம்சேர்த்து.

''என்னைவிடப் பவானிபுரமே உனக்குப் பெரிதாகப் போய்விட்டது. நீ சொன்னபடி செய்து விடுகிறேன், பிறகு அதனால் வரும் கஷ்டங்களை ஏற்கத்தயாராக இரு'' என்றார் கடுமையான குரலில்.

''தங்களது தந்தைக்கு வாக்குக் கொடுத்துவிட்டேன். பெற்றோர் தெய்வத்திற்கும் மேலானவர்கள். உங்கள்பெற்றோர் எனது பெற்றோர்களே. அவர் மனம் குளிர என் வார்த்தை காப்பாற்றப்பட வேண்டும், கடமையின் பெயரால் எந்தவிதமான கஷ்டத்தையும் அனுபவிக்கத் தயார்'' என்றாள் பேதை.

''சரி, உன் கடமையும் பவானிபுரத்தின் ஆசையும் ஜமீன்மோஹமும் எந்தமட்டில் என்பதைப்பற்றிப் பழிவாங்கி விடுகிறேன்'' என்று மனதிற்குள் கருக்குத் தட்டினார். வெளிக்கு, ''சரி உன்னிஷ்டம். பிறகு ஏதாவது நேர்ந்தால் என்மீது பழி கூறக்கூடாது; என்ன?'' என்றார்.

''இல்லை எதுவந்தாலும் கடமை என்பதை நினைத்துச் சகித்துக் கொள்ளுகிறேன்.''

''உன்கடமை நாசமாய்ப் போக'' என்று மனதிற்குள் திட்டியவண்ணம், ''சரி உன்னிஷ்டம். நேரமாகிறது. தூங்கச் செல்லுவோம் வா'' என்று அன்புடன் அணைத்துக்கொண்டு நடந்தார்.

(தொடரும்)

# சபதம்

'மானஸீகன்'

அமைதியில் லயித்திருந்த அவையில் அரசன் தீர்ப்பைத் தெரிவித்தான்! ''அமைச்சர்களே! கலைஞர்களே! இன்று நம் நாட்டின் சங்கீதக் கலைக்குக் கண்களாய் விளங்கும் கங்காதரர், சோமதேவர் இருவர்களுடைய பாட்டைக் கேட்டுக் களித்தோம். அவற்றினுள், கங்காதரரின் பாட்டே நம் மனதைக்கவர்ந்தது. அவருக்கே இன்று பரிசையளிக்கத் தீர்மானித்துள்ளோம்.'' சபையில் 'கொல்' லென்று ஆயிற்று. கங்காதரர் ஆசனத்தில் நிமிர்ந்து உட்கார்ந்தார். வெற்றி நோக்குடனே அவர் கண்கள் தூரத்தில் உட்கார்ந்திருந்த சோமதேவர்பால் திரும்பியது. ஆனால் அவரோ இந்த வார்த்தைகளில் இடிவிழுந்துபோய்க் குன்றிப்போனார். சபையை நோக்க அஞ்சித் தலை குனிந்தார். சபையில் சற்றுநேரம் அமைதி நிலவியது. சோமதேவர் எழுந்தார். ''வேந்தே! நீங்கள் இவ்வித தீர்மானத்திற்கு வந்ததற்குக் காரணம் கேட்கப்போவதில்லை. ஆனால் என் அந்தராத்மா கூறுகிறது. இன்றுசொன்ன திர்ப்பு சரியானதல்ல என்பதுதான் அது. அதற்காக நான் சண்டைபோடவில்லை. ஆனால் இதோ ஒரு சபதம் செய்துவிட்டுப் போகிறேன். இதே சபையில், நானாவது என் சிஷ்யனாவது நான் கற்ற முறையில் பாடி அதுவே கலையில் சிறந்தது எனப்பெயர் வாங்குவோம். அதுவரைக்கும் என் சங்கீதத்தின் அறி குறியாய் விளங்கும் இம் மணிமாலை இங்கே இருக்கட்டும். வெற்றியடைந்தாலல்லது அது என்கழுத்தில் ஏறாது. ''சோமதேவர் தம் கழுத்தில் அணிந்திருந்த நவரத்ன மாலையைக் கழற்றி, அரசனெதிரில் நின்ற ஸ்தூபியில் மாட்டினார். பிறகு புண்பட்ட நோக்குடனே அரசனைநோக்கி ''அரசே, போய்வருகிறேன்'' என்று கூறிவிட்டு விடுவிடென்று சபையைவிட்டு அகன்றார். அவரது ஊசலாடிய உள்ளத்தைப்போல் மணிமாலையும் ஊசலாடியது. சபையில் ஒருவரும் பேசவில்லை.

சபையை விட்டகன்ற சோமதேவர், ஆசிரமத்தை அடைந்தார். அவர் உள்ளத்திலே அரசனுடைய தீர்மானம் வேல் போட்டுக் குத்தியது போலாயிற்று. தம் வாழ் நாளைக் கசக்கிப்பிழிந்து கற்ற வித்தைக்குப் பலனில்லாது போயிற்றே என்ற ஏக்கம் ஒரு பக்கம், பலபேர் முன்னிலையில் அவமானம் அடைந்தது ஒரு பக்கம், அவரை அளவிடமுடியாத சோகத்தில் ஆழ்த்தின. மௌனமாய் எழுந்து அம்பிகையின் படத்தின் முன்னால் அமர்ந்தார். உள்ளப் புகைச்சலினால் கண்களில் 'புல புல, வென்று கண்ணீர் வழிந்தோடியது. பித்துப் பிடித்தவர்போல் அப்படியே உட்கார்ந்திருந்தார். எவ்வளவுநேரம் உட்கார்ந்திருந்தாரோ அவருக்கே தெரியாது.

கனவுலகிலிருந்து அவரைத்தட்டி எழுப்பியது ஒரு தெய்வகானம். யாரோ ஒரு பெண் பாடியிருக்கவேண்டும். புண்பட்ட அவர் உள்ளத்திலே அது அமிர்தத்தை வர்ஷித்தது. இருளடைந்த காட்டிலே வெளிச்சம் தோன்றியது போல், கருத்த மேகங்களிடையே மின்னல் தோன்றியது போல், அந்தச் சிறு பெண்ணுடைய குரல் அவரது உள்ளத்தில், புத்துயிரைக் கிளப்பியது; எழுந்து வந்து வாசல் திண்ணையில் அமர்ந்தார். அவர் மனம்முழுவதும் பாட்டிலேயே லயித்தது.

குரல் மெள்ள மெள்ள நெருங்கி வந்தது. அந்த ஸரளமான குரலில் தெய்வீக இனிமை புரண்டோடியது. ஞானம் அதிகமில்லைதான். ஆனால் தெய்வத்தினால் அளிக்கப் பட்டிருந்த அந்த இனிமையான குரலில், ராகங்கள் தாமாக எழுந்து ஓடின. சோமதேவர் தம்மைமறந்தார் என்றுதான் சொல்லவேண்டும்.

பாட்டு தெரு மூலையைத் திரும்பிவிட்டது. ஒரு சிறு பெண். ஒன்பது அல்லது பத்து வயதிருக்கும். அவள்தான் பாடிக்கொண்டு வந்தாள். பின்னால் தொடர்ந்துவந்தாள் ஒரு வயது வந்த ஒரு ஸ்திரீ. இருவரும் வீடு வீடாய்ப் பிச்சைகேட்டுக் கொண்டு வந்தனர். சோமதேவர் அவர்களையே உற்று நோக்கினார். பெண்ணின் முகத்திலே, ஒரு விதமான களை. அள்ளித் தெறிக்கும் அழகு என்று சொல்லிவிட முடியாது. ஆனால் அவரைப் போன்ற கலைஞன் கண்களுக்கு அது ஸ்பஷ்டமாகப்பட்டது. பெண்ணின் முகத்திலே ஒரு தெய்வீக களைமிளிர்ந்தது. ஏழ்மையின் அவலத்திலே அது சற்று மறைபட்டிருந்தது. முக ஒற்றுமையிலே அவர்கள் தாயும் பெண்ணும் என்பதை அறிந்துகொண்டார்.

இருவரும், சோமதேவர் வீட்டை அணுகி ஞர்கள். அவர் சட்டென்று எழுந்து "வாருங்கள்; குழந்தாய்! இப்படி வாம்மா. இந்தத் திண்ணையில் உட்காருங்கள்" என்று உபசரித்தார். பாடி வந்த களைப்பில் இருவரும் தாமஸிக்காது உட்கார்ந்தனர். அவர் முகத்தில் தென்பட்ட ஸௌஜன்யமும் பெருந்தன்மையும் அந்தஅம்மாள் நாணத்தைச் சற்று நீக்கியிருக்கவேண்டும். "கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கொடுப்பீர்களா? ரொம்பவும் தாகமாயிருக்கிறது. குழந்தையும் பாடிவந்ததில் களைத்துப்போய் விட்டாள்" என்று கேட்டாள். சோமதேவர், தண்ணீர்கொண்டுவந்துகொடுக்க இருவரும் சாப்பிட்டார்கள். முதியவள் "ஸ்வாமி! நந்தக்கிராமம் எவ்வளவு தூரத்திலிருக்கிறது. அஸ்தமன வேளையாகப் போகிறது. இருட்டுவதற்குள் அங்கே போய் விடவேண்டும்" என்று கேட்டாள்.

சோமதேவர், கதிரவனைப் பார்த்தார். அவன் உக்கிரம் குறைந்து, மஞ்சள் வெயிலாய், மரங்களைப் பிரகாசிக்கச் செய்து கொண்டிருந்தான். சற்றுநேரம் யோசித்து விட்டு, "நந்தக்கிராமம் இன்னும் ஐந்துகல் தூரம் இருக்கிறது. உங்களால் இருட்டுவதற்குள் போகமுடியாது. இரவு இங்கே தங்கிவிட்டுப் போகலாமே?" என்றார்.

முதியவள் சொன்னாள்: "உங்களைப் போல் அனாதைகளிடத்தில் இரக்கம் காட்டுகிறவர்கள் வெகுசிலர்தான் இருக்கிறார்கள். ஆனால் நாங்கள் உங்கள் வீட்டில் தங்குவதைக் கண்டு உலகம் உங்களை நகைக்காமல் இருக்கவேண்டுமே? எங்களைப்போல் பிச்சைக்காரர்களுக்கு உபகாரம் செய்தால், அதுவும் எங்களைப் போன்ற பெண்களுக்கு?" என்றாள்.

உலகம் என்றவுடன் சோமதேவர் சிரித்துக்கொண்டார். இந்த உலகில்தான் அவர் கலை பிரகாசிக்க மறுத்தது." அந்தக் கவலை உங்களுக்கேன்? அது என்னுடைய பொறுப்பு. உங்களுக்குத் தடையொன்றுமில்லாமல் இருந்தால், என் வீடு உங்களுடையதுதான்" என்றார்.

முதியவள் சிரித்தாள்." அடைக்கலம் அளித்தால், அதற்குத் தடைவேறு சொல்லி நாங்கள் பிழைப்பது எப்படி ஸ்வாமி? பிச்சையெடுப்பது என்ற விதி பிரமன் தலையில் எழுதிவிட்டான். அதைச் சுமந்துதானே தொலைக்கவேண்டும்? ஏதோ இன்று கடவுள் கண்திறந்தார்போலிருக்கிறது. நந்தக் கிராமத்தில்போய் வீடு வீடாய்த் தங்க இடம் கேட்கவேண்டு மென்றிருந்தோம். அதற்குள் நீங்களே அனுக்ரஹம் அளித்தீர்கள்" என்றாள்.

சோமதேவர் தாம் எண்ணியிருந்த கேள்வியைக் கேட்டார். "நீங்கள் ஏன் பிச்சை எடுக்கவேண்டும்? உற்றதுணை யொன்றுமில்லையா?"

"ஸ்வாமி! எங்களுக்கு உறவினரென்பதே கிடையாது. இவள் தந்தைதான் எங்களுக்கு எல்லாமாகஇருந்தார். அவர் இறந்த பிறகு நிற்கக் கதியில்லாமல் போய்விட்டது. அதுதான் கிளம்பிவிட்டோம். ஏதோ இந்த பெண்ணை கட்டிக்கொடுத்துவிட்டுக் கண்ணை மூடியிருந்தால் ஒன்றுமில்லை. பிச்சைக்காரப் பெண்ணை யார் மணம் செய்துகொள்ளச் சம்மதிப்பார்கள்? இந்தப் பெண்ணைப் பற்றி நினைக்கையில்தான் என்நெஞ்சை யள்ளுகிறது ஸ்வாமி! நாங்கள் அன்றாடம் வயிற்றைக் கழுவ யோசிக்கிறதா? ஏதோ கடவுள் விட்டவழியாகிறது என்று கிளம்பி விட்டோம். அவன்தான் எங்களைக் கரை யேற்றவேண்டும்." இவ்விதம் அவள் சொல்லும்போது அவள் உள்ளத்திலிருந்த பலநாள் ஏக்கம் புரண்டோடியது. சோமதேவர் வெறித்து அம்பிகையின் படத்தையே நோக்கிக் கொண்டிருந்தார். அவள்முன் ஏற்றப்பட்டிருந்த தீபம் திடீரென்று சுடர் விட்டது, தேவியின் கண்கள் சிமிட்டியது போல் அவருக்குத் தென்பட்டது. தம் மனதில் இதுகாறும் அடக்கிவைத்திருந்த எண்ணத்தை வெளியிட்டுவிட்டார்.

"அம்மா! இந்தப் பெண்ணின் பாட்டைக் கேட்டவுடன் எனக்கு ஒரு எண்ணம் தோன்றியது. உங்களுக்குத் தடையொன்றுமில்லாதிருந்தால் பெண்ணின் பிற்கால வாழ்க்கையை நான் சரிக்கட்ட, என்னு வியன்ற உதவியைச்செய்கிறேன்" என்றார். முதியவள் ஆவலுடன் எழுந்து அருகில் வந்தாள். உதவியொன்றுமில்லாது பேய்க்காற்றில் அலைந்தகொடிக்கு, கொழுகொம்பு அளித்ததுபோலிருந்தது அவ்வார்த்தை.

"எனக்குச் சங்கீதப்பித்து அதிகம். அந்தத் தெய்வீகக் கலைக்குத் தெய்வீகஸ்தானம் அளிக்க, என் வாழ் நாளை அர்ப்பணம் செய்தேன். அன்பு காட்டிய தாய் தந்தையரைத் துறந்து, பல ஊர்கள் சுற்றி, அக் கலையைக் கற்றுணரத் தவித்தேன். இதோ இந்தத் தேவியின் படத்தின் முன்னால் வருடக் கணக்கில் உட்கார்ந்து, அக் கலையைச் சாதகம் செய்தேன். கடவுள் எனக்கு அதற்குரிய வெற்றியை அளிக்க மறுத்து விட்டான், ஏனோ தெரியவில்லை. இச்சிறு பெண்ணின் குரல், என் உடைந்துபோன

உள்ளத்தைத் தட்டி எழுப்பியது. தூரத்தில் கேட்கும்போதே என் வாழ்க்கை இருளுக்கு வெளிச்சம் வந்ததென எண்ணினேன். அந்தக்கணமே நான் ஒன்று நினைத்தேன். அதைத்தான் இப்போது உனக்குச் சொல்லப் போகிறேன். உனக்குத் தடையொன்றுமில்லாதிருந்தால் நீங்கள் என்னுடனே இருங்கள். இந்தப் பெண்ணுக்கு நான் கற்ற கலையனைத்தையும் ஒப்பேற்றி விடுகின்றேன். அந்தத் தெய்வீகக் குரலுடன் கலை ஞானமும் சேர்ந்தால் வெற்றியைப்பற்றி நான் கவலைப்படவேண்டியதில்லை. என்மக்களைப் போலவே வாழலாம். உன் விருப்பம் என்ன?'' என்று கேட்டார்.

தாய் நீண்ட நேரம் யோசித்துக் கொண்டிருந்தாள். அவள் மனதில் ஒரு தயக்கம் தென்பட்டதாகத் தோன்றியது. முடிவில் அவள் சொன்னாள், ''ஸ்வாமி! உங்கள் உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்? ஆனால் ஒன்று. உங்களுடன் நான் வாழ்ந்தால் ஊரார் நாலும் சொல்வார்கள் அது எனக்கு விருப்பமில்லை. ஏதோ என் பெண்ணைக் கரை யேற்ற ஒப்புக் கொண்டீர்கள். அதுமட்டும் உங்களுக்குப் புண்ணியம். எனக்கு ரொம்பநாளாக ஒரு அவாவுண்டு காசிக்குப் போகவேணுமென்று. அது இப்போது நிறைவேறும் போலிருக்கிறது. என் பெண்ணை உங்களிடம் விட்டுவிட்டுப் போகிறேன். அனாதை விதவையை விட நீங்கள் நன்கு பரிபாலிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். என் பெண் இந்த அனாதையை மறந்துவிடட்டும். எப்படியாவது அவள் சுகமாயிருந்தால் அதுவே எனக்குப் போதும்'' இப்படிச் சொல்லும் போது அவள் அழுது விட்டாள்.

சோமதேவர் அவளைத்தேற்றி உள்ளே அழைத்துச்சென்றார். புனிதமான மாலை வேளையிலே தெய்வீக அமைதி பரவிக்கிடந்தது. ஊர்க்கோயில் மணி, மக்களுக்குக் கடவுளின் நினைவைத் தெரிவித்தது. சோமதேவர் வழக்கம் போல் கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு. அம்பிகைக்கு விளக்கேற்றி, பாட உட்கார்ந்தார். புதிதாக அன்று முதியவளும் அவள் பெண்ணும் அமர்ந்தார்கள். மிக்க உருக்கத்துடன் இரண்டுபாட்டுகள் பாடினார் சோமதேவர். பிறகு அந்தப் பெண்ணை அழைத்து ''ராதா கொஞ்சம் தேவியின் எதிரில் பாடம்மா'' என்றார். சிறுமி பாடத் தொடங்கினாள். அவள் கண்ட ஸ்வரத்திலிருந்து கிளம்பிய நாதம் கேட்போரை மெய்சிலிர்க்கச் செய்தது. மிகுந்த உற்சாகத்துடன், பாட்டுக்குமேல் பாட்டாகப் பாடிக்கொண்டே போனாள். சுருதிமீட்டிய சோமதேவர் அவள் குரல் இனிமையில் லயித்துப் போனார். தம் சபதத்திற்கு அவள் ஒரு சந்தர்ப்பமாக வந்ததை நினைத்து நினைத்துப் பூரித்தார். பாட்டு இரவு வெகு நேரம் வரைக்கும் நீடித்தது. மறுநாள் அதிகாலையிலேயே ராதாவின் தாயார் ஊரைவிட்டுக் கிளம்பினாள். அவள் பெண்ணுக்காகச் செய்த தியாகத்தைச் சோமதேவரால் தாங்க முடியவில்லை. அழுத கண்ணுடன் விடை கொடுத்தனுப்பினார்.

கொஞ்ச நாளைக்கெல்லாம் சோமதேவர் ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் ஊரைவிட்டு, காலிபண்ணிக்கொண்டுபோய் விட்டார். அரசனுக்கு அவர் மறைந்த சமாசாரம் எட்டியது. அவர் சபதம் செய்துவிட்டு மாட்டிவிட்டுப் போயிருந்த மாலையைக் கண்டவுடன், அவன் சிரித்தான். கையாலாகாதவன் ஏன் சபதம்செய்யவேண்டுமென்பதே அவன் நகைப்பிற்குக் காரணம். ஆனால் அவன் நினைத்ததுபோல் சோமதேவர் தோற்றுவிட்டு ஓடிப்போய் விடவில்லை. தம் சபதத்தை நிறைவேற்றவே ஊரைவிட்டு மறைந்தார்.

புரட்சியாளன் புரட்சிக்கான ஏற்பாடுகளை மறைவாக, பூமியின் அடியிலும், இடுக்குகளிலும் செய்வதைப்போல், தம் வாக்கை நிறைவேற்ற, ஜனநடமாட்டமே இல்லாத ஒரு குக்கிராமத்தை அடைந்தார். அங்கு தம் பொருள், காலம், சிரமம் அனைத்தையும், ராதாவிற்குச் சங்கீதக்கலை கற்றுக் கொடுப்பதிலேயே செலவழித்தார். தினம் இருபத்துநாலுமணிநேரமும் அவர் வீட்டில் கான மழையாகவே இருந்தது. அதற்கு ஊக்கம் அளிப்பது போலவே ராதாவின் சங்கீதமும் நாளுக்குநாள் உயர்ந்து வந்தது.

பத்து வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. சோமதேவரின் பிரபலம் எல்லாம், அதில் மறைந்துவிட்டன. ராஜ்யத்தில் அவர் பெயர் ஒரேயடியாய் மங்கிப்போய்விட்டது. ஆனால் சோமதேவரோ, தம் லட்சியத்தை அநேகமாய் நெருங்கிவிட்டர். ராதாவின் கானம் கேட்போரை மயக்கியது. குரலின் இனிமையுடன், பாவமும், ஞானமும், சேர்ந்துவிட்டதால், அவளை மிஞ்சியவர் ராஜ்யத்தில் யாருமில்லையென்னும்படியாக இருந்தது சங்கீதம். சோமதேவர் சுருதி போட, ராதாபாட உட்கார்ந்துவிட்டால், கிராமத்தார் தங்கள் வேலைகளைக்கூட மறந்து கூடிவிடுவார்கள். காலம் சென்றபோது இயற்கையும் தன் கடமையை மறந்துவிடவில்லை. சிறுமியாக இருந்த

# பேபி கமலாவின் அழகுபடுத்திக்கொள்ளும் முறை லக்ஸ் டாய்லட் சோப்...



கட்டழகி கமலாவின் அப்பழுக்கற்ற இனிதான வதனமே அவரது கவர்ச்சிக்கு முக்கிய காரணம். நீடித்து நிற்கும் சரும எழிலின் ரகசியம் தவருமல் ஒரு அழகுபடுத்திக் கொள்ளும் முறையை கையாள்வதுதான் என்பது அவருக்குத் தெரியும். ஆகையால், சரும பாதுகாப்பில் தனி சிரத்தை யெடுத்துக் கொள்கிறார். லக்ஸ் டாய்லட் சோப்பின் தாராளமாயுண்டாகும் நறுமணங்கொண்ட நுரை அவர் சருமத்தை குளுமையாகவும், மிருதுவாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்கிறது. நீங்களும் ஏன் கமலாவைப் போல் இந்த வெண்மையான குற்றமற்ற சோப்பைக்கொண்டு உங்கள் வதன எழிலை காப்பாற்றக்கூடாது?

எ.வி.எம். பிரொடக்ஷன்ஸாரின் "நாம் இருவர்" என்ற புதுப் படத்தில் பேபி கமலாவை பார்க்கலாம். இந்த சமூகப் படத்தில் அவரது சிறந்த நடிப்பு அவருக்கு தனிப் பெருமையளிக்கும்.




## லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களுக்கு அழகுதரும் சோப்

LTS. 162-23-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

ராதா, ஒரு யௌவன மங்கையாக மாறி விட்டாள். சரஸ்வதிதேவியே உருவெடுத்து வந்ததுபோல, அவள் உருவம் தோற்ற மளித்தது. சிறுமியின் மிடுக்குத்தனமும், துள்ளி விளையாடலும் மறைந்து நாணமும், மென்மையும் மேற்கொண்டன. அவள் எழிலைப் பார்க்கும் போதெல்லாம் சோம தேவருக்குப் பத்து வருடங்களுக்கு முன் அவளை விட்டுச்சென்ற அவள் தாயின் நினைவுவரும். "அவள்மட்டும் இருந்தால், பெண்ணின் சௌந்தர்யத்தைக் கண்டு உவகை பூத்திருப்பாள். கொடுத்துவைக்க வில்லை" என்று சொல்லிக்கொள்வார் சோமதேவர்.

இந்நிலையில் சோமதேவரைத் தேடிப் பிடித்துக்கொண்டு வந்தான் ஒரு யுவன். அவன் சோமதேவரை இளவயதில் வளர்த்துவந்த ஒரு கலைவாணரின் மகன். அவன் தந்தைக்குக் கடமைப் பட்டதற்கா கச் சோமதேவர் அவனுக்கு இடமளித்தார். ராஜேந்திரனும், அவர்கள் வீட்டில் ஒருவன் போலவே வாழ்ந்து வந்தான். வயோதிக ரான சோமதேவருக்கு அவன் உற்ற துணை யாயும் விளங்கினான். அவனது தேகக் கட் டினையும் அழகினையும், ராதாவின் அழகு டன் ஒப்பிட்டுப்பார்ப்பார் சோமதேவர். தம் சபதம் நிறைவேறியவுடன் இருவருக் கும் மணம் முடித்துவிட வேண்டுமென்ற தூரஆசை ஒன்று அவரது மனதில் எழும்.

ஆனால் அவரது எண்ணத்திற்கே இடங் கொடுக்கவில்லை ராஜேந்திரனும், ராதாவும். தன் தந்தையின் நண்பரான சோமதேவ ரைப் பார்த்துவிட்டுப் போக வந்தான் ராஜேந்திரன். ஆனால் ராதாவைக் கண்டது முதல் அவன் மனதில் கலக்க மேற்பட்டு விட்டது. அங்கிருந்து செல்ல அவன் கால் கள் மறுத்துவிட்டன. வந்த முதல் நாளே, வீட்டு வாசலில் ராஜேந்திரன் உட்கார்ந்தி ருந்தான். தந்தைக்குக் கால் அலம்பிக் கொள்ள, சொம்பில் ஜலம் கொண்டு வந் தாள் ராதா. சட்டென்று ஓர் அழகிய யுவனைக் கண்டதுமே அவள் முகம் நாணத் தால் சிவந்தது. அவன் முகத்தில் தென் பட்ட குளுமை, அவள் உள்ளத்திலே குது குதுப்பை உண்டாக்கிவிட்டது. சட் டென்று உள்ளே போய்விட்டாளானாலும், அவள் மனம் மறுபடியும் அவனைக் காண வேண்டுமென்று துடிதுடித்தது. அன் றிரவு போஜனம் செய்கையில், சோமதே வர் ராதாவுக்கு அவனை அறிமுகம் செய் தார். அவன் அவர்களுடன், தங்கப்போவ தாக அவர் சொன்னவுடன், ராதாவின் மனதை வாட்டிக் கொண்டிருந்த கவலை சற்று அடங்கி, அவள் முகத்தில் பிரகாசம் ஏற்பட்டது. அவள் தூய உள்ளத்திலே, ஒரு ஸ்தானம் பெற்றுவிட்டான் ராஜேந் திரன்.

வீட்டில் ஒருவன்போல் பழகிய ராஜேந் திரன் ராதாவின் மனதை வெகு சீக்கிரத்தி லேயே அறிந்துகொண்டு விட்டான். தனி யாகப் பேச அவர்களுக்கு எவ்வளவோ சந் தர்ப்பங்கள் கிடைத்தன. சோமதேவர் கோயிலுக்குப் போயிருந்த போதும், குளத்தங்கரைக்குப் போயிருந்தபோதும், ராஜேந்திரன் ராதாவிற்கு வீட்டு வேலை களுக்கு உதவி செய்ய இருப்பான். அப் போதெல்லாம் அவர்கள் பேச்சினால் மனத் தைத் திறந்துகொண்டார்கள்.

ஒருநாள் சோமதேவர், இரவு போஜனத் திற்குப் பிறகு, தம் எண்ணத்தைத் தெரி வித்தார். ராதாவை அழைத்து, "குழந்தாய், உன்னை எதற்காக இவ்வளவு நாள் வளர்த் தேன் என்பதை நீ யறிவாய். உனக்கு முன்னமேயே சொல்லியிருக்கிறேன். அதை நிறை வேற்றுங்காலம் நெருங்கிவிட்டது. சங்கீதத்தில் முதிர்ச்சியை அடைந்துவிட் டாய். என் சபதத்தை நிறைவேற்ற அம் பிகை உனக்குப் போதிய சக்தி கொடுத்து விட்டாள். ஒரு நல்லநாளில் என் சப தத்தை நிறைவேற்றுவதாக அரசனுக்குத் தெரிவிக்கப்போகிறேன். அன்று நீ வெற்றி மாலை சூடி, பத்து வருஷங்களுக்கு முன் வைராக்கியத்துடன் நான் கழற்றி வைத்து விட்டு வந்த மாலையை என் கழுத்தில் போடவேண்டும். அதன் பிறகு உங்களிரு வரையும் ஒன்றாகக் கண்டுவிட்டால், அத் துடன் என் வாழ்க்கையின் நோக்கம் முடி வடைந்துவிடும். இதன் விவரங்களை ராஜேந்திரன் அறியவேண்டியதவசியம்." என்று அவனிடம் தம் சபதத்தின் வர லாற்றைத் தெரிவித்தார். ராஜேந்திரன் முகத்தில் ஈயாடவில்லை.

மறுநாள் காலை சோமதேவர், கோயிலுக் குப் போய்விட்டு வீட்டுக்குள் நுழைந் தார். அப்போது ராஜேந்திரனுக்கும் ரா தாவுக்கும் வழக்கமில்லாதபடி விவா தம் நடந்துகொண்டிருந்தது காதிற்பட் டது. வந்த சுவடு தெரியாமல் கதவருகில் நின்றுகொண்டு கேட்கத் தொடங்கினார். கதவிடுக்கின் வழியாய் அவர்கள் உருவம் நன்றாய்த் தெரிந்தது. கோபம் தொனித்த பார்வையுடன், ராஜேந்திரன் கூடத்தில் உலாவிக் கொண்டிருந்தான். ராதா தரை யில் அமர்ந்து ஸ்வாமிக்கு மாலை தொடுத்

துக்கொண்டிருந்தாள். அவள்முகத்தில் துக்கமும் ஏக்கமும் கலந்து பரவின.

"நீங்கள் இப்படிச் சொல்வது நியாயமா? அவர் எனக்குப்பட்டிருக்கிற கஷ்டமென்ன? இந்தக்கடமையை நான் எவ்வாறு மறுக்கமுடியும்?" என்றாள் அவள்.

"ராதா நீசொல்வதெல்லாம் சரிதான். ஆனால் உனக்கு முன்னமேயே என் தாயின் கதையைச் சொன்னேன். நீ அரசசபையில் போட்டியாகப் போய்ப் பாடினால் என்னை மறந்துவிடு. உன் மனைவி அரச சபையில் போட்டிப்பாட்டுப் பாடினாள் என்பதை என்னால் ஏற்கமுடியாது"

ராதா தொடுத்துக்கொண்டிருந்த மாலையைக் கீழே வைத்துவிட்டு, அவன் காலில் போய் விழுந்தாள், "எனக்காக! இந்தப் பேதைக்காக! நீங்கள் இந்தச் சிறு உபகாரம் செய்யக்கூடாதா? இச் சமயம் மட்டும் அனுமதி கொடுத்துவிடுங்கள். அப்புறம் வேண்டாம். என் தந்தைபோன்ற அவர், அந்தகாரமானகாட்டிலிருந்து என்னை இக்கதிக்குக்கொண்டுவந்தார். அவருக்கு எப்படி நான் துரோகம் நினைக்க முடியும்? நீங்களே சொல்லுங்கள்" என்று மனதுருகக் கெஞ்சினாள்.

ராஜேந்திரன் முகந்தணியவில்லை. "பலிமாட்டைக் கொழுக்க வைப்பதில் புண்ணியமென்ன? தம் சபதத்தை நிறைவேற்றத்தானே உன்னை வளர்த்தார்? இதோ பார் ராதா! உன்னைப்பாடவேண்டாமென்று யார் தடுத்தார்கள்? என்னை மறந்துவிடு. உன்னை அடைய அதிர்ஷ்டம் செய்யவில்லையென்று நான் தூரதேசம் போய்விடுகிறேன்" என்றான். ராதா கலவரத்துடன் "ஐயோ, அதெப்படி முடியும்? நீங்கள் போய்விட்டால் என் வாழ்க்கை இருளடைந்தல்லவோ போய்விடும்? நீங்கள் என் நிலையை அறிந்து இந்தத் தியாகத்தைச்செய்ய மறுக்கின்றீர்கள். இதுவா உங்கள் அன்பு?" என்று கேட்டாள்,

ராஜேந்திரன் "உன்னிஷ்டம் என்று சொல்லிவிட்டேனே. உனக்கு மட்டும் என்னிடத்தில் அன்பிருந்தால், நான் வேண்டாத காரியத்தைச்செய்யச் சம்மதிப்பாயா? நீ அரச சபையில் பாடுவதாயிருந்தால். என்னைப் பற்றி நினைக்கவேண்டாம்" என்றான்.

ராதாவிற்கு அழுகை வந்துவிட்டது. கோபத்தில் "இருக்கட்டும். இதுவும் என் தலைவிதி என்று எடுத்துக் கொள்ளுகிறேன். குப்பையில் கிடந்த என்னை ஆளாக்கிய என் தந்தைக்குத் துரோகம் நினைத்தாலும் பெரும் பாவம். அவர் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யத்தான் போகிறேன்" என்றாள். துக்கத்திற்குப் பின்வரும் உறுதி அவள் குரலில் தொனித்தது.

சோமதேவர் காதுகளில் அவர்கள் சம்பாஷணை நாராசம் போல் விழுந்தது. ராதா ஒரு பலி மாடு என்றதுமே அவருக்கு மயக்கம் வந்துவிடும் போலிருந்தது. கடைசியில் அவர் ஆசையுடன் கட்டியிருந்த கோட்டைகள் தகர்த்தெறியப் பட்டன. தம் சபதம் நிறைவேற வேண்டுமானால் ராதாவின் வாழ்க்கை குலைக்கப்பட வேண்டும். வளர்த்த பாசம் அவரை அவ்வாறு செய்ய விடவில்லை. ஒரு பெருமூச்சுடன் வீட்டினுள் நுழைந்தார். அவர் வரவைக் கண்டதும் சம்பாஷணை தடைப்பட்டது.

அன்றெல்லாம் சோமதேவர், உரையாடவில்லை. அவர் மனதில் பெருத்த போராட்டம் நடந்து கொண்டிருந்தது. தாம் பத்து வருஷங்களாகப் பட்டகஷ்டங்களெல்லாம் வீணுக்கு என்ற எண்ணம் வருந்தோறும், அவர் உள்ளத்தை அவமானம் போட்டு அழுத்தியது. ராஜசபையில் தொங்கிக் கொண்டிருக்கும் மாலை கண்முன் நிற்கும். அதை மீட்க ராதாவை உடனே அழைத்துச் செல்ல மனம் தூண்டும். அதேசமயம், அவள் தாய்க்குக் கொடுத்த வாக்கை நினைவிற்குக் கொண்டுவருவார் ராதாவின் வாழ்க்கையைக் குலைத்தாலல்லவோ வெற்றி. ஒரு வேளை ராஜேந்திரனைக் கேட்டுக் கொண்டால் அனுமதிப்பான் என்ற ஆசை எழுந்தது. "சே, அவனிடமா போய் பிச்சை கேட்க வேண்டும்?" என்று அவ்வெண்ணத்தைத் தூரத் தள்ளி வைத்தார். முடிவில் ஒரு தீர்மானத்திற்கு வந்து சேர்ந்தார்.

மாலை அஸ்தமனநேரம், சோமதேவர் ராதாவை அழைத்தார். அவள் முகத்தில் ஒருவிதமான ஏக்கம் குடிகொண்டிருந்தது, அவள் இஷ்டப்படி அரச சபையில் பாடிவிடுவது என்று தீர்மானித்திருந்தாலும் ராஜேந்திரனுடைய அன்பை இழக்க வேண்டிவருமே யென்றும் கவலையிருந்தது அவளுக்கு. "குழந்தாய் அம்பிகையை நமஸ்காரம்பண்ணு" என்றார். ராதாவிற்கு இது வியப்பளித்தது. சொற்படியே நமஸ்காரம்செய்தாள். பிறகு "தம்பூரைக் கொண்டுவா, தேவியின் எதிரில் பாட வேண்டும்" என்றார். சோமதேவர் சுருதி கூட்ட ராதா பாட ஆரம்பித்தாள். அவள்

உள்ளத்திலே அலைபுரண்ட சோகமெல்லாம் ராகமாக வெளிவந்தன. அவள் பாடுகையிலே அவளையறியாது கண்களிலே, புல புலவென்று கண்ணீர் வழிந்தது. சோமதேவர் தலையை நிமிர்த்தவில்லை. அடக்கி வைத்திருந்த துக்கம் அவர் கண்களில் கரை புரண்டோடியது. இரவு வெகுநேரம் வரைக்கும் ராதா பாடினாள். தாம் கற்றுக் கொடுத்த பாட்டை ஒன்று விடாமல் பாட வைத்தார் சோமதேவர். முடிந்ததும் கடைசியாகத் தாம் பாடத் தொடங்கினார். அன்று கதறினார் என்றுதான் சொல்ல வேண்டும். தம் நிறைவேறா ஆசையை அம்பிகையிடம் சொல்லி அழுவதைப்போலப் பாடி முடித்தார். வளர்த்த பாசம்திர ராதாவை இறுக அணைத்துக் கொண்டார். பிறகு அவளைத் தம் அறைக்கு அழைத்துப் போனார். ராதாவிற்கு ஆச்சர்யத்தினால் வாயடைத்துப் போய்விட்டது.

"குழந்தாய்! நீங்கள் காலையில் பேசிய பேச்சைக் கேட்டேன். நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். உன் வாழ்க்கையைக் கெடுக்க விரும்பவில்லை நான். உன் தாய்க்குப் பத்து வருஷங்கள் முன்பு வாக்குக்கொடுத்தபடி, உன்னை கரையேற்றி விட்டேன். என் சபதம்தான் நிறைவேற வில்லை. என் கட்டை இனி வேகாது. அது போகட்டும். நான் நாளை சூரியோதயத்திற்கு முன்பு காசிக்குப் புறப்படத் தீர்மானித்து விட்டேன். எப்படியாவது நீங்கள் சுகமாயிருங்கள்" என்று கண்களில் நீர் வழிய ஆசீர்வதித்தார். ராதா 'கோ' வென்று கதறிவிட்டாள்.

மறு நாள் சேவல் கூவியது. சோமதேவர் கையில் தம்பூராவுடன் கீழ் வானத்தை நோக்கிப் பயணமானார். உதயராகம் பாட வேண்டிய தருணத்தில் அவர் தமது வாழ்க்கையின் அஸ்தமனராகத்தை மீட்டிக் கொண்டு சென்றார். காரிருளில் அவர் உருவம் மயங்கியதைக்கண்டு ஒரு உள்ளம் கதறியது, பத்துவருஷங்களுக்கு முன்பு வைராக்கியத்துடன் அவர் மாட்டியமாலை ஏளனத்துடன் காற்றில் அசைந்தது.

ஆயுர்வேத வித்வான் 'B.V. பண்டிட்' அவர்களின்
சத்வைத்யசாலை: நஞ்சன்கூடு.
"நஞ்சன்கூடு பல்பொடி"
I.D.L நெ 61, மெடிகேட் [பல் உபாதைகளுக்கு]
குழந்தைகளுக்கு
காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் பேதியாக மாத்திரை
ஜ்வரேக் [எவ்வித ஜ்வரங்களுக்கும்]
ஜிர்சிப் [அஜீர்ண பித்த சமனி]
கூலெக்ஸ் [உஷ்ண சமன ஸ்நான தைலம்]
கவனிப்பு:- மாதர்களுடைய சூதக, கெர்ப்பாசய உபாதைகளுக்கு விபரம் எழுதி சிகிச்சை பெறலாம்
ஸான்டலக்ஸ் நறுமண சரும ரக்ஷிணி முகப்பரு, புண், சொறி குணமடைய.
காஷ்மீர்-குஸும் கூந்தல் செழிப்புக்கு நீங்களே தைலம் செய்ய உதவுகிறது.
மைசூர் "பிரேமலீலா" உயர்தர ஊதுபத்திகள்.
'அகர் ஸ்பெஷல், ஜவாது, ஜெயலக்ஷ்மி'
யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதறாஸ்.

# ஆசை முகம்

**எஸ். கிருஷ்ணன்**

தீபாவளியன்று விடியற்காலை, வெந்நீர் போட்டுக்கொண்டிருந்த சகுந்தலா வாசற்புறத்து அறையிலிருந்து தன் கணவன், "சகு!" என்று அழைப்பதைக் கேட்டு அவனிடம் சென்றாள். ரங்கராஜன் ஒரு கதர் வேஷ்டியையும் மஞ்சள் நிறமான கதர் புடவை ஒன்றையும் அவள் கையில் கொடுத்துவிட்டு, "இவைதான் நம் தீபாவளி ஜவுளி" என்றான். அவன் தொண்டை கம்மியதுபோல் தோன்றவே சகுந்தலா கணவனை நிமிர்ந்து பார்த்தாள், ரங்கராஜனுடைய கண்கள் கலங்கியிருந்தன.

ஆனால் அதன் காரணத்தைக் கேட்க அவள் துணியவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்வரை கிராமத்தில் ஏழைக் கணக்குப்பிள்ளையின் பெண்ணாய் வளர்ந்த அவளை ரங்கராஜன் வலுவில் வந்து கட்டிக்கொண்டான். அவன் பட்டணத்தில் ஒரு பெரிய டாக்டர். அவனுடைய அந்தஸ்துக்கும் அவளுடைய அந்தஸ்துக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருந்தது. அப்படியிருந்தும் முன்னால் அறிமுகமே இல்லாத அவன் எப்படி அவளைத் தேடிவந்து மணந்தான்? ஏன் மணந்தான்? இந்தக் கேள்விகளைக் கேட்க ஆசையிருந்தாலும் தைரியமில்லை.

கிராமத்தில் சிறிய வீட்டில் தகப்பனுருக்குப் பயந்து வாழ்ந்தவள் இப்பொழுது பட்டணத்தில் பெரிய பங்களாவில் கணவனுக்குப் பயந்து வாழலானாள். கிராமத்தில் நாலணா செலவுசெய்ய நாலுதடவை யோசிக்கும் நிலைமைபோய், நூற்றுக் கணக்கில் பணம் இருந்த பெட்டியின் சாவி அவள் கையில் இருந்தது. பெட்டி அக்ஷய பாத்திரமாயிருக்கத் தினமும் மாலையில் அவள் கணவன் தன் கோட்டைக் கழற்றி வைத்ததும், "சகுந்தலா, பாக்கட்டில் இருக்கிற பணத்தை எடுத்துப் பெட்டியில் வைத்துக்கொள்" என்று சொல்வான். ஒருநாள் கோட் ஜேபியில் நூறு ரூபாய் நோட்டுக்களும் பத்து ரூபாய் நோட்டுக்களும் இருக்கும். இன்னொரு நாள் தர்ம ஆஸ்பத்திரிகளுக்கும் அனாதை விடுதிகளுக்கும் நூற்றுக் கணக்கில் சந்தா செலுத்திய ரசீதுகள் இருக்கும். கணவனுடன் வந்த புதிதில் பயம் ஒன்றுதான் இருந்தது. நாளடைவில் அவள் கணவனை மனதால் பூஜிக்கலானாள். மரியாதையும் பக்தியும் அவளைக் கணவனிடம் சகஜமாய்ப் பேச அனுமதிக்காமல் செய்துவிட்டன. ரங்கராஜனும் மனைவியிடம் கலகலப்பாய்ப் பேசிக் கொண்டிருக்கமாட்டான்.

ஆகவே இன்று கணவனுடைய கண்களில் நீர் நிறைவதைப் பார்த்தபோது அதன் காரணத்தை அறிய ஆவலாய் இருந்தும் அவள் வாய்திறந்து கேட்காமல் அவனையே பார்த்துக்கொண்டு திகைத்து நிற்கத்தான் செய்தாள்.

ரங்கராஜனும் இமைகொட்டாமல் சில நிமிஷம் அவளையே பார்த்துக்கொண்டிருந்த பின், "புடவை உனக்குப் பிடித்ததோ என்னவோ? ஆனால் அதன் மதிப்பு என்ன என்று தெரியுமா, சகு? இந்தப் புடவையும் வேஷ்டியும் பல வருஷகாலமாய் என் பெட்டியில் இருந்துவந்திருக்கின்றன. இவைகள் ஏற்பட்ட வரலாற்றை எண்ணும்போது எத்தனையோ நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன. நீ ஒரு நாற்காலியில் உட்கார். நான் விவரமாய்ச் சொல்லுகிறேன்" என்றான்.

சகுந்தலா ஒரு நாற்காலியில் உட்கார்ந்ததும் ரங்கராஜன் சொல்லத் தொடங்கினான்—

இப்பொழுது எனக்கு வயது முப்பது. சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன் நான் ஆறும் பாரத்தில் படித்துக்கொண்டிருந்தேன். என் தகப்பனார் வக்கீல் தொழிலில் ஏராளமாகச் சம்பாதித்து வைத்துவிட்டுப் போயிருந்தார். தாய்க்கு ஒரே மகனான நான் சுகபோகத்தில்தான் வளர்ந்து வந்தேன்.

அந்த வருஷம் பள்ளிக்கூடத்துக்குப் போக ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கியிருந்தேன். ஒருநாள் மத்தியானம் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குச் சாப்பிட வந்துகொண்டிருந்தேன். நல்ல பசி. வெயில் நெருப்பைக் கக்கிக்கொண்டிருந்தது. தலை சுற்றுவது போலிருந்தது,

மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கி எறியப்பட்டேன். கண் விழித்துப் பார்த்த போது ஆஸ்பத்திரியில் படுத்திருந்தேன். என் தாயும் அவள் அருகில் ஒரு பெண்ணும் நின்றிருந்தார்கள். அந்தப் பெண் எங்கள் பள்ளியில் நான்காம் பாரத்தில் படித்திருந்த கமலாதான். நான் கண் திறந்து பார்த்ததைக் கவனித்த தாய், "என் வயிற்றிலே பால் வார்த்தாயடா அப்பா", என்றுள் கண்ணீர் சொரிந்து கொண்டே. பக்கத்தில் நின்றிருந்த டாக்டர் சிரித்துக்கொண்டே, "பால் வார்த்தவள் உங்கள் பக்கத்தில் நிற்கும் பெண் தான். பாதையில் போய்க்கொண்டிருந்தவள், தைரியமாய் உங்கள் பிள்ளையின் அடிவயிற்றில் காயம்பட்ட இடத்தில் தன் பாவாடைத் தலைப்பைக் கிழித்துக்கட்டி, அழுத்திப் பிடித்துக் கொண்டதால்தான் உங்கள் பிள்ளை பிழைத்தான். அவள் அப்படிச் செய்திராவிட்டால் நான் இங்கே ஒன்றும் செய்திருக்க முடியாது உங்கள் பிள்ளைக்கு," என்றுர். நான் கமலாவுக்கு நன்றி தெரிவிக்க எண்ணி ஏதோ பேச வாய் திறந்ததும் டாக்டர், "நீ இன்னும் கொஞ்சநாள் பொறுத்துக்கொள். பேசக் கூடாது. அப்பா, உன் வயிறு தைக்கப் பட்டிருக்கிறது." என்று எச்சரித்தார். கொஞ்ச நேரத்துக்குப் பின் தாயும் கமலாவும் வெளியே சென்றுர்கள்.

பதினைந்து நாட்களுக்குப் பின் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்தேன். அன்று மாலை தாய் கோயிலில் நெய் விளக்கு வைக்கப் போயிருந்தாள். கண்களை மூடிக் கொண்டு கட்டிலில் படுத்திருந்தேன் நான். காலோசை கேட்கவே நான் கண் திறந்து பார்த்தேன். கமலா வந்திருந்தாள்.

அவள் உடலில் உயர்ந்த ஆடைகளையோ நகைகளையோ என்றுமே நான் பார்த்ததில்லை. மாதம் தவருமல் பள்ளியில் உள்ள வாத்தியார்களிடம் சந்தா வசூல் செய்து அவள் பள்ளிப் பீசு செலுத்துவது வழக்கம் என்பது எனக்குத் தெரியும்.

அவளிடம் பேச்சு ஆரம்பிப்பது எப்படியென்று தெரியாமல் தவித்தபின், "சம்பளம் செலுத்தி விட்டாயா?" என்று கேட்டேன்.

"இன்னும் இல்லை, எட்டுத்தேதி தானே ஆகியிருக்கிறது. பதினைந்தாம் தேதி கட்டினுல்போதும். பயப்படாதீர்கள். நான் உங்களிடம் பணம்கேட்க இப்பொழுது வரவில்லை. உங்கள் உடம்பு எப்படியிருக்கிறது என்று கேட்டுவிட்டுப் போகத்தான் வந்தேன்." என்றுள் கமலம்.

நான்: "பணம் கேட்டால் தவரு, கமலா? உனக்கு அந்த உரிமையில்லையா! என் உயிரைக் காப்பாற்றின உனக்கு எவ்வளவோ கடமைப் பட்டவன்" என்றதும், கமலா சிரித்துக்கொண்டே, "நாடகமேடையில் பேசுகிறமாதிரியல்லவா பிரசங்கம் செய்கிறீர்கள்? போனவருஷம் நாடகத்துக்கு நெட்டுருப்பண்ணினது ஞாபகம் இருக்கிறதாக்கும்? நான் அவசியமானுல் உங்களிடம் கூசாமல் பணம் கேட்பேன். உபாத்தியாயர்களிடமெல்லாம் இரக்கலாம் என்ருல் உங்களிடம் கூடாதா?" என்ருள்.

எனக்கு அவ்வார்த்தைகள் பரம வேதனையளித்தன. "நீ இரக்கவேண்டாம் கமலா! உனக்கு உரிமை உண்டு." என்றேன் நான்.

"இருக்கட்டும். கொடுத்தால் தாராளமாய் வாங்கிக்கொள்கிறேன், இதற்காகத் தர்க்கம்செய்வானேன்? சரி. நான் போய் வரட்டுமா?" என்று கேட்டுக்கொண்டு என் பதிலைக்கூட எதிர்பாராமல் அவள் சென்றுவிட்டாள்.

அந்த வருஷம் அவளுக்கு என்தாய் பள்ளிச் சம்பளத்துக்குப் பணம் கொடுத்தாள். அடிக்கடி கமலா தன் தாயுடன் எங்கள் வீட்டுக்கு வருவாள். கமலா எப்படியாவது எஸ். எஸ். எல். ஸி-தேறி, பள்ளி உபாத்தினிப் பயிற்சியும் பெற்று விட வேண்டும் என்று தாயும் பெண்ணும் ஆசைப்பட்டார்கள். கமலம் சிறு வயதிலேயே தந்தையை இழந்துவிட்டவள்.

நான் எஸ். எஸ். எல். ஸி-தேறியதும் வெளியூருக்குக் காலேஜில் படிப்பதற்காகப் போகவேண்டியிருந்தது. தாயைத் தனியாய் எப்படிவிட்டுப்போவது என்று கவலைப்பட்டதுடன், ஒரு நாள் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது கமலாவும் இருந்தாள். அவள், "உங்கள் தாய்க்கு அவசியமான உதவி நான் செய்துகொடுக்கிறேன். இரவில் உங்கள்தாய்க்குத்துணையாய்ப் படுத்துக்கொள்கிறேன். நீங்கள் கவலையில்லாமல் காலேஜில் படிக்கப்போகலாம்." என்ருள். நான் தாயிடம், "அம்மா, கமலாவும் அவள் தாயும் இங்கே உன்னுடன் இருக்கட்டும். எனக்கும் ஊரில் சமாதானமாயிருக்கும்." என்றேன், தாய் மகிழ்ச்சியுடன் என் யோசனையை ஏற்றுக்கொண்டாள். அவளேகமலத்துக்குப்

178069

படிப்புக்கு வேண்டிய பணம்கொடுக்கவும் ஒப்புக்கொண்டாள்.

நான் காலேஜில்படிக்கப் போய்விட்டேன். விடுமுறையின்போது ஊருக்கு வருவேன். காரியத்தைத் திருந்தச்செய்வதில் எனக்குத் தனித்திறமை உண்டு. படித்துக்கொண்டிருக்கும் புத்தகத்தை அப்படியே திறந்துவைத்துவிட்டுத் தூங்கிவிடுவேன். தலையில் தடவிக்கொள்ளும் எண்ணெய்ச் சீசா திறந்தபடியே மேஜைமேல் இருக்கும். அழுக்கான துணிகளைச் சுருட்டி அறையின் மூலைகளில் குவித்திருப்பேன். அவைகளை ஏற்கவிருக்கும் அழுக்குக்கூடை காலியாய் இருக்கும்.

ஆனால் நான் விடுமுறைக்கு வந்தபோது அறை உண்மையில் மிகவும் சுத்தமாய்க் காணப்படத்தொடங்கியது. நான் சுபாவத்தை மாற்றிக்கொண்டதால் அல்ல. ஆனால் நான் வெளியே போயிருக்கும் சமயம் வேறு ஒருவருடைய முயற்சியால்தான் அப்படி அழகாய்த் தோற்றமளித்தது. இதெல்லாம் கமலாதான் செய்கிறாள் என்று எனக்குத் தெரியும். என் புத்தக ஷெல்பில் அவள் தன் அழகான கையெழுத்தில் ஆங்கிலத்தில், "தூய்மை தெய்வத் தன்மைக்கு அடுத்தபடி" என்று ஒரு காகிதத்தில் எழுதி ஒட்டியிருந்தாள்.

ஒரு நாள் மாலை அவள் அறையைச் சுத்தம் செய்துகொண்டிருக்கும் போது நான் வெளியேயிருந்து அறைக்குள் நுழைந்தேன். நண்பர்களுடன் சினிமாவுக்குப் போவதற்காகப் பணம் எடுக்கத்தான் நான் வந்திருந்தேன். கமலாவிடம், "புத்திகற்பிக்க எண்ணி எழுதி ஒட்டினாலும் எனக்குப் புத்திவர வில்லை, இல்லையா, கமலா?" என்றேன் வேடிக்கையாக. கமலாவின் முகம் வாடிவிட்டது, "அதனால் உங்களுக்கு என் மேல் கோபமானால் அதைக் கிழித்து எறிந்து விடுகிறேன்" என்றாள் அவள். காகிதத்தின் பக்கம் போன அவள்கையைப் பிடித்து விலக்கிவிட்டு, "நீயும் வருகிறாயா? நான் சினிமாவுக்குப் போகிறேன்," என்றேன். கமலம் சாந்தமாய், "இன்றைக்கு உரிமையில்லை, ஆனால் நான் கொடுத்து வைத்திருந்து அந்த உரிமை கிடைத்தால் அப்பொழுது கட்டாயம் வருகிறேன்." என்றாள் புன்முறுவலுடன். "சரி." என்று கூறிக்கொண்டு நான் கீழே சென்றேன்.

இரண்டு வருஷங்கள் சென்றன. நான் இண்டர்மீடியெட் பரீக்ஷை எழுதிவிட்டு விடுமுறைக்காக வந்திருந்தேன். கமலமும் எஸ். எஸ். எல். ஸி பரீக்ஷை எழுதியிருந்தாள்.

இந்த இரண்டு வருஷங்களில் நான் சற்று மாறியிருந்தேன். பத்திரிகைகள் படித்துவிட்டு அரசியல் தத்துவத்தின் கரை கண்டுவிட்டதாக எண்ணிக்கொண்டு பிறருடன் தர்க்கம் செய்வேன். கல்லூரியில் நடக்கும் கூட்டங்களில் காரசாரமாய்ப் பேசுவேன். பாப்லின், டுவீட் எல்லாம் போய், கதர் ஜிப்பாவும் கதர்வேஷ்டியும் என் உடலை அலங்கரிக்கலாயின.

என் ஆடையைப் பார்த்துத் தாய் அங்கலாய்த்துக்கொண்டு, "இந்த முரட்டுத்துணி மேலே உனக்கு மோகம் ஏற்பட்டுவிட்டதேடா? நல்ல பட்டுச் சொக்காய் தைத்துப் போட்டுக்கொள்ளலாகாதா?" என்று பரிதாபப்படுவாள் எனக்காக.

விடுமுறைக்கு வந்திருந்தபோது ஒரு நாள் மத்தியானம் கமலா என் அறைக்குள் நுழைந்தாள். அவள் கையில், இந்தப் புடவையும் இந்தக் கதர்வேஷ்டியும் இருந்தன. இவைகளை என் முன் வைத்துவிட்டு இவை நான் நூற்ற நூலைக்கொண்டு நெய்தவை. உங்களுக்குக் கதர் என்றால் ரொம்பப் பிடிக்கும் அல்லவா?" என்றாள்.

நான் சிரித்துக் கொண்டே, "எனக்குப் பிடிக்கும் என்பதற்காகவா நீ நூற்றாய்?" என்றேன். கமலம் புன்னகை தவழ, "உங்களுக்குப் பிடித்தால் அது எனக்குப் பிடிக்கும்" என்றாள். 'சரி, அப்படியானால் இவையிரண்டும் நம் தலைத்தீபாவளிக்கு ஆடைகள். என் பெட்டியில் வைத்திருக்கிறேன்." என்று கூறிக்கொண்டு என் பெட்டியில் வைத்துவிட்டுத் திரும்பிப்பார்த்தால் என் தாயார் அறையில் வந்து நிற்கிறாள். என்னிடம், "என்னமோ தலைத்தீபாவளி என்றெல்லாம் பிதற்றிக்கொண்டிருந்தாயே, உனக்குப் புத்தி கெட்டுப்போய் விட்டதா? பதினெட்டு வயது இனிமேல் தாண்டா உனக்கு நிரம்பப்போகிறது! என்வார்த்தையை மீற இன்னும் வயது வரவில்லை" என்று நிறுத்தினாள். அவளுடைய வார்த்தை எதையும் நான் மீறினதாக எனக்கு நினைவுவரவில்லை. "நீ என்னம்மா சொல்கிறாய்?" என்றேன் குழம்பிய மனதுடன்.

தாய் எனக்குப் பதில் சொல்லாமல் அரண்டு நின்றிருந்த கமலாவிடம், "ஏண்டீ, அவனுக்குத்தான் புத்தி மழுங்கிப் போயிற்று என்றால் உனக்காவது தெரிய வேண்டாம்? குலப் பெருமை குடிப்

பெருமை ஒன்றையும் பாராமல் நான் உன்னை என் பையனுக்குக் கட்டிக்கொண்டு விடுவேன் என்று கனவா காண்கிருய்? எனக்குச் சந்தேகம் கொஞ்ச காலமாகவே உண்டு. உன் வெளித்தோற்றத்திலே என் பையன் மயங்கி விடுவான் என்று நான் பயந்தது நிஜமாய்ப்போய்விட்டது. பாம்புக்கு..............."தாயின் வார்த்தைகளைப் பொறுக்காமல் நான் குறுக்கிட்டு, "அம்மா" என்றேன் கோபமுடன். தாய் ஒரு கணம் என்னைப் பார்த்துப் பிரமித்து நின்ருள். பிறகு, "ஏண்டா, என்னையே அதட்டி அடக்கத் தொடங்குகிருயா? அதற்கு நான் பயந்துவிடமாட்டேன்." என்று சொல்லும்போது தாயின் குரல் கம்பிவிட்டது. நான் சந்தேகமாய், "அம்மா ஒரு நாள் இந்தக் கமலாதான் என்னைக் காப்பாற்றிஞள், மறந்துவிடாதே. அதஞல்தான் நீ இன்று குலப் பெருமை குடிப் பெருமை எல்லாம் பேச முடிகிறது" என்றேன்.

"இவள் இல்லாவிட்டால் வழியில் போகிற இன்னொருவன் உன்னைக் காப்பாற்றி யிருப்பான். மேலும் இவள் செய்த உபகாரத்துக்கு நான் இவளையும் தாயையும் வீட்டோடு வைத்துச் சாதம் போடவில்லையா? இவளுக்குப் படிப்புக்கு நான்தானே பணம்கொடுத்து வருகிறேன்? இன்னும் நாலு வருஷம் வேணுமாஞலும் இருக்கட்டும். காலேஜில் போய், பி. ஏ. படிக்கிருளாஞலும் படிக்கட்டும். செலவுக்குப் பணம் கொடுக்கிறேன், இல்லையென்ருல் இவள் இனத்திலேயே நல்ல பையன் இருந்தால் சிறப்பாய்க் கல்யாணம் செய்து வேணுமாஞலும் கொடுக்கிறேன். ஆஞல் உன் இஷ்டப்படி நடக்க நான் சம்மதிக்கவேமாட்டேன். ஞாபகம் இருக்கட்டும்", என்று கூறிவிட்டு என் தாய் வேகமாய் வெளியே சென்றுவிட்டாள்.

கலங்கி நின்றிருந்த கமலத்தின் முகம் வெளிறிப்போயிருந்தது. என் அருகில்வந்து என் கால்களில் தலைவைத்து நமஸ்கரித்தாள். அவளுடைய கண்களின் சுடு கண்ணீர் என் பாதங்களில் விழுந்தது. நான் வாய் அடைத்துப் போனேன். அவள் வெளியே சென்றுவிட்டாள்.

ஆஞல் அவள் என்னிடம் சொல்லிக் கொள்ளாமல்கூட என் வீட்டிலிருந்து வெளியே செல்வாள் என்று நான் எதிர்


## நின்றுபோன மாதவிடாய்



குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்திஞல் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்ருர்கள்

| | | | |
|---|---|---|---|
| சாதாரண கேஸ்களுக்கு | ... | ... | ரூ. 3 |
| நீண்டநாளைய கேஸ்களுக்கு | ... | ... | ரூ. 5 |
| மிக ஆபத்தான கேஸ்களுக்கு | ... | ... | ரூ. 8 |
| கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு) | | ... | ரூ. 4 |

(வி. பி. அணு 12 கூட)

தயாரிப்பவர்:-

**MRS. P. DEVEE, F.D.S. (C.M.)**
Tollygunge CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

ஹாரி & சன், 93, சைஞபஜார் ரோடு மதராஸ்.
ராகவன் & கம்பெனி, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு பங்களூர் ஸிடி
நாதம் & கம்பெனி மட்டஞ்சேரி, கொச்சி.
J. திராத் & கம்பெனி, மஹாத்மா காந்தி ரோடு, கராச்சி
L. M. முகர்ஜி & சன்ஸ் லிமிடெட் 167, தராம்தோலா தெரு கல்கத்தா.
சிவானந்த சித்தர் மெடிகல் ஹால், 92, கடல்தெரு கொளும்பு, &
768, லோவர் தெரு, பாத்துல்லா (ஸிலோன்)

பார்க்கவே இல்லை. அன்று மாலை நான் வெளியே போய்விட்டு வீட்டுக்கு வந்த போது என் மேஜைமேல் ஆங்கிலக் குறிப்பு ஒன்று இருந்தது. "நான் போய் வருகிறேன். மறுமுறை உங்களைச் சந்திக்கச் சந்தர்ப்பம் வாய்க்குமோ என்று கூடத் தெரியாது. எங்கேயிருந்தாலும் உங்கள் நன்மையையே விரும்புவேன். என்னை மன்னிக்கவும். உங்கள்,
கமலா"
என்று எழுதியிருந்தது அதில்.

தாயும் பெண்ணும் எங்கே போனார்கள் என்று எனக்குத்தெரியாது, நான் இண்டர் மீடியட் தேறி வைத்திய கல்லூரியில் சேர்ந்தேன். மூன்று வருஷங்களுக்குப்பின் என் தாய் காலமானாள். டாக்டர் பட்டம் பெற்றுக் கல்லூரியிலிருந்து வெளியே வந்த போது நான் தனியனாயிருந்தேன்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்திரண்டாம் வருஷம் யுத்தகாலமானதால் வெகு சுலபமாய் எனக்கு வேலை கிடைத்தது சர்க்கார் ஆஸ்பத்திரி ஒன்றில்.

நாட்டில் புரட்சி துவங்கியது அந்த ஆகஸ்ட்மாதம். நான் வேலைபார்த்து வந்த ஆஸ்பத்திரியில் போலீசாரால் தாக்கப்பட்டுச் சிகிச்சை பெற வந்தவர் அனேகர்.

அன்று இரவு பத்துமணியிருக்கும். நான் என் அறையில் உட்கார்ந்து ஏதோ படித்துக்கொண்டிருந்தேன். திடீரென்று டெலிபோன் மணி ஒலித்தது. ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு நர்ஸ் ஒரு கேஸ் வந்திருப்பதாகவும் என்னை உடனே புறப்பட்டு வரும்படியும் போனில் சொன்னாள். நான் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டுச் சென்றேன். நர்ஸ் காட்டிய கட்டிலின் அருகில் போனதும் நான் திடுக்கிட்டேன்; கட்டிலில் படுத்திருந்தவள் வேறு யாரும் அல்ல, கமலாதான். அவளும் என்னைப் பார்த்து "நீங்களா?" என்றாள் வியப்புடன்.

முதலில் அவளைப் பரிசோதனை செய்தேன். அடி வயிற்றில் போலீசாருடைய சாட்டை அடி பட்டிருந்தது. ஏற்பட்டிருந்த காயம் அவளுடைய உயிருக்கே ஆபத்தைக் கொண்டுவந்து விடும் என்று தெரிந்து கொண்டேன். அவள் உடலில் இரத்தம் வெகு வேகமாய் விஷமயமாய்க்கொண்டு வந்தது. ஆனால் அதைத் தடுக்க முடியாது. வாடித் துவண்ட மலர்போல் கிடந்த கமலாவைப் பார்த்துக் கையைப் பிசையத்தான் என்னால் முடிந்தது. என் நிலைமையைக் கமலா ஊகித்துக்கொண்டுவிட்டாள். "என்னிடம், நீங்கள் கவலையே படாதீர்கள். உங்களைப் பார்க்கச் சந்தர்ப்பம் வாய்த்ததே என் பரம பாக்யம். உங்களிடம் தனிமையில் பேச முடியுமா?" என்றாள். எங்களை ஆச்சரியமுடன் பார்த்துநின்றிருந்த நர்ஸ் சட்டென்று வெளியே சென்றாள். நான் கமலாவின் கட்டில் அருகில் உட்கார்ந்தேன்.

கமலா சொல்லலானாள்; "அதிக நேரமில்லை. சுருக்கமாய்ச் சொல்லிவிடுகிறேன். நானும் தாயும் உங்கள் வீட்டிலிருந்து வெளியேறி, என் சிறு தாயார் வீட்டில் சில காலம் தங்கியபின் இந்த ஊருக்கு வந்தோம். ஒரு ஆபீசில் குமாஸ்தா வேலை கிடைத்தது. ஒரு வருஷத்துக்கு முன் என் தாய் காலமாகிவிட்டாள். ஐந்து வருஷ காலம் வேலை பார்த்த எனக்கு நான் அர்த்தமில்லாமல் வாழ்வதாகவேதோன்றியது. உங்களை மறக்கவும் முடியவில்லை. உங்களைவிட நான் கீழான இனத்தவள் ஆனதால்தானே உங்களுக்கும் எனக்கும் இடையே இந்தச் சுவர் எழுப்பப்பட்டது? இவ்விதமான தடைகள் இல்லாத சமூகம் ஏற்படாதா என்று எண்ணுவேன். அரசியல் சுதந்திரம் கிடைத்து விட்டால் சமூகச் சீர் திருத்தமும் தானே ஏற்பட்டுவிடும் என்று பலபேர் சொல்லிக் கேள்விப்பட்டேன். நேற்று அரசியல் சுதந்திரத்துக்காகப் போர் துவங்கிற்று. தலைவர்கள் நேற்று விடியற்காலையில் கைது செய்யப்பட்டு எங்கோ அழைத்துச் செல்லப்பட்டார்கள். இங்கே ஏற்பட்ட கொந்தளிப்பில் நானும் கலந்துகொண்டேன். நான் விரும்பும் அரசியல் சமூகச் சீர்திருத்தம் சீக்கிரம் ஏற்பட என்னாலான உதவியைச் செய்ய எண்ணினேன். அப்படி சீர்திருத்தம் ஏற்பட்டாலும் உங்களை அடைய முடியுமா? என்று எனக்குள் சந்தேகம்தான். 'அந்தவழி என்றென்றைக்குமாக அடைபட்டுவிட்டால்?' என்று பயந்தேன். ஆனால் மறு நிமிஷம் எனக்குப் பயன்படாவிட்டாலும் என்னைப் போன்ற நிலையிலிருக்கும் இன்னும் பலரும் பயனடையலாம் அல்லவா என்று எண்ணிக்கொண்டேன்.

இன்று மாலை தலையில் காந்திக் குல்லாவுடன் போய்க்கொண்டிருந்தவர்களை எல்லாம்கூடப் போலீசார் தாக்கினர். கடை வாசலிலோ வீட்டுவாசலிலோ பறந்த மூவர்ணக்கொடிகளைப் பிடுங்கிக் கிழித்துக் காலால் தேய்த்தனர். தன் குல்லாவில் இருந்த சிறு கொடியைக் கொடுக்க மறுத்துப் போலீசாரிடம் அடிவாங்கிக்கொண்டிருந்த ஒரு வாலிபன் அருகில் நான் வந்த

தும் அவன் கொடியை என் பக்கம் வீசி எறிந்து விட்டு, “இதைக் காப்பாற்றுங்கள்” என்று கூறினான். நான் கொடியைக் கையில் எடுத்துக்கொண்டு நிமிரும்போது வாலிபன் துவண்டு விழுந்து விட்டான். இருபோலீசார் என்னருகில் வந்து கொடியைக்கேட்டார்கள். நான் தர மறுத்ததும் ஒருவன் சவுக்கால் இருமுறை என் வயிற்றில் அடித்தான். இன்னொருவன் மூன்றாம் முறை அடிக்க ஓங்கிய அவன் கையைப் பிடித்துக்கொண்டு “போதும். சாதுப் பெண்ணைப் போட்டடிக்காதே. அந்தக் கொடியில்லாவிட்டால் போகிறது” என்றான். அவர்கள் என்னருகிலிருந்து நகர்ந்தபின் தான் அடிவயிற்றுவலி தாங்கமுடியாமல் அவதிப்படுவதை நான் உணர்ந்தேன். நடக்கமுடியவில்லை. பாதையோரத்தில் உட்கார்ந்த போது போலீசு லாரி ஒன்று வந்தது. இங்கே கொண்டுவந்து சேர்க்கப்பட்டேன். அந்தக் கொடியை நர்ஸ் என் தலையணைக்கடியில் வைத்திருக்கிறாள், அதை நீங்கள் எடுத்துப் பத்திரமாய் வைத்துக்கொள்ளுங்கள். அந்த வாலிபனையும் என்னையும் போன்ற எத்தனையோ பெயர்களுடைய நம்பிக்கைகள், ஆசைகள், கஷ்டநஷ்டங்கள் எல்லாவற்றிற்கும் சாக்ஷியான இந்தக் கொடி ஒரு நாள் நம்மவர்கள் இன்பமுற்றுச் சுதந்திரமாய்ச் சுந்தர வாழ்வு வாழ்வதையும் பார்க்கும். அன்று நான் இருக்கமாட்டேன். ஆனால் உங்களையும் என்னையும் பிரித்துவைத்த சுவரும் அன்று இருக்காது,” என்று கூறிச் சற்றுக் களைப்பாறிவிட்டு மேலும் தொடர்ந்தாள். “நான் இன்னொரு முக்கியமான காரியம் சொல்லவேண்டும், நானும் என் தாயும் சிலகாலம் என் சிறு தாயார் வீட்டில் தங்கியிருந்தோம். என்று சொன்னேனல்லவா? அந்தக் குடும்பம் பரம ஏழையான குடும்பம். அவர்களுக்கு என்னால் எந்த உதவியும் செய்யமுடியவில்லை. உங்களால் முடியுமானால் செய்யுங்கள்” என்று கூறி, உன் தகப்பனார் விலாசத்தைச் சொன்னாள். அதை நான் குறித்து வைத்துக்கொண்டேன்,

கமலா போய்விட்டாள். முகத்தில் புன்னகையுடனும் உள்ளத்தில் தான் முழுமனதுடனும் நேசித்தவன் மடியில் கடைசி நிமிஷமாயினும் தலை வைக்க முடிந்ததே என்ற திருப்தியுடனும் கமலா போனாள். என் இதயத்தில் கொழுந்து விட்டெரியும் துயரக்கனலை மூட்டிவிட்டுப் போனாள்.” என்று கூறி விம்மினான் ரங்கராஜன்.

பிறகு தொடர்ந்தான்: “நான் வேலையை ராஜினாமா செய்தேன். அவள் கொடுத்த மூவர்ணக் கொடியைப் பெட்டியில் வைத்தேன். இன்னொரு மூவர்ணக்கொடியுடன் புறப்பட்டுச் சிறையில் புகுந்தேன்,

மூன்று வருஷம் சிறையில் அடைபட்டுக் கிடந்தபின் வெளியே வந்தேன். வாழ்க்கையை ஒரு லக்ஷியப்பாதையில் செலுத்த எண்ணி வைத்தியத்தொழில் ஆரம்பித்தேன். உன் குடும்பத்துக்கு உதவி செய்யச் சொல்லிப்போயிருந்தாள் கமலா. உன் தகப்பனாருக்குப் பண உதவி தேவையா என்று அவருக்கு எழுதிக் கேட்டேன். “நான் பிச்சையெடுக்கும் நிலைமையில் இல்லை, பணம் வேண்டாம்,” என்று உன் தந்தையின் காரமான பதில் வந்தது.

பிறகு இரண்டு நீண்ட வருஷங்கள் சென்றன. கமலா சொன்ன வார்த்தைப்படி உங்களுக்கு உதவி என்ன செய்ய முடியும் என்று தெரியாமல் கடைசியில் உன் தகப்பனாரைப் பார்த்துக் கேட்டுவிடுவது என்று தீர்மானித்துக்கொண்டு வந்தேன் உன் கிராமத்துக்கு. உன்னைப் பார்த்ததும் திடுக்கிட்டேன், கமலாதான் மறு பிறப்பெடுத்து வந்துவிட்டாள்போல் காட்சி அளித்தாய் நீ, உனக்கு விவாகமாகவில்லையென்று தெரிந்துகொண்டதும் கமலா இருக்கவேண்டிய இடத்தில் உன்னை இருத்திவிட நிச்சயித்தேன்.

இன்றும் நான் உன்னைப் பார்க்கும்போது உன்னை மட்டும் பார்க்கவில்லை. உன்னில் லயித்துவிட்ட கமலாவையும் பார்க்கிறேன். நாம் கொண்டாடப்போகும் தலைத் தீபாவளியில் அவளும் சேர்ந்திருக்கிறாள், அவள் போகவில்லை. அவளேதான் நீ என்று எண்ணித்தான் நான் என் மனதைச் சாந்தப் படுத்திக்கொள்கிறேன், என் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் இந்த விஷயங்களை உன்னிடம் சொன்னால் நீ என்னைத் தவறாய் நினைத்துக்கொண்டு விடுவாயோ என்று பயந்துதான் இதுவரையில் இவைகளை உன்னிடம் சொல்லாமலிருந்தேன். ஆனால் இன்று என் மனம் கேட்கவில்லை.” என்று கூறிப் பெருமூச்சுவிட்டான் ரங்கராஜன்,

பல வருஷங்களுக்கு முன் கமலாவும் அவள் தாயும் சகுந்தலாவின் வீட்டில்வந்து இரண்டுமாதம் தங்கிவிட்டுப் போனார்கள். சகுந்தலாவின் தாய் கமலாவின் தாய்க்கு உடன்பிறந்த தங்கை, ஏழைகளான சகுந்தலாவின் பெற்றோர்கள் கஷ்டப்படுவதைப்

பார்த்துப் பொறுக்காமல் அவர்களே எங்கோ போய்விட்டார்கள், அப்பொழுது சகுந்தலா எட்டு வயதுச் சிறுமி. அதற்குப் பின் கமலாவையோ அவள் தாயையோ பற்றி யாதொரு தகவலும் தெரியாமலிருந்தது. இன்று தனக்குக் கிடைத்திருக்கும் வாழ்விற்குக் காரணம் கமலாதான் என்று தெரிந்துகொண்ட சகுந்தலாவின் கண்களும் கலங்கின, அவள் கண்களைத் துடைத்துக்கொண்டாள். இத்தனை நாளும் இருந்த பயம் நீங்கி, "கமலாவின் ஸ்தானத்தை என்னால் பூர்த்தி செய்ய முடியுமோ என்னமோ? ஆனால் என்னால் முடிந்த மட்டும் முயற்சிக்கிறேன். வெந்நீர் சூடாகியிருக்கும். எழுந்திருந்து குளிக்க வாருங்கள்" என்றாள் சகுந்தலா.

"ஆகட்டும்" என்று நாற்காலியிலிருந்து ரங்கராஜன் எழுந்தான்.


## காவேரி சந்தா விகிதம்

| சந்தா விபரம் | உள்நாடு | ஸிலோன் பர்மா & மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு |
|---|---|---|
| ஒரு வருஷம் | 6 0 0 | 7 8 0 |
| அரை வருஷம் | 3 0 0 | 3 12 0 |
| தனிப்பிரதி ஒன்றுக்கு | 0 8 0 | 0 10 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

# MEHTA'S SPECIALITIES

*Well-known for their efficacy and Medicinal values*

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

*Stocked by all important Chemists & Druggists of South India*

**K. S. MEHTA & CO.**
250, China Bazaar, MADRAS.

# காதுக்கெட்டாத இசை

**நா. கி. நாகராசன்**

புவிக்குப் போர்வை போன்றுள்ள காற்றுப் படலத்தின் ஒரு நன்மையை நம்மிற் பலர் அறிந்திலர். காற்றில்லா உலகில் குயிலின் இசையையும், குழலின் இனிமையையும் நாம் உணர இயலாது. ஒரு பொருள் சீராக அசைந்தால் இவ்வசைவினால் அது, அருகேயுள்ள காற்றுப் படலத்தையும் அசையச் செய்கிறது. காற்றுப் படலம் அசைந்து, இவ்வசைவு படிப்படியாக முன்னேறுகிறது. இவ்வாறு முன்னேறும் காற்றின் அசைவு கடைசியாய் நம் காதையடைந்து அதிலுள்ள மெல்லிய சவ்வு ஒன்றை அசைவிக்கிறது. அப்போது நாம் ஒலியை உணருகிறோம். இவ்வாறு காற்றில் முன்னேறும் அதிர்ச்சியையே நாம் ஒலியலைகள் என்கிறோம். ஒவ்வொரு ஒலிக்கும் ஒரு சுருதி (Pitch) உண்டு. ஒரு ஒலியின் சுருதி, ஒலிக்குக் காரணமான பொருள் விநாடிக்கு எவ்வளவு முறை அசைகிறது என்பதைப் பொறுத்தது. இதைப் பொருளின் அதிர்ச்சியளவு (Frequency) என்பர். பலவேறு சுருதிகளையும் உணருமாறு நம் காது அமைந்துள்ளது. ஆனால் சுருதி மிக உயர்ந்த ஒலிகளைக் காது உணர இயலாது. பொதுவாய் விநாடிக்கு நாற்பதுக்குக் குறைவாகவும், பதினெண்ணாயிரத்துக்கு அதிகமாகவும் அசையும் பொருளிலிருந்து வரும் ஒலியை நாம் கேட்க முடிவதில்லை. வேட்டை நாய் போன்ற மிருகங்களும், வெட்டுக்கிளி போன்ற சில பூச்சிகளும் நம்மால் அறியக் கூடாத உயர்ந்த சுருதி ஒலியையும் உணர முடிகிறது. இது நிற்க, நம் உணர்ச்சிக் கெட்டிய ஒலிகளைவிட உயர்ந்த சுருதியுள்ள ஒலிகளை விஞ்ஞானம் பல்வகைகளிற் பயன்படுத்துகிறது. இத்தகைய ஒலி, கேளாவொலி (Supersonics) எனப்படும்.

கேளாவொலியை ஆக்கத் தனிப்பட்ட இரு முறைகள் கையாளப்படுகின்றன. சாதாரண ஒலியைத் தோற்றுவிக்கும் முறைகள் இதற்குப் பயன்படா. ஒரு பொருளை விநாடிக்குப் பல்லாயிரமுறை துடிக்குமாறு செய்ய வேறு முறைகளே தேவை. ஒரு காந்தத்தைச் சுற்றி அதன் விளைவுகள் தெரியும் இடம் அதன் புலம் (Field) எனப்படும். மின்சாரம் பாயும் கம்பிச் சுருள் ஒரு காந்தத்தைப்போல இயங்கும். சுருளில் பாயும் மின்சாரத்தின் அளவு மாறினால் காந்தப் புலத்தின் வலிமையும் மாறும். இத்தகைய காந்தப் புலத்தில் சில உலோகப் பொருள்களை வைத்து, புலத்தை மாற்றினால், பொருளின் அகல நீளங்களில் புல மாறுதல்களுக்கேற்ற மாறுதல்கள் உண்டாகின்றன. இதனால் புலத்தைச் சீராக மாற்றிப் பொருளும் விரைவாய்த் துடிக்குமாறு செய்யலாம். இதனால் அருகிலுள்ள காற்றில் சுருதி மிக்க அலைகள் தோன்றுகின்றன. இம்முறையில் கேளாவொலி யலைகளைத் தோற்றுவித்தல் எளிதும், சிக்கனமானதுமாகும். ஆனால் இவ்வகையில் அதிர்ச்சி யளவு மிக அதிகமான அலைகளைத் தோற்றுவிக்க முடியாது. காந்தப் புலம் விநாடிக்கு 30,000 தடவைக்குமேல் மாறினால் இம்மாற்றத்திற்கேற்பப் பொருள் சீராகத் துடிப்பதில்லை. ஆகையால் சீரான அலைகளை இம் முறையில் பெற அலைகளின் அதிர்ச்சியளவு இதற்குக் குறைவாகவே இருக்கவேண்டும். ஆகையால் இம்முறை அவ்வளவாக வழங்குவதில்லை.

தற்காலத்தில் கேளாவொலியைத் தோற்றுவிக்கப் பொதுவாய்ப் பயன்படும் முறையில் படிகக்கல் (Quartz) பயன்படுகிறது. இரு உலோகத் தட்டுகளைச் சிறிது தூரத்தில் வைத்து ஒரு மின் கடத்தின் இரு முனைகளோடு பிணைத்து விட்டால், தட்டுகளின்மேல் மின்சாரம் ஏறுகிறது. மின்னேறிய இத் தட்டுகளினிடையே இப்போது ஒரு மின் புலம் இருக்கும். தட்டுகளின் மின்சா

ரத்தை மாற்றினல் மின்புலத்தின் அளவும் மாறும். இவ்வாறுமாறும் மின்புலத்தில் ஒரு படிகக்கல்லை வைத்தால், அது மின்புல மாறுதல்களுக்கேற்ப நீண்டும், குறுகியும் துடிக்கும். இத் துடிப்புகள் காற்றிலும் உண்டாய் அதிர்ச்சியளவு அதிகமான அலைகள் தோன்றிப் பரவும். இம்முறையில் படிகத்தை விநாடிக்கு ஆறு கோடி முறை துடிக்குமாறு செய்து, இதே அதிர்ச்சியளவுள்ள மிகக்குறுகிய ஒலியலைகளைப் பெறலாம்.

சாதாரண ஒலியலைகளில் நாம் காண முடியாத விளைவுகள் பல கேளாவொலியலைகளில் நிகழ்கின்றன. ஒலியலைகள் ஓரிடத்தில் தோன்றினல் நாற்புறமும் பரவுகின்றன. ஆனல் குறுகிய கேளாவொலியலைகளோ குறிப்பிட்ட ஒரு திசையில் மட்டும் செல்லும் தன்மை வாய்ந்தன. இவை ஒரு பொருளைத் தாக்கி அதனுட் சென்ருல் அதில் பெரும் அதிர்ச்சியை யுண்டாக்குகின்றன. இதனல் பொருள் விரைவில் சூடேறும்; சில சமயங்களில் இரசாயனமாறுதல்கள் நிகழ்வதும் உண்டு. இதைத்தவிர, கேளாவொலி யலைகள் பொருள்களை நன்ருகக் கிளறுகின்றன.

இவ்விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு இவை பல்வகைகளிற் பயன்படுத்தப் படுகின்றன. 1917-ஆம் ஆண்டில் முதல் உலகப் போரின் போது இலாங்முயிர் (Langmuir) என்னும் விஞ்ஞானி நீர் மூழ்கிகளைக்கண்டறியக் கேளா வொலியலைகளைப் பயன்படுத்தினர். கடலுக்குள் இவ்வலைகளைச் செலுத்தினல் அவை நீருக்குள் நேரே சென்று, அங்கு மூழ்கியுள்ள பொருளினல் திருப்பியனுப்பப்பட்டு மீளுகின்றன. அவை இவ்வாறு மீள ஆகும் நேரத்திலிருந்து பொருளின் தொலைவைக் கண்டறியலாம். இம்முறையில் நீர்மூழ்கிகளைக்கண்டறிவதில் ஒரு பெரு நன்மையுண்டு. இம்முறையினல் தம் இருப்பிடத்தை யறிய எதிரி முயற்சிப்பதை நீர் மூழ்கியிலுள்ளோர் அறிய இயலாது.

தற்காலத்தில் தொழிற் சாலைகளில் கேளாவொலி மிகப் பயனுள்ள கையாளாக விளங்குகிறது. ஒரு பொருளின் பலபகுதிகளின்மேல் இவ்வலைகளை விழச்செய்து, அவை எவ்வாறு மீளுகின்றன என்பதிலிருந்து பொருளின் தன்மையையறியலாம். எந்திர உறுப்புகள் முதலியவற்றின் உள்ளே உள்ள பழுதுகளை இம்முறையால் எளிதாயும், விரைவாயும் கண்டு பிடிக்கலாம். ஏனெனில் சரியான பகுதிகளில் அலைகள் சீராகத் திருப்பியனுப்பப் பெறும். குறைகளுள்ள இடங்களிலிருந்தோ அவை சரிவரத் திரும்பா. இம்முறையில் சோதிக்கும் பொருளை எண்ணெய்க்குள் இட்டு, அதில் அலைகளைப் பரப்பி மீண்டுவரும் அலைகள் ஆராயப் படுகின்றன. மோட்டார் டயர்களை நீருக்குள் வைத்துக் கேளா வொலியலைகளால் ஆராய்கின்றனர். ஒரு டயரைச் சோதித்து முடிக்கச் சில விநாடிகளே செல்லும். இதைத்தவிர ஒரு மாதிரிக் கேற்பச் செய்யப்படும் பொருள்கள் எல்லாம் தம் அளவில் மாதிரியை ஒத்திருக்கின்றனவா என்பதைச்சரிபார்க்கவும் கேளா வொலி யலைகள் பயன் படுகின்றன.

மேற்கூறிய முறை கட்டிடத் தொழிலிலும் பயன்படும். தற்காலத்தில் பெரிய கட்டிடங்களில் பயன் படும் இரும்புக் காங்கிரீட்டுச் சுவர்களில் உள்ள பழுதுகளைக் கண்டுபிடிக்கக் கேளாவொலியலைகள் பயன்படுகின்றன. ஆகையால் வானளாவிய மாளிகைகளைக் கட்டும் தொழிலில் நம் புலன்களுக்குப் புறம்பான இச்சிறு அலைகள் பயன்படுவது விளங்கும்.

நன்ருகக் காய்ச்சிய பாலில் சின்னஞ்சிறு கொழுப்புத் துளிகள் மிதப்பதைப் பலர் கண்டிருக்கலாம். இவ்வாறு ஒரு நீர்மத்தில் வேருெரு பொருள் சிறு துளிகளாகக் கலந்திருப்பதை அப்பொருளின் குழம்பு (Emulsion) என்பர். ஒரு நீர்மத்தை மிக விரைவில் கிளறும் தன்மைவாய்ந்த கேளாவொலி யலைகள், அந்நீர்மத்திலுள்ள பொருளை, மிகச்சிறு பொருளை மிகச்சிறு துளிகளாக்கிக் குழம்பாகச் செய்யப் பயன்படுகின்றன. இத்தகைய குழம்புகள் பல்வகைகளிற் பயன்படும். படப்பிடிப்புத் தட்டின் (Photographic Plate) மேல் பூசப்படும் இரசாயனப் பொருள் சீரான குழம்பாயிருந்தாலொழிய தட்டில் படம் தெளிவாக விழாது. ஆகையால் இப்பொருள் கேளா வொலி

யலேகளால் குழம்பாக்கப் படுகிறது. நம் உடலுக்கு நலந்தரும் பல மருந்துகளில் ஏதேனுமொரு உலோகப் பொருள் ஒரு நீர்மத்தில் குழம்பாய் மறைந்திருக்கிறது, உலோகப் பொருள்களை நீர்மத்தில் குழம் பாக்க மருந்துகள் செய்யும் தொழிலில் கேளாவொலி யலேகளை உபயோகிக்கின்ற னர். இத்தகைய குழம்புகள் இரசாய னத் தொழிலிலும் தேவையாயிருக்கும். அப்போதும் குழம்புகள் இவ்வலேகளைக் கொண்டு தயாரிக்கப்படலாம். துணிக ளின் மேல் சாயம் சீராகப் பரவிக் 'கெட் டியாய்' இருக்க அது மிக நேர்த்தியான தூளாக இருக்க வேண்டும். நெசவுத் தொழிலில் இவ்வலேகளினால் சாயத்தை நுண்ணிய தூளாக்கித் துணியில் ஏறு மாறு செய்கின்றனர்.

உலோகக்காலம் எனப்படும் இந்நாளில் கலப்பு உலோகங்களின் (Alloys) பயன் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. நம க்குத் தேவையான பண்புகள் கொண்ட ஒரு கலப்பைச் செய்ய, குறிப்பிட்ட இரு உலோகங்களைக் கலக்க வெண்டியிருக்க லாம். ஆனால் அவற்றைச் சீராகக் கலக் குமாறு செய்வது சில சமயங்களில் முடி யாமற் போய்விடும். அப்போது இத்தொ ழிலில் இவ்வலேகள் உதவும். இரு உலோ கங்களையும் இளக்கி ஒன்று சேர்த்து அக்கலப்பில் கேளாவொலி யலேகளைப் பரப்புவதால் உலோகங்கள் நன்ருகக் கலந்து சீரான கலப்பை யளிக்கின்றன. இவ்வகையில் கேளாவொலி யலேகள் உலோகத் தொழிலிலும் உதவுகின்றன.

அமெரிக்காவில் துணிகளை வெளுக்கும் ஒரு எந்திரம் கேளாவொலி யலேகளால் இயங்குகிறது. இதில் வெளுக்கும் துணி களை நீரிலிட்டு அதில் இவ்வலேகளைப் பர ப்புகின்றனர். இதனால் தண்ணீர் நன்ரு கக் கலக்கப்பட்டுத் துணிகள் விரைவில் மாசு நீங்குகின்றன. இம்முறையில் துணி கள் பதினைந்து விநாடிகளுக்குள் வெளுக் கப்படும். இக்கருவி கண்டுபிடிக்கப் பட்ட வரலாறு விந்தையானது. அய்ட் கின்ஸ் (Aitkins) என்னும் பொறி நூல றிஞரின் வேலையாள் ஒருவன் விரைவா ய்த் துடிக்கும் மோட்டார் ஊதுகுழலேக் (Horn) கைதவறி ஒரு தண்ணீர்ப்பாத்தி ரத்தில் போட்டுவிட்டான். அது நீருக் குள் இயங்கி அதை நன்ருகக் கலக்கியதை அய்ட்கின்ஸ் கண்டார். இதையே அடிப் படையாகக் கொண்டு துணிகள் வெளுக் கும் எந்திரத்தை அமைத்தார்.

மேனாடுகளில் மக்களது வாழ்க்கைக்குப் பெரும் இன்னல் விளேக்கும் இயற்கை நிகழ்ச்சி மூடுபனியாகும். ஆகையால் பனிப்படலத்தை விரைவில் விலக்கும் முறைகளை அந்நாட்டு விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். மிகச்சிறு நீர் த்துளிகள் கொண்ட பனித்திரையில் கேளாவொலி யலேகளைப் பரப்பினால், பனித்துளிகள் கலக்கப்பட்டுப் பெருந்து ளிகளாக மாறி நிலத்தில் படிந்து விடுகின் றன. இம்முறை வழக்கத்திற்கு வந்தால் பனியின் தொல்லே நீங்கிக் கேளாவொலி யலேகள் பல்லுயிரைக் காக்கும் துணையா கத் திகழும்.

மருத்துவ நூலிலும் கேளாவொலி பயன்படத் தொடங்கியுள்ளது. நோய் களை விளேவிக்கும் சிற்றுயிர்களான நுண் ணங்கள் (Bacteria) கொண்ட ஒரு நீர் மத்தில் இவ்வலேகளைப் பரப்பினால் அதில் ஏற்படும் அதிர்ச்சியினால் நுண் ணங்கள் வெடித்து மடியும். ஆகையால் ஒரு பொருளிலுள்ள நுண்ணங்களை நீக்கி அதைத் தூய்மைப் படுத்த இவ்வலேகள் பயன்படும். இம்முறை பாலேச் சுத்தப் படுத்தக் கையாளப்படுகிறது. நுண்ணங் களால் ஏற்படும் புண்ணைக் குணப்படுத் தவும் இம்முறை பயன்படும்.

ஆய்வுகளத்தின் புதுமையாகவும், பின் னர்ப் போர்க்கருவியாகவும் இருந்த கேளாவொலி தற்காலத்தில் பலதுறை யிலும் பெரிதும் பயன்படும் சாதனமாய் விட்டது. இதனாலேயே பெங்களூர் விஞ்ஞான வாராய்ச்சிக் கழகத்தில் அறி வியலறிஞர் இராமன் அவர்கள் இத்து றையில் வெகுநாட்களாக ஆராய்ச்சி நட த்தி வந்துள்ளார். ஆனால் அவராராய்ச் சியின் முடிபுகளைப் பயன்படுத்த இதுவரை நம்நாடு முன்வரவில்லே. இனி யேனும் மிக எளிதில் தோன்றும் இவ் விளேவு நாட்டில் அதிகமாக வழக்கத் திற்கு வர வேண்டும்.

# பட்டாணியன்

[ கான் அப்துல் கனி கான் ]

அழகான முண்டாசு. ஆடம்பரமான பெரிய கால் சட்டை. இவைதான் ஒரு பட்டாணியனைச் சிறப்பாக அலங்கரிக்கின்றன.

பெரும்பாலோர் அவனுடைய மூக்கைப் பார்த்தவுடனேயே அவன் ஒரு யூதன்தான் என்று முடிவு கட்டி விடுவார்கள். காரணம்—அவனை வேறு எந்த இனத்தோடும் அவர்களால் இணைக்க முடியாததுதான். அவனுடைய இஸ்லாமிய மத நம்பிக்கையும், அதன் விளைவாக அவன் வாழ்க்கை, பழக்க வழக்கங்கள், முதலியவைகளின் தன்மையும் இந்தக்கூற்றுக்கு இடந்தருகிறது. எனினும் அவனை ஆட்கொண்டிருக்கும் அடிப்படையுணர்ச்சிகளை ஆராய்ந்தால் அவனை யூதன் என்பதைவிட ஸ்பார்ட்டன் (பண்டைக் கிரேக்கர்களின் ஒரு பிரிவினன்) என்று சொல்வதே பொருந்தும்.

அவனது பூர்வோத்தரத்தை ஆராய்வதில் நான் விசேஷ சிரத்தை எடுத்துக் கொண்டேன். எனக்குக் கிடைத்தவற்றுல் மிகவும் பழைய சரித்திர ஆசிரியர் ஹெரோடோட்டஸ்தான். அப்பாவி மனுஷன்! காதில் விழுந்ததையெல்லாம் நம்பிவிடுவார். நம்பியதையெல்லாம் எழுதிவிடுவார். பட்டாணியர் வாழ்ந்த இடம் பெக்ட்டியா என்று வழங்கப்பட்டதென்றும், அவர்கள் கருமையாக, குள்ளமாக இருப்பார்களென்றும், பொன்னும் வாசனைத் திரவியங்களும் வியாபாரம் செய்வார்களென்றும்,—இன்னும் அவர்கள் பொன் சேகரிக்கும் விதத்தைப்பற்றிய விசித்திரமான கதைகளையும் நிறைய எழுதியுள்ளார். அதற்கு மாறாக, பட்டாணியர் வாட்ட சாட்டமாக அழகான வடிவமுள்ளவர்கள். வியாபாரம் செய்து வாழ்நாளை ஓட்டுவதைவிடக் கொலை செய்வதையே கௌரவமாகக் கருதுவார்கள்.

உண்மையில் ஹெரோடோட்டஸின் நண்பர்கள் (கிரேக்கர்கள்) சிலர் பெக்டியாபிரதேசத்து நதிக்கரையிலும் சமவெளிப் பிரதேசத்திலும் குடியேறியிருக்கலாம். அங்கே இருந்த அழகிகளை மணந்துகொண்டிருக்கலாம் (நீங்கள் என்னதான் இடர் செய்தாலும்—செய்வதைப் பராக்கிரமத்துடன் செய்து விட்டால் பட்டாணியன் நிச்சயம் உங்களை மன்னித்து விடுவான்). பிறகு அங்கேயே இருந்துகொண்டு தமது போர்களைப்பற்றியும், வீரதீர சாகசச் செயல்களைப் பற்றியும், தமது குழந்தைகளுக்குக் கதைகதையாகச் சொல்லிக்கொண்டு காலத்தை யோட்டியிருக்கலாம்.

அவனுடைய கிராமங்களுக்குக் கிரேக்கப் பெயர்கள் வழங்குகின்றன. அவனுடைய பல்வேறு வகுப்புகளுக்கிடையே கிரேக்கப் பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன. கிரேக்கர்களைப்போல் அவனும் ஒரு கவியாகவும் வீரனாகவும் விளங்குகிறான். அவனுடைய சண்டைகளும்—கிரேக்கர்களைப் பொலவே—பெண்களின் நிமித்தம் நடந்தவையாகவே இருக்கின்றன.

பட்டாணியர்களைப்பற்றி முறையாக எழுதப்பட்ட சரித்திர ஏடு எதுவுமே கிடையாது. ஆனால், பாழடைந்து, இடிந்து, புதையுண்டு கிடக்கும் பழங்காலச் சின்னங்கள் ஆயிரக்கணக்கில் எங்கும் விரவிக்கிடக்கின்றன. அவைகளிலுள்ள ஒவ்வொரு கல்லும், அது சொல்லும் கதைகளை மட்டும் கேட்பதற்கு யாராவது தயாராக இருந்தால் எத்தனையோ கதைகளைச் சொல்லித் தன் தாபத்தைத் தணித்துக்கொள்ளும். தற்போது கிடைத்தவற்றுள் மிகவும் பழைய சின்னங்களைக் கவனித்தால் அவை கிரேக்கருக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகவே காணப்படுகின்றன. அவைகளின் உருவ அமைப்பிலும், கருத்திலும் விசேஷமாக ஐக்கிய மாகாணம், ஒரிஸ்ஸா, முதலிய இடங்களிலுள்ளவைகளையே பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. உதாரணமாக, பொம்மைகள், கடவுள்களின் சிலைகள் முதலியவைகளின் தோற்றம்

தற்காலப் பட்டாணியர்களின் தோற்றத்திலிருந்து மிகமிக வேறுபட்டு இருக்றது.

புத்தர் காலத்திற்கும், கிரேக்கோ—புத்தர் காலத்திற்கும் வந்தோமானல் அப்போதுள்ள பொம்மைகள், புத்த விக்ரகங்கள், அரசர்கள், அடியார்கள் முதலானேருடைய சிலா வடிவங்கள் தற்காலப் பட்டாணியரைப்போலவே இருக்கின்றன. பட்டாணியனுடைய மூர்க்கத்தனம், ஒருசமயம், புத்ததர்மத்தின் அஹிம்சைக் கொள்கையில் வெகு காலமாகக் கட்டுண்டு கிடந்ததன் பலனுக அதையெதிர்த்துக்கிளம்பியதன் விளைவுதானே என்னவோ.

இனமுறையில் கவனித்தால் திட்டமாகக் கிரேக்க வமிசம்தான். ஆனல் அது எந்த இனத்துடனே கலந்து விட்டது. அது எது என்பதுதான் விளங்கவில்லை. ஆனல், அதைப்பற்றி நான் அக்கரைப்படவில்லை. 5000 வருடத்திற்கு முன்பு அவன் எப்படி இருந்தான் என்பது அவ்வளவு முக்கியமல்ல.

அவன் இஸ்லாமிய மதத்தைத் தழுவு முன்பு, புத்த மதத்தைச் சேர்ந்திருந்தானென்பதும், அதற்கு முன்பு ஹிந்துவாகத்தானிருந்திருக்க வேண்டும் என்பதும் வெளிப்படை.

அவன் ஆயிரக் கணக்கில் புத்த விக்ரகங்களைச் செய்து குவித்திருப்பினும் எந்த விதமான புத்த மதத்தை அனுஷ்டித்தான் என்பதும் தெரியவில்லை. ஏனெனில் அவன் பெரிய போர் வீரனுக இல்லாவிட்டாலும், குறிவைத்துச் சுடுவதில் சூரன். சுதந்தர உணர்ச்சி அதிகம் ஊறப்பெற்றவன். ஆகவே எந்த ஒரு குறிப்பிட்ட மத அனுஷ்டானத்திற்கும் அதன் கட்டுப்பாட்டிற்கும் பணியமாட்டான். அதனுலேயே அவன் (புத்த விக்ரகங்கள் செய்யும் திறனுள்ள) சிற்பியாகச் சிறப்புற்று இருந்தாலும் புத்த மத அனுஷ்டானத்தைத் தீவிரமாகக் கைக்கொள்ளவில்லை.

அவன் எந்த ஜாதியைச் சேர்ந்தவனுகவும் இருக்கலாம்; யூதனுக மட்டும் இருக்கவே முடியாது. எப்போதும், வீரதீர பராக்கிரமச் செயல்களைப்பற்றியும், மரணத்தைப்பற்றியும், தன்குழந்தைகளிடம் உணர்ச்சி ததும்பச் சொல்லிக் கொண்டிருக்கும் யூதனை நீங்கள் எங்கேயாவது காணமுடியுமா? ஒரு சமயம் ஆசியாவின் இருதயத்திலிருந்து இந்தியாவை நோக்கி வந்த பல்வேறு இனத்தவரின் —(பாரசீகர், கிரேக்கர், மங்கோலியர், துருக்கர்)—கலப்பாகவும் இருக்கலாம். அவனுடைய நல்ல குணங்களைப்போலவே கெட்ட குணங்களுக்கும், அவனுடைய தோற்றத்திற்கும், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், மதானுஷ்டானம், காதல் பாட்டுகள், முதலியவைகளை உருவாக்குவதிலும், ஒவ்வொரு ஜாதியும் பொறுப்பாக இருந்திருக்கிறது.

அவன் உடைகளைப்போலவே உள்ளத்திலும் அழகுணர்ச்சியும் ஆடம்பர வேட்கையும் கலந்திருக்கிறது. அவன் போர் செய்வதை விரும்புகிருன். ஆனல் சிப்பாயாக இருப்பதை வெறுக்கிருன். சங்கீதம் அவனுக்கு ரொம்ப பிடிக்கும். ஆனல் சங்கீத வித்வானைப் பிடிக்கவே பிடிக்காது. அன்பாகவும், தயாதாட்சிண்யத்துடனும் நடந்து கொள்வான்; அதை வெளிப்படையாகக் காட்ட விரும்புவதில்லை. அவனுடைய கொள்கைகளும் கோட்பாடுகளும், வெகு விசித்திரமாக இருக்கும். வெகு துணிச்சலுள்ளவன். அஞ்சா நெஞ்சன். என்றும் ஏழைதான். எனினும் மகா கர்வி. இவ்வளவு குணங்களும் பொருந்தியவன் தான் ஒரு யூதன் என்று சொல்லுவீர்களானல், அவனும் ஒரு யூதன் தான்—அவனுடைய மூக்கு உள்பட!

இவை யெல்லாவற்றையும் ஒரேயடியாக ஒதுக்கித் தள்ளிவிட்டு, அவன் இன்று எப்படி இருக்கிருன் என்று கவனிப்பதே நல்லது. அவன் யூதனுமல்ல கிரேக்கனுமல்ல. அவன் உங்களிடம் அதி வாஞ்சையுள்ள நண்பனுக இருப்பான்; அல்லது வைரமுள்ள ஜன்ம விரோதியாகவே மாறிவிடுவான். எல்லாம் அவன் மன நிலையைப் பொறுத்தது. இந்த இரண்டிற்கும் இடையேயுள்ள மத்திய நிலைமை அவனுக்குத் தெரியவே தெரியாது. இதுதான் அவனுடைய சிறப்பு அம்சம். இதுதான் அவனுடைய முக்கிய குறைபாடுங்கூட.

இருபது வருஷங்களுக்கு முன்பு—இந்தியாவில் பட்டாணியன் என்ற உடனேயே, சாகசக் கதைகளில் வரும் வீரனின் உருவந்தான் மனக்கண் முன் வரும். அவன் குத்துவான்; வெட்டுவான்; கொலை செய்வான்; சுட்டுத் தள்ளுவான்; ஆட்களையே கடத்திச் சென்றுவிடுவான்; வாசனைச் சாமான்கள் விற்பான்; சமயத்தில் குழந்தைகளையும் தூக்கிச்சென்றுவிடுவான்—என்றெல்லாம் நம்பப்பட்டு வந்தது.

பட்டாணியனுடைய வாழ்க்கையும் விவகாரங்களும் உங்களைப்போலவே பசி, பணம், பதவி, அதிகாரம், அபிலாஷை முதலியவைகளைச் சுற்றியே தான் சுழலுகின்றன. ஆனால் அவனுடைய நரம்புகளில் அதிக ரத்தம் ஓடுகின்றது. அவன் மண்டையில் சாகச உணர்ச்சி சற்று அதிகமாகவே குமிழ் விடுகிறது. எனவே, அதே விஷயங்களையும் விவகாரங்களையும் அவன் இன்னும் கொஞ்சம் அழகாக, ஜீவத்துடிப்புள்ளதாகச் செய்து முடித்துவிடுகிறான். ஐந்நூறு வருடத்திற்கு முன்பு மதம் என்ன செய்ததோ அதைத்தான் இன்றைய அரசியல் செய்கிறது. மக்கள் தமது அறியாமையாலும், முட்டாள்தனத்தாலும் ஒரு சில நய வஞ்சக தந்திர சாலிகளிடத்தும், சிலசமயம் அறிவிலிகளிடத்தும், தம்மை ஒப்படைத்து, தம்மீது அதிகாரம் செலுத்தி ஆள அனுமதி கொடுத்து விட்டு, அதன் பலனை அனுபவிக்கும்படி மக்களே வகுத்துக்கொண்ட முறைதானே அரசியல் என்பது.

ஒவ்வொருமனிதனும் ஆளவேண்டும்; அல்லது ஆளப்படவேண்டும். இதுவே நியதி. இதைத்தவிர வேறு வழியேயில்லை. நீங்கள் கவிஞனாகவோ, பைத்தியக்காரனாகவோ இருந்தாலொழிய. பட்டாணியனுக்கு ஒளிவு மறைவு பிடிக்காது. அத்துடன் மண்டைக் கனமும் சற்று அதிகமாகவே உண்டு. ஆகவே ஒவ்வொருவனும் தான் ஒரு மஹா அலெக்ஸாண்டர் என்று நினைத்துக்கொள்ளுகிறான். அது மட்டுமல்ல, அதை உலகம் ஒப்பவேண்டும் என்றும் விரும்புகிறான். அதன் விளைவாக அண்ணன் தம்பி, மாமன் மைத்துனன்—ஏன், தகப்பன் பிள்ளைக்கிடையேகூட சதா சண்டை சச்சரவு, போராட்டம். ஆதிகாலம் முதல் இதுவே அவனுடைய அழிவுக்குக் காரணமாக இருந்திருக்கிறது. பட்டாணியர்கள் ஒரு பெரிய தேசீய இனமாக முன்னேற்றமடையவில்லையென்றால் அதற்குக்காரணம் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு ஜின்னா இருக்கிறான். அவன் தன் வீட்டைக் கொளுத்தினாலும் கொளுத்துவானே தவிர, தன் சகோதரன் அதை ஆண்டு அனுபவிக்கப் பொறுக்கமாட்டான். கொந்தளிக்கும் உணர்ச்சி, பிறரை அடக்கி ஆளவேண்டும் என்ற தாபம், சகல விஷயங்களைப்பற்றியும் அறிவு சூன்யம்,—இவைகள் தான் அவனுடைய நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்றன. டெல்லி நகரத்தின் மேயராக வரமுடியாவிட்டால் அவனுக்கு டெல்லி நகரத்தின்மீதே அடங்காத அருவருப்பு வந்துவிடும். தன்னுடைய மண் குடிசையினிடம் அளவுகடந்த பிரியம் பிறந்துவிடும். அவன் அதற்கே மேயராகிவிடுவான்.

அவன் தன்னுடைய சுதந்திரத்தை மிகவும் போற்றுகிறான். ஆனால் பிறருக்கும் சுதந்தரம் வழங்குவதை விரும்பமாட்டான். அவன் ஒரு பெரிய ஜனநாயகவாதி. தானும் எல்லோரையும் போலவே சிறப்பியல்புகள் வாய்ந்தவன் தான், தன் அப்பனையுங்கூட அதில் மிஞ்சிவிட்டவன்—என்றெல்லாம் எண்ணுவான். ஆனால் இந்தத் தத்துவங்களையெல்லாம் தன் மனைவியிடங்கூட நிலை நாட்ட ஆரம்பித்துவிடுவான். அதன் பலனை அவள் தன் வாலிபத்திலும், அவன் தன் அந்தியகாலத்திலும் அனுபவிக்கிறார்கள்.

அவனுக்கு நாசூக்காக நடந்துகொள்ளத்தெரியாது. மனதில் உள்ளதை அப்படியே அப்பட்டமாகத் தெரிவித்துவிடுவான். ஒரு சிக்கலான பிரச்சனையிலிருந்து வெளியேற வேண்டுமானால், சுட்டுத்தள்ளிவிட்டு வெளியே வருவானேயொழிய அதைப்பற்றிப் பிரமாதமாக ஆலோசனைசெய்து, மூளையைக் குழப்பிக்கொண்டு, தலைவலியையும் வரவழைத்துக் கொள்ள மாட்டான். அவனுடைய அபிலாஷைகள் அனந்தம். ஆனால் பொறுமையே கிடையாது. அதனாலேயே அவன் சகஜமாகச் சிறுவயதிலேயே இறந்துவிடுகிறான். அவனுக்கு

விரிந்த இதயமுண்டு. வாஞ்சையுள்ள நண்பனுகவும் ஆதரவுடன் விருந்தளிக்கும் அன்பனுகவும் இருப்பான். அவனுக்கு மண்டையில் கர்வம் அதிகம்; வயிரே காலி. அதனுலேயே அவன் கொள்ளைக்காரனுகிவிடுகிருன். வழிப்பறி செய்வதா—பிச்சை யெடுப்பதா என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அவன் அவன் வழிப்பறிதான் செய்வான். ஏனெனில் அவன் மனிதன், புழுவல்ல.

அவன் அழகிய மனைவியின் அங்கங்களை மறைக்கமுடியாத கிழிந்த ஆடைகளையும், பசியினுல் வாடி வதங்கும் பசலைக்குழந்தையின் பரிதாபகரமான கண்களையும் பார்க்கிருன். உடனே புறப்பட்டு விடுவான், கையில் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு. எங்கே? எங்கேயானுலும் சரி—சாவின் வாயிலையே எட்டிப் பார்க்க நேர்ந்தாலும் சரி, எட்டலாம் எதற்காக-அவளுக்கு ஒரு முழம் துணிக்காக, அவன் அருமைக்குழந்தையின் அரும்பசியைப் போக்க, ஒருவாய் உணவிற்காக.

தனக்கு அருமையானவர்களைப் பராமரித்துக்காப்பாற்றத் தவறிவிட்ட சமூக அமைப்பைத் தன் காலின்கீழ் மிதித்து நசுக்கத் தயங்கமாட்டான். தன்னைப் பட்டினி போட்டுவிட்டு, இன்னெருவன் வயிற்றைப் புடைக்க வைக்கும் அரசியல் அமைப்பைச்சுட்டு, அதன் அங்கங்களில் ஓட்டை போடவே அவன் விரும்புவான். அவனிடமுள்ள இந்தக் குணத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன். அவன் திருடத் துணிவானேயொழிய, ஒரு பொழுதும் பல்லைக்காட்டி, பிச்சைகேட்கவே மாட்டான். நானும் அப்படித்தான்.

கடவுளின் கோபத்தையும் மனிதனின் தாபத்தையும் எதிர்த்து நின்று சமாளிப்பானேயொழிய, ஏழ்மையின் கோரத்தையும், அதனுல் ஏற்படும் அவமானங்களையும் சகித்துக்கொண்டிருக்கச் சம்மதிக்கமாட்டான். அவன் சிறைபிடித்த வியாபாரியின் நடுநடுங்கும் கண்களைக் காண அஞ்சமாட்டான்; ஆனுல் பட்டினியாலும் பசியாலும் வாடிக்கிடக்கும் மனைவிமக்களின் துயர நிலையையும் அவர்கள் கண்களில் பிரதிபலிக்கும் சோகத்தையும் காணச் சகிக்கமாட்டான்.

சாலையோரங்களில் தமது உடலையும் உள்ளத்தையும் ஒடுக்கி, தம் ஆத்மாவையே விலைகொடுத்து வாங்கும் தாராளக்காரர்களிடம், கையை நீட்டிப் பிச்சை கேட்பவர்களைப் பார்க்கிறதைவிட, கொள்ளையடித்த குற்றத்திற்காகத் தூக்கிலிடப்படுவதைப் பதருமல் பார்த்துக்கொண்டிருப்பான். அவன் பிச்சை கொடுப்பதை வெறுக்கிருன்; அதனுலேயே அவன் திருடுகிருன். அதனுலேதான் நான் அவனைப் பாராட்டுகிறேன், அவன் மண்டைக் கர்வம் பிடித்திருந்தாலுங்கூட. அவன் தன் மண்டையை உடைத்துக் கொள்வானே யொழிய நாகரிக மனிதர்களைப்போலத் தன் தலையையே பிறரிடம் மிகவும் பணிவுடன் விற்கத் துணியமாட்டான்.

[இந்தியா என்ற பத்திரிகையிலிருந்து க. கணபதியால் தமிழாக்கப்பட்ட கான் அப்துல்கான் எழுதிய "பதான்" என்ற புத்தகத்தில் ஒரு பகுதி.]


# "காவேரி" ஏஜண்ட்

**வி. துரைசாமி**
ஜோஹூர் டிரேடிங் கம்பெனி
நியூஸ் ஏஜண்ட்
4, ஜலால் பஹாங்
ஜொஹூர்பாஹ்ரு (மலேயா)

**பி. ஏ. கந்தசாமி**
ஹிந்து ஏஜண்ட்
ஆத்தூர், (சேலம் ஜில்லா)

**பி. ஏ. கிருஷ்ணன்**
வலஞ்சம்பாலம்
எர்ணுகுளம்

**டி. பி. ஜெயசீலன்**
பஜார் தெரு
தர்மபுரி

# BMB மிஷீன் கலப்பைகளின் வெளிப்படையான உண்மைகள்

1. ஒரு நாளைக்கு சுமார் 2 ஏக்கரா பூமியை ஏர் உழும் 10 ஏக்கராவைப் பரம்படிக்கும்.
2. களைவெட்டுதல், பயிரிடுதல் விதை விதைத்தல், உரமிடுதல் முதலிய வேலைகளைச் செய்யவும்.
3. சுமை இழுக்கவும், பெல்டினால் ஓட்டப்படும் யந்திரங்களை உபயோகிக்கவும் உதவும்
4. மிகக் குறைந்தசெலவிலும், அதிக கவனிப்பில்லாமலும், எல்லாவித கால நிலைகளிலும் எவ்வித தொந்தரவும் கொடுக்காமல் உழைக்கும்



1. குதிரை ஓட்டம் (HP.)
3. குதிரை ஓட்டம் (HP.)
6. குதிரை ஓட்டம் (HP.)

முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

**ஸிம்ஸன் & கம்பெனி லிமிடெட்.**

மவுண்ட்ரோட். மதராஸ்.

கிளைகள்: பங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (Dn).

# 'கலைக் கோயில்'

**ராஜலக்ஷ்மி சுவாமிநாதன்.**

கலையை வாழ்வுடன் ஒட்டுவதா அல்லது வாழ்வைக் கலையுடன் ஒட்டுவதாவென்ற பிரச்னையைக் கிளப்பினுன் நண்பன் ராஜு.

படகுத் துறையிலுட்கார்ந்துகொண்டு கடலலைகளிலேயே சிந்தனையைச் செலுத்திக் கொண்டிருந்த என் கவனம் கலைந்தது. மனப் பரிதியின் வேகத்தைத் தான் அளவிட முடியுமா?................. வாழ்வை ஏன் கலையுடன் நெருங்கச் செய்யக்கூடாது? 'கலை' அதன் உன்னத ஸ்தானத்திலேயே இருக்கட்டுமே. நாம் அதனளவுக்குயர வழி தேடுவோம். அதனை நம் நிலைக்குக் கொண்டுவர முயற்சிக்கவேண்டாம்!.........Let us try to transcend to the heights of Art. Let not Art condescend to our depths!..............

'அதிருக்கட்டும். கலைக்கென வே வாழ்வை அர்ப்பணஞ் செய்துவிட்ட ஒருவன், காதலைப் புறக்கணிக்கவேண்டியது அவசியமல்லவா' எனக் கேட்டான் நண்பன் ராஜு.

'இதில் தியாக உணர்ச்சிக்கே இடமில்லை. கலையில் காதலையும், காதலில் கலையையும் ஒருமித்துக் காணும் திறன் படைத்திருத்தலையே வாழ்க்கையின் லக்ஷியமாகக்கொள்ளல் வேண்டும்' எனக் கூறி நிறுத்தினேன்.

சற்றுத் தொலைவிலிருந்து ஒரு சிரிப்பொலி வெண்கல நாதத்துடன் கேட்டது! மனித சஞ்சாரமற்ற அத்தீவில் கேட்ட அந்நகையொலி, பயமும் ஆச்சரியமும் ஒருங்கே நிறைந்த ஓர் உணர்ச்சியைத் தூண்டியது. இயற்கையாக வெழுந்த வினுக் குறியுடன் ஒலி வந்த திக்கை நோக்கிப் புறப்பட்டோம்.

எங்கும் நிசப்தம்! 'ஜிவ்'வென்று பாய்ந்து பறந்து துள்ளிக் குதித்து ஆடிப் பாடும் புட்களும் இரவின் மோகன மடியில் படுத்து உறங்குகின்றன. மதியும் தன் சௌந்தர்ய நிலவினுல் இயற்கைத்தேவியின் மதியை மயக்கிக்கொண்டிருந்தான்!

சிறிது தூரம் சென்றிருப்போம். மணற் பரப்பின்மேல் மண்ணோடு மண்ணைகப் பதிந்து கிடந்த ஓர் உருவம் என் கவனத்தைக் கவர்ந்தது. அருகிற் சென்று கூர்ந்து நோக்கினேன். ஆஹா! நான் அங்கே கண்ட காட்சியை என்னென்று கூறுவேன்!...........ஆம்! அது ஒரு சிலைதான்! ஆனுல் சாமான்யமான ஒரு சிற்பியால் சிருஷ்டிக்கப்பட்டதாக இருக்க முடியாது. மகோன்னதமான சிலை! எழிலே உருக்கொண்டு என்முன் தோன்றியதுபோலிருந்தது!.................. அப்படியே மெய்மறந்து நின்றுகொண்டிருந்துவிட்டேன்!

இதற்கிடையில் சிரமத்துடன் சிலையைப் புரட்டிக்கொண்டே என் நண்பன், 'இதன் பின்னழகிலேயே மனதைப் பறிகொடுத்துவிட்ட நீ இப்பெண்ணுருவின் முன்னழகையும் பார்' எனக் கூறிக்கொண்டே அதனைத் திருப்பிப் போட்டான். என்னையுமறியாமல் உணர்ச்சி மிகுதியில் ஒரு பெருங்கூச்சலிட்டுவிட்டேன். சிலையின் பின் பகுதியில், எழிலின் சிகரத்தையே எட்டிப் பிடித்துவிட்ட அச்சிற்பி அதன் முன் பகுதியைக் கோரத்தின் சின்னமாகச் சமைத்திருந்தான். அந்த ஒரு சில நிமிஷங்களில் என் மனக் கடலில் தோன்றி மறைந்த எண்ணற்கரிய சிந்தனை அலைகளைச் சித்திரிக்க உலகிலுள்ள கவிகளே போதா!......................'கலைஞன் பித்தனுகவிருக்கக் கூடுமா' என்று கூட நினைத்துவிட்டது என் மனம்.

* * *

திடீரென்று சிலை சிரித்தது! அதே வெண்கல நாதத்துடன் பேசவும் ஆரம்பித்தது!—

"கலைஞன் பித்தனில்லை. என் சரித்திரம் முழுவதையும் கேட்டீர்களானால் இதன் உண்மை விளங்கும்" எனக்கூறி நிறுத்திற்று. பய பக்தியுடன் எதிரேயமர்ந்து கதை கேட்கத் தயாரானேன். சிலை சொல்லிற்று:—

"ஆம்! வஸந்தனை ஒரு சாதாரணச் சிற்பியெனச் சொன்னால் பொருந்தாது. சிற்பக் கலைக்கே தன் வாழ்வைப் பலி கொடுத்துவிட்டவன். ஏன்? அவன் வாழ்க்கையின் லக்ஷியமே அந்தக் கலைக் கோயில்தானே! அந்தக் கலா மந்திரத்தை நிர்மாணிக்கவே அமானுஷ்யமான அத்தீவைத்தேடியடைந்து, தன்னந்தனியாய், பதினாறு ஆண்டுகளாய்த் தனி வாழ்க்கை நடத்திவிட்டான்!...... காதலென்ற பேய்க்கு இரையாகாமலே! .........சிறு வயதிலிருந்தே சிற்பக் கலை பயின்றவனாதலால் இராப்பகல் இடைவிடா உழைப்பின் பயனாய் அவனது முப்பத்திரண்டாவது வயது பூர்த்தியாவதற்குள் அவனது மனோரதம் நிறைவேறும் நிலையை அடைந்தது.

ஆயிற்று. இன்னும் சில தினங்களில் கலா தேவியைப் பிரதிஷ்டைசெய்துவிடுவான். இந்த நிலையில்தான் 'அவள்' அவன் வாழ்க்கையில் குறுக்கிடுகிறாள். கலா தேவியை ஆவாஹனம் செய்ய வேண்டிய அக்கலா மந்திரத்திலே காதல் தேவதையைப் பிரதிஷ்டை செய்யத் தூண்டுகிறாள்! அதன் பலன்தான்............சிதைந்த சிற்பங்களையும், பாழடைந்த குகைகளையுமே நீங்கள் இன்று காணமுடிகிறது," என்று சொல்லிவரும்பொழுது, சற்றே பெருமூச்சுடன் நிறுத்திற்று.

கலையுள்ளம் படைத்த வஸந்தனையும் மயக்கக்கூடிய அந்த 'அவள்' யார் என்பதை அறிய ஆவலுடன் துடிதுடித்த என் உள்ளக்கிடக்கையை உணர்ந்துவிட்ட சிலை மேலும் தொடர்ந்து சொல்லலாயிற்று.

* * *

"............வெண்ணிலா தண்மையுடன் காய்ந்தது! பகல் பூராவும் ஓய்வில்லாமல் உழைத்த அலுப்புத்தீர வஸந்தன், படகுத் துறையில் மணற்பரப்பில் மல்லாந்து படுத்துக்கொண்டு நீல வானையும் வெள்ளித் தாரகைகளையும் பார்த்துக்கொண்டிருந்தான். திடீரென்று கரையோரம் ஓர் சிறு படகு வந்து நின்று அதினின்றும் எழிலைத் திரட்டி வார்த்த பூங்கொடிபோன்ற ஒரு பெண்ணுருவம் இறங்கியதும் திரும்பிச் சென்று மின்னொளிபோல் மறைந்தது. கலைஞன் சுய உணர்வுபெற்று, கடந்த சம்பவங்களை நினைத்துப் பார்ப்பதற்குள் அவளே அவன் எதிரில் வந்துவிட்டாள்.

இயற்கையெழிலே இன்னுருக்கொண்டு நின்றாற்போலத் தோன்றியது அவனுள்ளத்தில்!.........அவளோவெனில்......... பால் நிலவில் படுத்திருந்த கலைஞனின் முதற் பார்வையிலேயே பறிகொடுத்தாள் உள்ளத்தை!...........அவள்தான் மல்லிகா! தான் செய்தறியாத ஒரு குற்றத்துக்காக நாடு கடத்தப்பட்ட ஒரு கன்னிகை. அவள் கதையை அதிகம் வளர்த்துவானேன். கலைஞன் வாழ்வில் அடைக்கலம் புகுந்துவிட்டாள்!........... இனித் தான் போராட்டம்! முதலில்... .........கலைக்கும் வாழ்வுக்கும்.........பின்னர்.........வாழ்வுக்கும் காதலுக்கும்...... அதன் பின்னர்!......இறுதிப் போராட்டம்!......கலைக்கும் காதலுக்கும். இதிற் சிக்குண்ட கலைஞன், நடுக்கடலில் பாய்மரத் துண்டைப்பற்றி நிற்கும், புயலிற் சிக்குண்ட அபலையைப்போல், மனம் ஊசலாட வாரம்பித்தான். கையிற் சிற்றுளிகொண்டு, வேலையிலாழ்ந்திருந்த போதிலும். மனம் எங்கெங்கோ பாய்ந்து பரந்து செல்லும்:—ஆனால், அவளிடமிருந்த ஒரு சிறு கலையுணர்வே அவளுடன் நெருங்கிப் பழகுவதற்குப் போதுமானதாயிருந்தது. கலையுள்ளம் ஒன்றுபடுவது இயற்கை விதிக்கு மாறானதன்றன்றோ?

* * *

மலர்குலுங்க, மணம் பரவ, மந்தமாருதக் குழலூதக் காலை உதயத்துக் கன்னியெழுந்தாள். அலைமோதும் கரையருகில், மல்லிகாவுக்கென ஓர் தனிக்கூடா

ரம் எழும்பிவிட்டது! இதற்குள்ளாக. அன்றுதொட்டு, அவள் அங்கே தன் வாழ்க்கையைத் துவங்கிவிட்டாள்……… …………தினந்தோறும் காலையிலெழுந்து வஸந்தன் தன் பணியாற்றச் சென்று விடுவான். மாலையில் உழைத்த உழைப்பின் அலுப்புத் தீர மல்லிகாவைத் தேடிக்கொண்டு வந்துவிடுவான். பிறகு இருவரும் கை கோத்துக்கொண்டு கடற் கரைக்குச் சென்று கலையாராய்ச்சியிலாழ்ந்துவிடுவார்கள்.

………'கலை', 'கலை' என்று கதறியது அவனுள்ளம். ஆனால் அவள் இதயமோ காதலையே இசைத்தது! ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தன் உடலழகால் அவன் மன நெறியைக் களங்கப்படுத்தவே முயற்சித்தாள்!………அவன் மிகுதியும் களைப்புற்றுத் திரும்பும் மாலையில், அவன் முகமலரைத் தன் மார்பகத்தில் பொருத்திக்கொண்டு, உடலை மெல்ல வருடிக் கொடுப்பாள்! பொங்கியெழும் அலைநடுவே பாய்ந்துவரும் பேய்க் காற்று!………ஆம்! அது கூட அவளது உடையணிகளைச் சின்னாபின்னப்படுத்தி, அதன் மூலம் அவள் மனமாற்றத்தைப்பெற அவளுடன் ஒத்துழைத்தது!………ஆனால் இதனாலெல்லாம் கலை நிஷ்டையிலாழ்ந்து நின்ற கர்மயோகியாகிய வஸந்தனின் மனவுறுதியை அசைக்க முடியவில்லை!

என்னவிருந்தாலும், பேதை மல்லிகா பெண்ணுள்ளம் படைத்தவள் தானே! என்னதான் கலையுணர்வுகொண்டிருந்தாலும், நாட்கள் செல்லச் செல்ல அவளால் இந்த மவுன நிலையைப் பொறுக்க முடியவில்லை. வஸந்தனைக் காணாதவரை அவனை நினைத்து நினைத்து ஏங்கித் தவித்துவிட்டு, மாலையில் அவன் வந்தவுடன் வீணாய்க் கலையாராய்ச்சியில் ஈடுபடுவதென்பது அவளுக்குப் பெருத்த ஏமாற்றத்தையே அளித்தது!

உலகத்தாருக்குப் பெருந்துன்பம் விளைவித்துக்கொண்டிருந்த மூன்று புரங்களும் நீருகும்படி எரித்துவிட்ட சிவபெருமானது தண்ணருள் வாய்ந்த லீலைகளை அப்படியே சிற்பக் கோயில்களாகச் சமைத்து வந்தான் வஸந்தன்…… அந்த 'ஆனைத் தீவு' என்ற மனித சஞ்சாரமற்ற குகைத் தீவிலே. இவ்விதம் கலைக்கு வாழ்வு பலியாகிக்கொண்டிருந்ததை மல்லிகாவால் பொறுக்க முடியவில்லை போலும்!

* * *

அன்று எப்படியும் அவன் தன் காதலுக்கு (?) இணங்க (பலியாக) வேண்டியது தான் என்ற முடிவுக்கு வந்துவிட்டாள் மல்லிகா. அன்று சோதனை நாள் என்று வஸந்தனுக்குத் தெரியுமா? வழக்கம்போல் வந்தான். இருவரும் கடற்கரைக்குச் சென்று சம்பாஷணையில் இறங்கிவிட்டனர்.

சந்திரன் வான உச்சியை அடைந்தான். தூரத்திலுள்ள மரங்களினின்றும் ஊடலில் தவித்துக் கூடலில் திளைத்திடும் புட்களின் கீச்சொலியைத் தவிர எங்கும் நிசப்தம்.

திடீரென்று நிலவொளியில் அவள் எழுந்து நின்றாள். 'நான் வெறும் கலா ரஸனையுள்ளவள் மாத்திரமல்ல! நாட்டிய ராணியும்கூட! இன்றே என் நாட்டியத்தை அரங்கேற்றுவதென முடிவு செய்துவிட்டேன்? எனக் கூறிக்கொண்டே, வஸந்தனுடைய பதிலுக்குக்கூடக் காத்திராமல் ஆனந்த நடனம் புரிய ஆரம்பித்துவிட்டாள்.

குமுறி யெழும் அலையோசைகளுக்கிடையேயும், சமுத்திரக் காற்றின் இன்ப உணர்ச்சிகளுக்கிடையேயும், நள்ளிரவில், பால் நிலவில், வெண் மணற் பரப்பினில், எழுந்து அவள் களி நடனம் புரிந்தது, கலைஞன் உள்ளத்தில் அன்னை சக்தியின் ஆனந்தத் தாண்டவத்தைப் பிரதிபலிக்கச் செய்தது! ஒரு கணம், விண், மண், கடல் யாவுமே அவளுடன் சேர்ந்து ஆடியதுபோல் தோற்றியது அவனுக்கு!……………வெறி கொண்டு எழுந்தான்! ………வஸந்தன்!………… அவளுடன் வீரத்தாண்டவம் புரிய…… ……மெய் மறந்து வீழ்ந்தான் கீழே! நாட்டியம் முடிவு பெற்று, சோர்வுடன் படுத்திருந்த வஸந்தன் உடலோடு உடலாய் வீழ்ந்தாள் மல்லிகா! போதை தலைக்கேறியது கலைஞனுக்கு. அவனையுமறியாமல் அவன் கரங்கள் அவளை இழுத்து அணைத்துக்கொண்டது. அன்று

முதலாகப் போய்விட்டது அவர்கள் தனிவாழ்க்கை! 'பாற்கடற் பள்ளியில் கலவி நீங்கியபின், பிரிந்தவர் கூடினுற் பேசலும் வேண்டுமோ'வென்ற கம்பன் கனவு நனவாகிவிட்டது அவர்களைப் பொறுத்தவரையில்.

* * *

'முற்றுப் பெறுத கலைக் கோயில் எங்கே கவனிப்பாராற்றுப் பாழடைந்துவிடுமோ?' வென்று பயந்துவிட்டேன் நான் கூட. ஆனுல் இந்த நிலையும் வெகு காலம் நீடித்திருக்கவில்லை. கலைஞன் தன்னினைவு பெற்றுவிட்டான். காதல் நாடகத்திலாழ்ந்துவிட்ட வஸந்தன், சிற்பக் கலையை அடியுடன் மறந்துவிடவில்லை.

............இன்று அவன் கையிலுள்ள சிற்றுளி செதுக்கும் சிலை அவனுடைய காதல் தேவியினுடையதுதான்! வேறு ஒன்ருகவுமிருக்க முடியுமோ? மல்லிகாவின் காதலைக்கூட மறந்து அவன் கவனமும் கருத்தும் சிலையிலேயே லயித்திருந்தது! இப்பொழுதெல்லாம் அவள் வருகை கூட அவனுள்ளத்தில் ஒரு மோஹன லாகிரியைக் கிளறவில்லை!................. சிலையின் ஒவ்வொரு அங்கங்களையும் கூர்ந்து கவனித்துச் சமைப்பதிலேயே கண்ணுயினுன். இடை நெளிவைச் சிருஷ்டிப்பதற்கே இருபது நாட்களாகச் சிரமப்பட்டு அன்றிரவு மல்லிகா ஆடிய நடனக் காட்சியை மனத்திலுருவகப்படுத்திக்கொண்டு ஒருவாறு வெற்றி பெற்று விட்டான். அப்பொழுதைய நிலையில் தன் மனத்திடைத் தோன்றும் காதலுணர்ச்சிகளையெல்லாம் திரட்டிக் கல்லில்வார்ப்பதே கலையெனத் தோன்றியது அவனுக்கு.

அவன் தன் சிலையை அழகுபெறச் செய்வதிலேயே ஈடுபட்டிருக்கும் பொழுது, அவள் அங்கு வந்துபோகும் வேளைகளில்கூட, அவளைப்பற்றிய நினைவே இல்லாமலிருந்தது,.........'வஸந்தன் தன்னைப்புறக்கணித்து விட்டான்' என்ற உணர்ச்சியை மல்லிகாவினிடத்தில் பலப்படுத்தியது. அதற்கு முத்தாய்ப்பு வைத்ததுபோல் நடந்தது அந்தச் சம்பவம். கரைகடந்த காதலோடு வஸந்தனைத் தேடிச்சென்ற மல்லிகா, வேகத்தில், சிலைக்கு எதிரில் நின்றுகொண்டு அதனமைப்பை வெவ்வேறு கோணங்களினின்றும் உற்றுநோக்கிக் கொண்டிருந்த கலைஞன்மீது இடறி விழுந்தாள். கையிலிருந்த சிற்றுளி அவள் நெற்றியைக் காயப்படுத்திக் குருதி பாய்ந்தது.

அந்த நிமிஷத்திலும், மனித அரவமே கேட்காததுபோல், தன் பணியிலாழ்ந்திருந்த வஸந்தனது செயல் அவள் உள்ளத்தை அதே உளிகொண்டு செதுக்கி விட்டது போலிருந்தது. பாவம்! இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டாவது அவனுடன் உரையாடக்கருதிய அவள் எண்ணத்தில் மண்ணைப்போட்டது அவன் கலைநிஷ்டை!..................... .........வஸந்தனின் கலையுணர்ச்சியின் ஆழத்தை அளவிடமுடியாத பேதையுள்ளம் படைத்த மல்லிகாவால் இந்த ஏமாற்றத்தைப்பொறுக்கவே முடியவில்லை. திடீரென்று, குமுறிக்கொண்டிருந்த, அவளுள்ளத்தில் பொருமைத்தீ கொழுந்து விட்டெரிய ஆரம்பித்துவிட்டது! பின்னர் கேட்பானேன்?

* * *

கொலைத்தொழில் புரியும் கொடியனும் அஞ்சி நடுநடுங்கும்படியான கும்பிருட்டு. பகல் பூராவும் வஸந்தனை நினைத்து ஏங்கித் தவித்த அவள் உள்ளமும் உடலும் சோர, வெப்பத்தைத் தாளமுடியாத பூங்கொடிபோல் துவண்டுகிடந்தாள் மல்லிகா!.........வஸந்தன் அவள்கூடார வாசல்வழியே கடற்கரைக்குச்செல்கிருன் ...... பித்தன்போல்செல்லும் அவனுடைய தோற்றம்கூட அவள்மனதை உருக்கவில்லைபோலும்! .........எப்படித்தான் அந்தமுடிவுக்கு மனதைத் திடப்படுத்திக்கொண்டாளோ?

அன்றைய இரவின் திரை மறைவிலே நடந்த அச்சம்பவமே அவர்களது வாழ்வுக்கும் முற்றுப் புள்ளி வைத்து விட்டது!

எங்கோ வாழ் ஆந்தைகளின் பயங்கரக் கீச்சொலி! ............... கறுப்புடை

யணிந்து முழுவதும் போர்த்து மூடிக் கொண்டிருந்த ஓர் உருவம்......அந்தக் காரிருளில்......... தயங்கித் தயங்கிக்... ......கலைஞனின் கூடாரத்துக்குள் நுழைந்து, அங்கே எழில் வடிவாய் அமைந்திருந்த சிலை எதிரே நெருங்கி நின்றது.

திடீரென்று பேய்ச் சிரிப்பொலி!...... ......'என் காதலை அழிக்கவந்த காதகி! போ!'.........அவ்வளவுதான். கையிலிருந்த ஒரு சிற்றுளிகொண்டு சிலையின் முன் பகுதியைச் சின்னுபின்னப் படுத்திவிட்டு மறைந்தது உருவம்.

மறுநாள் காலைக் கதிரவன் கண்ட காட்சிதான் என்னே! தான் படைத்த சிலைக்கு எதிரிலேயே வஸந்தன் மண்டையுடைபட்டு இறந்து கிடந்தான்.

...........காதல் பேய் குறுக்கிடாமலிருக்கவே, தனி வாழ்க்கையை விரும்பிய அச்சிற்பி, மனித சஞ்சாரமற்ற அத்தீவைத் தேடியடைந்தான். ஆனல், கலைக் கோயில் பூர்த்தியடையும் தருணத்தில் 'அவள்' அவன் வாழ்க்கையில் குறுக்கிட்டாள்.................அதுவே, நீங்கள் இன்று காணும் சிதைந்த சிற்பங்களுக்கும் என் அழிவுக்கும்கூடக் காரணம்'' என்று உணர்ச்சியுடன் சிலை கூறி முடித்தது!.....................................

காதலுக்காகக் கலையையோ? அல்லது கலைக்காகக் காதலையோ? தியாகம் செய்து தானகவேண்டுமா? ஏன்? காதலும் கலையும் ஒருமித்துப் பரிணமிக்காதா? ஏன்? காதலே ஒரு நற்கலையல்லவோ? (இப்படியெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தது மனம்)

...........''ஏன் பித்துப் பிடித்தவன் போல் சிலையையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கிருய்? அதிலென்ன அவ்வளவு மோஹம்'' என்ருன் நண்பன் ராஜு.

''ஒன்றுமில்லை...........சும்மா தான்'' என்ற வார்த்தைகள் ஒரு பொருளற்ற சிரிப்புடன் வெளிவந்தன.

''இது நம் நாட்டிற்கே ஏற்பட்ட ஒரு சாபத்தீடுபோலும்'' என்றது என் மனம்.


# இந்தியன் பாங்க் லிமிடெட்

**இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்**

நார்த் பீச் ரோட், மதராஸ்.

●

மதராஸ் ஆபீஸ்கள்:

எஸ்பிளேனட், மவுண்ட் ரோடு, திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம், எழும்பூர்.

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் - ரூ. 72,00,000

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 53,00 000

ரிஸர்வ் நிதி - - ரூ. 62,00,000

●

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

**N. கோபால அய்யர்.**

செக்ரெடரி.

சென்ற இதழ் தொடர்ச்சி

# முத்து மூக்குப் பொட்டு

கௌரி

"வந்ததே பிடித்து வீடே நன்றாக இல்லையே. ஒருவேளைகூட சாப்பிடவில்லையே அவர்! இதைப் போட்டுக்கொண்டு தான் என்ன ஆகணும்? தெய்வமே! அவர் நல்லபடியாக எழுந்தா போரும். அம்பிகே! தைய நாயகி! உனக்கு எடுத்து வந்து சாத்தி விடுகிறேன் தாயே" என்று வேண்டிக்கொண்டாள் லலிதா.

சுமார் மணி ஆறு இருக்கும். மருந்தைக் கலந்து கொடுத்துச் சென்றவள், சிறிது நேரம் கழித்துக் கஞ்சியைக் கரைத்து எடுத்து வந்தாள். ராமஸ்வாமியிடம் அவர் தாயார் உட்கார்ந்துகொண்டிருந்தாள். லலிதாவிற்கு என்னவோ சொல்லத்தெரியாதவேதனை. கொஞ்சநேரம் கழித்து தன் அறையில் வந்து ஓர் நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தாள். மனதில் ஒன்றல்ல, பல எண்ணங்கள் சேர்ந்து கவலையை இன்னும் அதிகரிக்கச் செய்துகொண்டிருந்தன.

மூக்கில் போட்டுக்கொண்டிருந்த முத்து மூக்குப்பொட்டைக் கழற்றி வைத்துவிட்டுப் புதிதாய்க் கட்டி வந்த கமல மூக்குப் பொட்டை எடுத்துப் போட்டுக்கொள்ளலாமா என்று யோசித்துக்கொண்டிருந்தாள். மறு கணம் அதுவும் பிடிக்கவில்லை. புதிதாக அதை எடுத்துப் போட்டுக்கொண்டு இன்னும் என்ன வருமோ! எந்த நேரத்தில் என்ன வருமென்பதை எண்ண முடியவில்லையே மனித வாழ்வில்!" என்று எவ்வளவோ எண்ணங்கள் மேல் மேல் எழுந்தன.

"அடியம்மா எல்லாம் நல்லபடியாய் இருந்து அவர் உடம்பு ஒன்றுமில்லாமல் எழுந்தாரானால் போதும்; ஒரு பரீக்ஷையும் வேண்டாம் இப்போ" என்று நினைத்துக்கொண்டவள் வீட்டில் வெகுகாலமாக இருந்த ஒரு கெம்பு மூக்குப்பொட்டை எடுத்துப் போட்டுக் கொண்டாள். அப்பொழுதுதான் மனமும் சற்று நிம்மதி அடைந்தது. வெகு நேரம் அவ்விடம் இருப்பும் கொள்ளவில்லை. 'கஞ்சி சாப்பிட்டாரோ, என்னமோ பார்ப்போம்" என்று மெத்தைக்கு வந்தாள். கஞ்சியைச் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டிருந்தார் ராமஸ்வாமி. லலிதா அவர் கால் மாட்டில் வந்து நின்றதும் அவள் முகத்தையே வெறிக்கப் பார்த்தார்.

"முத்து மூக்குப் பொட்டைக் கழற்றியது அவருக்குப் பிடிக்கவில்லை" என்று தோன்றியது லலிதாவிற்கு. மேலே என்ன கேட்கப் போகிறாரோ என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தபொழுது,

"அம்மா லலிதா! இங்கே வாயேன் இப்படி" என்று அழைத்தாள் அவள் மாமியார். அவளையும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்றவள் "அம்மா, அவன் எதையோ நினைச்சுண்டு வேதனைப் படறாண்டீ!" என்றாள் லலிதாவைப் பார்த்து. "என்ன சொல்றார்?" என்றாள் லலிதா ஆவலுடன். "ஒன்றுமில்லே, சொன்னா நீ எதாவது வருத்தப்படப் போறயேன்னு மென்னு முழுங்கறான் நேத்திலேயிருந்து. அவன் நன்னா இருந்தாத்தானேடியம்மா எல்லாம்? இந்த கமலத்தை வாங்கின வேளை இப்படிப் படுத்தறதோ ஒரு வேளைன்னு வேதனைப்படறான். எந்த வேளையிலே வந்துதோ! வந்தபடி அவனண்டயே கொடுத்துடு. வேறே வாங்கிண்டா போறது" என்று அம்மாள் கூறும் பொழுது லலிதாவுக்குத் தலைக்கும் காலுக்கும் "ஜிவ்" என்று ஏதோ வேதனை செய்துவிட்டது.

"எந்த வேளையில்தான் ரெண்டும் வந்துதோ அம்மா! இது போராது உன் மூகத்துக்குன்னு வேறே வாங்கினார். முத்துன்னாலே பிடிக்காது அவருக்கு. அதையும் வாங்கிக்கோன்னார். ரெண்டையும் கொடுத்துவிடறேன். வாண்டவே வாண்டாம்" என்றாள்.

"முத்துக்கு ஒண்ணும் தோஷமில்லேடியம்மா! பளிச்சுனு போட்டுக்கோ எடுத்து. கொசுவாட்டமா பார்க்கவே முடியல்லே மூக்குலே. எல்லா தோஷமும் கமலத்துக்குதான். இதுக்கு ஒண்ணுமே இல்லே" என்று மீனாக்ஷி அம்மாள் கூறினாலும் லலிதாவிற்குத் திருப்தியாக இல்லை.

"எனக்கு முத்துதான் ஆவி வரவில்லேன்னு தோணறது, அவருக்கு கமலம் சரிப்பட வில்லேன்னு தோணறது' இரண்டுமே வேண்டாம் அம்மா!" என்று தீர்மானமாய்ச் சொன்னாள் லலிதா.

ராமஸ்வாமி தன்னை எதற்காக அப்படி வெறிக்கப் பார்த்தார் என்பது, இப்பொ

முது புலப்பட்டது அவளுக்கு. கமல மூக்குப் பொட்டை வேண்டுமானால் திருப்பிக் கொடுத்துவிடுவது. தான் மிகவும் ஆசையுடன் வாங்கிக்கொண்ட முத்து மூக்குப் பொட்டை "அம்பாளுக்கு"ச் சாத்திவிடுவது என்று மனதில் தீர்மானம் செய்துகொண்டுவிட்டாள்.

ஒன்றல்ல, இரண்டல்ல. எவ்வளவோ மந்திரம், தந்திரம், ஜபம், சூரிய நமஸ்காரம் எல்லாம் நடந்தன. தானம், தர்மம், கோவில்களுக்குக் கட்டளை, பணம் ஜலமாகச் செலவழிந்தது. ஒருவர் பின் ஒருவராக வைத்தியர்கள் கணக்கில்லை. ஊரே அங்கலாய்த்தது. "இப்படி ஒரு மாயமாய் வந்துவிடுமோ உடம்பிற்கு? வந்தால்தான் என்ன? இப்படியா? ஒவ்வொரு வியாதியாவா வரும்? ஆயிரக்கணக்கா வைத்தியன்கள் இருக்கிற இந்த ஊரிலே ஒத்தனுலேயாவது தாவளையாக்க முடியாதோம்மா? இவன் கெட்டிக்காரன், அவன் கெட்டிக்காரன் என்கிறுளே? தைவம் கண்ணைத் திறந்து பார்த்து, பாவம்! லலிதாவை ஆயிரங்காலம் நன்னு வைக்கணும்" என்று ஒருவர் பாக்கியில்லை, அப்படி தெய்வங்களையும் வேண்டிக் கொண்டார்கள்.

வைத்தியர்கள் ஒவ்வொருநாள் ஒவ்வொரு வியாதியின்பெயரைச் சொன்னுர்களேதவிர குணத்திற்குக்கொண்டுவர அவர்களுக்கும் பிடிபடவில்லை. இரவும் பகலும் தாபஜுரம், ஒரே ஓய்ச்சல். சொட்டு ஆகாரம் இறங்குவது பிரம்மப் பிரயத்தனமாய்ப் போய்விட்டது.

மீனுக்ஷி அம்பாள் கண்ணும் கண்ணிருமாய் நின்றபடிதான்.

"அவர் எதிரில் கண்கலங்கக்கூடாது அம்மா" என்ருர்கள் வைத்தியர்கள்.

எல்லாம் அவருக்காகத்தான். வியாதியின் கடுமை அதிகமாக அதிகமாக லலிதாவின் மனம் உறுதியாகியது. அவருக்குச் சிகிச்சையும் சிச்ருஷையும் செய்வதில் முனைந்திருந்தாளே ஒழிய, தன்னைப்பற்றியோ வருவதைப்பற்றியோ எண்ணியவள்போல் கலங்கி நிற்கவில்லை. கலங்கும் உளத்தைக் கல்லாக்கிக்கொண்டு அவர் குணத்தை முன்னிட்டுத் தெய்வங்களைத் தொழுதபடி எதிரில் நின்ருள்.

நாளுக்குநாள் இளைத்துப்போய் அவர் முகத்தை லலிதாவால் பார்க்கவும் முடியவில்லை. வைத்தியத்தை மாற்ற வேண்டுமென்று ராமஸ்வாமியின் தகப்பனர் அதே கவனமாய் இருந்தார். ராமஸ்வாமியின் உடம்பில் ஒன்றுமே இல்லை. பஞ்சுபோல் ஆகி, எலும்பு இருக்கும் இடமே தெரியவில்லை. வைத்தியர்கள் இனி வைத்தியம் செய்தாலும் பிரயோஜனமில்லை என்ற தீர்மானத்திற்கு வந்திருந்தார்கள் என்றே பட்டது. சிறிய சம்சாவினுல் கஞ்சியை எடுத்து ராமஸ்வாமியின் வாயில் விட்டுக் கொண்டிருந்தாள் லலிதா.

"லலிதா! உன்னைப்பார்த்தால் என்னமோ போலிருக்கே. லலிதா! பளிச்சுனுவாயேன் என் எதிரே" என்று லலிதாவின் கைகளை அன்புடன் பிடித்துக்கொண்டார் அவர்.

லலிதா சிறிதுநேரம் மௌனமாக இருந்தாள். பொங்கிவரும் கண்ணீரை அவளால் மறைக்கவும் முடியவில்லை. அதைப்பார்க்க அவர் மனம் மட்டில் கலங்காதா? நீண்ட பெருமூச்சுடன்,

"வருத்தப்படாதே லலிதா! எனக்கு ஒண்ணும் இல்லை. நீபாட்டுக்கு எப்பொழுதும் போல் இரு. முகத்திலிருக்கும் களையே போயிடுத்தே. அவ்வளவு ஆசையோடே வாங்கிண்டே, கொசுமாதிரி இதை எடுத்துபோட்டுண்டு இருக்காயே மூக்கிலே! எடுத்துப்போட்டுக்கோ உன் முத்து மூக்குப்பொட்டை" என்ருர்.

லலிதாவுக்கு மேலும் துக்கம்பொங்கியது. "எனக்கு என்ன இப்போ அலங்காரம்? எல்லாம் உங்க உடம்பு நன்ரு தாவளையாகி எழுந்திருக்கணும். என்னைப்பத்தியா கவலை?" என்ருள்.

ராமஸ்வாமி என்ன சிறிய குழந்தையா? தமக்கு வந்திருக்கும் உடம்பென்ன? இருக்கும் நிலைமை என்ன? வைத்தியர் என்ன சொல்லுகிருர் என்பது தெரியாமலா இருக்கும்? லலிதாவைப் பார்க்கப் பார்க்க அவர் மனதில் என்ன எண்ணங்கள்தான் எழுந்தனவோ, எவ்வளவு வருத்தம் தான் பட்டாரோ, எப்படித்தான் அடக்கிக்கொண்டாரோ பாவம்—இவ்வளவு வருஷங்களாகத் தானுக ஒன்றையும் கேட்டு அவர் அறியார். இந்த ஒரு மூக்குப் பொட்டிற்காக அவள் எவ்வளவு பிரயாசைப்பட்டாள், எவ்வளவு ஆசையுடன் வாங்கிப் போட்டுக்கொண்டாள் என்று நினைக்கும்பொழுது இனி லலிதாவின் எழுத்து எப்படி இருக்குமோ என்று எண்ணி எண்ணித் தவித்தார் தமக்குள். அதை வாங்கிப் போட்டுக்கொண்ட இரண்டு நாட்களுக்குள்ளேயே அவர் அனுபவித்த ஆனந்தமும், கண் குளிரப்பார்த்த அவள் அழகும்! லலிதாவின் அழகுதான் என்ன? அவள் நிலை என்ன ஆகுமோ என்று நினைக்கும்பொழுது அவர் மனம் தான் என்ன பாடுபடும்? அவர் மனதில்

என்ன தோன்றியது, என்ன நினைத்தார் என்பது பகவானுக்குத்தான் வெளிச்சம்.

"இல்லை லலிதா! உனக்கு அந்த மூக்குப் பொட்டு ரொம்ப நன்னாய் இருக்கு. எடுத்துப் போட்டுக்க மாட்டாயா! எனக்குப் பார்க்கணும்போல் ஆசையாயிருக்கு" என்றார் கெஞ்சுவதுபோல்.

"எனக்குப் பிடிக்கல்லை" என்றாள் லலிதா.

"நான் சொல்லறதைக் கேட்கமாட்டாயா, ஆனால்?" அந்தக் கேள்வியில்தான் எவ்வளவு அர்த்தம்!

"அப்படி இல்லை. அம்பாளுக்குச் சாத்தறேனென்னு வேண்டிண்டுட்டேன்" என்றாள் லலிதா.

"நீ போட்டுக்கொண்டதை அம்பாள் ஏத்துக்கொள்ள மறுத்துவிடுவாளா லலிதா? நீயேதான் லலிதாம்பிகையாச்சே!" என்று ராமஸ்வாமி கேட்கும்பொழுது லலிதா என்னதான் செய்வாள்?

இந்நிலையில் அவர் ஆசையைத்தான் எவ்விதம் உதறித் தள்ளுவது? இல்லை தன் தலையில்தான் என்ன எழுதியிருக்கிறதென்பதைக் கண்டாள் லலிதா? வேதனைகள் எல்லாம் பலவிதமாகச் சேர்ந்துகொண்டு வெகுநேரம் வரையில் அழுதுவிட்டாள். அவளுக்கே அச்சான்யமாகப்பட்டது பிறகு.

"அம்மா, வருத்தப்படாதே. மங்கிலிய பலம் இருந்தால் எமன் வாயில் போய்க் கூட மீண்டு வரலாம்டியம்மா. வாயை விட்டுத்தான் சொல்றார் பாவம்! பளிச்சுனு ஒரு புடவையைக் கட்டிண்டு அழகாய் நெத்திக்கிட்டுக்கோ. அவர் சொன்னாப்பலே நீ போட்டுண்டா அம்பாள் வாங்கிக்க மாட்டேன்னு சொல்லிவிட மாட்டா. எடுத்து போட்டுக்கோ மூக்குப் பொட்டை. நன்னாவேயில்லை முகம்" என்று தேற்றினாள் சமையல்கார பாட்டி.

"மத்தியானம் யாரோ வைத்யர் வரப் போறாராம், நான் சிங்காரம் பண்ணிண்டு நிக்கணுமா இப்போ? என்ன சொல்லப் போறாரோன்னு நினைச்சுண்டாலே ஓஞ்சு போறது கையும் காலும்" என்றாள் லலிதா.

"யாரு? அப்பா பேசிண்டு இருந்தாரே அவரா? ரொம்ப கெட்டிக்காரர். நன்னா நம்பிக்கையா மட்டும் சாப்பிடணும் சாப்பிடறவா. சாதாரணமா எங்களைப்போல இருக்கறவா எல்லாம் அவரைத்தான் கூப்பிடற வழக்கம். பெரிய வைத்தியன்னு சொல்றதுதான். இவர் மருந்துலே இருக்கற குணம் ஒரு மருந்துலே கிடையாது! நல்ல கைராசி, அவர் கால் வச்ச இடத்துக்குப் பயமே இல்லே. பேசாமே இரு; கவலைப்படாதே" என்றாள் பாட்டி.

"உங்க வாக்குப் பலிக்கட்டும் பாட்டி" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றுவிட்டாள் லலிதா.

மாலை மணி சுமார் ஐந்து இருக்கும். எல்லோரும் வைத்தியரின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு இங்கும் அங்கும் போய்க்கொண்டிருந்தனர்.

லலிதாவும் மீனாக்ஷியும் ராமஸ்வாமியிடம் இருந்தார்கள்.

"அப்பாடா! இப்போதான் லலிதா முகத்தைக் கொஞ்சம் பார்க்கமுடிகிறது. இல்லேம்மா?" என்றார் ராமஸ்வாமி.

"நன்னாத்தான் இருக்கு. எந்த வேளையிலேதான் வந்ததோ, இப்படிப் படுக்க வச்சுடுத்தே உன்னை?" என்றாள் அவள்.

வேதனையும் விசாரமுமாகச் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருக்கையில் ராமஸ்வாமியின் தகப்பனார் வேகமாய் வந்து, "வைத்தியர் வருகிறார். கை பார்த்துட்டு, கையலம்ப ஜலம் எல்லாம் தயாராக வைத்திருக்கா?" என்றார்.

"ஹகீமோ?" என்றார் ராமஸ்வாமி. அப்பொழுதுதான் தெரிந்தது போலிருக்கு அவருக்கு.

கறுகறுத்த தாடியை உருவிக்கொண்டு ஆஜானுபாஹுவான "ஹஹீம் ஹுஸேன் ஸாஹேப்" உள்ளே நுழைந்தார். மீனாக்ஷி அம்மாளும் லலிதாவும் சற்று நகர்ந்து நின்றார்கள். வைத்தியர் என்ன சொல்லப் போகிறாரோ என்று எல்லோருக்கும் மார்பு "படபட" வென்று துடித்துக் கொண்டிருந்தது.

எல்லா வைத்தியர்களையும் போல இல்லாமல் "ஹகீம்" சுமார் அரைமணி நேரம் ராமஸ்வாமியின் உடம்பைப் பரிசோதனை செய்து பார்த்தார். வைத்தியர்கள் கொடுத்த மருந்துகள், சீட்டுகள், எக்ஸ்ரே படங்கள் எல்லாவற்றையும் எடுத்து வைத்துப் பார்க்கச்சொன்னார் ராமஸ்வாமியின் தகப்பனார்.

வைத்தியர் உள்ளே நுழையும்பொழுது எவ்வளவு நம்பிக்கையுடன் நுழைந்தாரோ அவ்வளவுதெளிவும் நம்பிக்கையும் தென்படவில்லை.

ஒன்றும் சொல்லாமல் வெளியே வந்துவிட்டார். வெகுநேரம்வரையில் கீழேயே ராமஸ்வாமியின் தகப்பனாருடன் பேசிக் கொண்டிருந்தார், ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை. என்னப்பேசுகிறார், என்ன

சொல்லுகிறார் பார்ப்போம் என்று இங்கும் அங்கும் அலைந்தனர்.

"வைத்தியர் போய்விட்டாரா? என்ன சொன்னாராம்?" என்றார் ராமஸ்வாமி.

"ஒண்ணுமே சொல்லல்லையே அப்பா. இன்னும் ஏதோ பேசிண்டு இருக்காப்பலே இருக்கு" என்று அவரைச்சமாதானம் செய்தாளே ஒழிய, ராமசாமியின் தகப்பனார் ஒன்றுக்கும் பதில்பேசாது போனது அந்த அம்மாளுக்கல்லவா தெரியும்!

"ஒண்ணும் சாரமில்லைங்கறாராக்கும்! ஹா—!" என்று ராமஸ்வாமி பெருமூச்சு விட்டு வேதனைப்படுவதற்கும் அவர் தகப்பனார் வருவதற்கும் சரியாக இருந்தது. வந்தவர் அங்கு நிற்கவே இல்லை. வராண்டாவிற்குச் சென்றார்.

ஓடினாள் மீனாக்ஷி அம்மாள். லலிதாவால் மட்டும் அங்கேயே இருக்கமுடியுமா?

"என்னசொல்றார் வைத்தியர்?" என்றாள் மீனாக்ஷி அம்மாள் பதைபதைப்புடன்.

"என்னத்தை சொல்றது? எல்லாரும் சொன்னதைத்தான் அவரும்சொல்றார். ஒரு மருந்து பண்ணணுமாம். அது கிடைச்சுட்டா கட்டாயம் சொஸ்தப்படுத்தி விடலாம்னு சொல்றார்."

"அது என்னவாம்? எங்கேயிருந்தாவது வரவழைச்சுட்டாப்போறது" என்று ஓடிவந்தாள் லலிதா-என்றும்பேசாமல் மாமனாரோடு திடீரென்று பேசுகிறோமே என்றுகூட அவளுக்குத் தோன்றவில்லை.

"நல்ல உயர்ந்த முத்துக்கள் கொஞ்சம் வேணுமாம். அது இங்கே கிடைக்காதுங்கறார்" என்று அவர் இன்னும் சொல்லி முடிக்கவில்லை. லலிதா ஒரே ஓட்டமாய்க் கீழே இறங்கி ஓடினாள். வைத்தியரின் வண்டி புறப்படும் சமயம்—தன் மூக்கிலிருந்த முத்து மூக்குப்பொட்டைக் கழற்றி அவர்முன்பு நீட்டினாள். அவர் ஏற்றுக்கொள்ளுகிறாரோ இல்லையோ என்ற எண்ணமே அவளுக்குத் தோன்றவில்லை.

ஹகீமின் முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது. "அபூர்வமான முத்துக்கள்! தேடினாலும் கிடைக்காது அம்மணி! உங்கள் சௌபாக்கியம், இதை உபயோகித்து மருந்து செய்தால் அவர் உடம்பு மூன்று மாதங்களில் குணமடைந்துவிடும். இது நிச்சயம், உத்தரவு கொடுக்கிறீர்களா?" என்றார் வண்டியைவிட்டுக் கீழே இறங்கி.

ராமஸ்வாமியின் தாய் தந்தையின் நடுவில் நின்றபடி அவர்கள் முகத்தை ஒரு கணம் பார்த்தாள் லலிதா.

"அம்பாளுக்குச் சாத்தறேன்னு வேண்டிண்டேனே! அப்பறம் தெய்வக்குத்தம் ஒன்றுமில்லாமே இருக்கணுமே அம்மா?" என்றாள் ஒன்றும்தோன்றாது குழப்பத்தில். தெய்வ அபராதம்! என்று நினைக்கும் பொழுது அவள் உடல் பதறியது. அவர் உடம்பு! என்று நினைக்கும் பொழுது பூமியோ ஆகாசமோ ஒன்றும் தெரியவில்லை.

"தெய்வத்துக்கு மேலேம்மா இது! அம்பாளுக்கு என்ன? இன்னும் எவ்வளவோ வாங்கிச் சாத்தறது" என்றுசொல்லிக்கொண்டே முத்துவைத்த நத்தை வைத்தியரின் கையில் கொடுத்தாள் மீனாக்ஷி அம்மாள்.

'இனிஒன்றும் கவலை இல்லையம்மா! இவ்வளவு சீக்கிரத்தில் எங்கிருந்து இம்மாதிரி முத்துக்களைக் கொண்டு வருவது என்று கவலைப்பட்டேன், கவலையேபடாதீர்கள். இனி என் பொறுப்பு" என்றார் ஹகீம் சிரித்துக்கொண்டே.

லலிதாவுக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. எல்லோரும் இல்லாவிட்டால் வைத்தியரின் காலிலேயே விழுந்திருப்பாள்.

மூன்று மாதங்கள் ஓடியது தெரியவில்லை. ராமஸ்வாமி நன்றாகத் தெளிந்து எழுந்து உட்கார்ந்திருந்தார். அவரைப் பார்க்க "ஹகீம் சாஹப்" வந்திருந்தார்.

அவருக்கு நன்றி செலுத்தும் முறையில் எவ்வளவோ வித ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ராமஸ்வாமி வைத்தியரைத் தம் பக்கத்தில் அழைத்து உட்காரவைத்துக்கொண்டு "உங்கள் மருந்தினால் பிழைத்து எழுந்தேன்" என்றார்.

"ஒன்றுமில்லை, அந்தம்மாளைக் கூப்பிடுங்கள். இவ்வளவு உயர்ந்த முத்துக்கள் அவர் கொடுத்ததற்கு அவருக்குத்தான் என் நன்றியைச்செலுத்தவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே லலிதாவைப் பார்த்துக் கும்பிடு போட்டார்.

"இதை வாங்கியும் இருக்க வேண்டாம். இவ்வளவு கவலையும் பட்டிருக்கவேண்டாம்" என்றாள் லலிதா.

"மூக்குப் பொட்டா அது? உயிர் அளித்த தெய்வம்!" என்றார் வைத்தியர்.

"ஆம் தெய்வந்தான்!" என்று சொல்லிக்கொண்டே ராமஸ்வாமி லலிதாவை நோக்கும் பொழுது அவர் உள்ளத்திலே நிறைந்திருந்த நன்றியும் மகிழ்ச்சியும் பொங்கி வழிந்தன முகத்திலே.

"அருமையான மூக்குப்பொட்டு! எந்த வேளையில் வந்ததோ!! தெய்வம்!!!" என்றாள் லலிதா.

# சரித்திர முக்கியத்வம் வாய்ந்தது!

"ஜய்லன்"

**பாத்திரங்கள்.**

**தகப்பன்:** பழமையான கலைச்செல்வங்களின் வியாபாரி

**ரகு:** மூத்த மகன்

**ஜகன்:** இளையமகன்

**போலீஸ்காரன்**

**நர்ஸ**

**காலம்:** இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவதற்குக் கொஞ்சநாள் முன்னால்.

(திரை தூக்கப்பட்டவுடன் நாடக மேடை அந்தகாரத்தில் மூழ்கியிருக்கிறது. ஒரு பக்கத்திருந்து மூன்று மனிதர்கள் மெதுவாக அடிமேல் அடி வைத்து வருகிறார்கள். அவர்கள் கொண்டு வரும் கரியேறிய கெரொஸின் விளக்கின் மஞ்சள் வெளிச்சத்தில் அவர்கள் பேய் போல் தோற்றமளிக்கின்றனர். அவர்கள் அப்பக்கம், இப்பக்கம், பின்புறம் பார்ப்பதிலிருந்து ஏதோ திருட்டுத்தனமான வேலை செய்யப்போகிறார்களென்று தோன்றுகிறது.

தங்களை யாரும் கவனிக்கவில்லை என்ற திருப்தி ஏற்பட்டவுடன் மண்வெட்டிகளை வெளியில் எடுத்து ஒரு மரத்தின் கீழ் வெட்ட ஆரம்பிக்கிறார்கள்.

அம்மூவருடைய கரிய நிழல்களும், மரக்கிளைகளின் நிழல்களும் தரையில் பயங்கரமான சித்திரம் வரைகின்றன)

**தகப்பன்:** (மூச்சுத் திணறிக்கொண்டு) எவ்வளவு ஆழத்தில் புதைத்தாய்?

**மூத்தமகன்:** சுமார் இரண்டடி.

**இளையவன்:** ஒரு அடி ஆழத்தில் புதைத்திருந்தாலே சரியாக இருந்திருக்கும்.

**தகப்பன்:** நாம் வேலையைச் சீக்கிரம் முடிப்போம். இங்கு ஜன நடமாட்டம் அதிகம் கிடையாது, ஆனால் நம் அதிர்ஷ்டம் யாராவது வந்தாலும் வரலாம். ஜகன்! நாங்கள் தோண்டிக்கொண்டிருக்கும் பொழுது யாராவது வருகிறார்களா வென்று கவனித்துக்கொண்டிரு.

**இளையவன்:** சரி, அப்பா.

(இரவின் நிசப்தம் அவர்கள் மூச்சு விடுவதினாலும் மண்ணைத் தோண்டுவதினாலும் கலைக்கப்படுகிறது)

**மூத்தமகன்:** (ஒருகனமான பொருளைத் தூக்கி) இதோ கிடைத்து விட்டது.

**தகப்பன்:** அதில் சரியாகத் துருவேறி இருக்கிறதா?

**மூத்தவன்:** (விளக்கை அருகில் கொண்டு வருகிறான்—வெண்கலத்தினால் செய்யப்பட்ட ஒரு அழகிய தலை தென்படுகிறது.) சரியாக இருப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது.

**தகப்பன்:** நல்லது! இரண்டு மாதங்கள் போதுமென்று நான் உங்களிடம் சொன்னேனல்லவா? நாம் மற்றச் சாமான்களையும் வெளியே எடுத்துவிடலாமல்லவா?

**இளையவன்:** ஆம், ஏன் கூடாது? ரகுவிற்குக் களைப்பாக இருந்தால் நான் உதவிசெய்கிறேன்.

**மூத்தவன்:** (மண்வெட்டியைக் கொடுத்துக்கொண்டு) வந்தனம்.

(அவன் தோண்ட ஆரம்பித்தவுடன் ஒரு போலீஸ்காரன் ஓடி வருகிறான்)

**போலீஸ்காரன்:** (உரக்க கத்திக் கொண்டு) திருடர்கள்! ஓடாதீர்கள், ஓடினால் சுட்டுவிடுவேன்.

(அவர்கள் தப்பிக்கப் பார்க்கிறார்கள். சரியான தடியடி தகப்பனைக் கீழே தள்ளிவிடுகிறது.)

**போலீ:** நான் உங்களுக்கு எச்சரிக்கை செய்யவில்லையா? நீங்கள் ஓடிவிடலா மென்று நினைத்தீர்களோ!

**ரகு:** (அழுதுகொண்டு) நாங்கள் திருடர்களல்ல. தயவுசெய்து போக அனுமதியளியுங்கள்.

**போலீ:** உருளைக்கிழங்குகளை வெட்டி எடுத்துக்கொண்டிருந்தோமென்று என்னிடம் சொல்ல வராதீர்கள். நான் அக் கதையை முதலிலேயே கேட்டிருக்கிறேன்.

**தகப்பன்:** (அதிக வலியோடு) நாம் எங்கிருக்கிறோம்?

**போலீ:** இவர் யார்?

**ரகு:** எங்களுடைய தகப்பனுர். நாங்கள் போகலாமென்ருல் இவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போவோம். ரத்தம் அதிகமாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

**போலீ:** அவர் காத்துக்கொண்டிருக்கலாம். எதைப் புதைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? திருட்டுச் சொத்தா? (வெண்கலத் தலையைத் தடியால் அலட்சியமாகத் தட்டி) இது என்ன?

**இளையவன்:** சிலை.

**போலீ:** குழியிலிருக்கும் எல்லாச் சாமான்களையும் வெளியில் எடுங்கள்... சீக்கிரம்.

(அவர்கள் இருவரும் அவசரமாகத் தோண்டுகிருர்கள். கிழவர் வலியினுல் புரண்டு, புரண்டு படுக்கிருர். இன்னெரு தலையை வெளியில் எடுக்கின்றனர்)

**போலீ:** இது யார்?

**மூத்தவன்:** புத்தர்.

**போலீ:** புத்தரா? யாரது? முழுப் பெயர் என்ன?

**இளையவன்:** தெரியாது. புத்தர்தான்.

**போலீ:** (புஸ்தகத்தில் குறித்துக் கொண்டு) புத்தர் தகப்பனின் பெயர், வசிக்குமிடம்?

**மூத்தவன்:** தெரியாது. அவர் இறந்து வெகுகாலமாயிற்று.

**போலீ:** நீங்கள் இவற்றை என்ன செய்வீர்கள்?

**இளையவன்:** விற்றுவிடுவோம்.

**போலீ;** விற்றுவிடுவீர்களா? யாருக்கு?

**மூத்தவன்:** தங்கள் சாப்பாட்டு அறைகளை அலங்கரிப்பதற்காகப் பல பணக்காரர்கள் இவைகளை வாங்குவார்கள். இவைகளெல்லாம் கலைச்செல்வங்கள்.

**போலீ:** இது என்ன?

**மூத்தவன்:** செப்புக்கிண்ணம்,

**போலீ:** எந்த முட்டாளாவது இதையும் வாங்குவானென்று சொல்லுகிறீர்களா? நீங்கள் செய்திருக்கும் அலங்கோலத்தைப் பார்த்தால் இதை ஒன்றுக்கும் உபயோகப்படுத்த முடியாது போலிருக்கிறதே.

**மூத்தவன்:** உபயோகிப்பதற்காக அல்ல. அறைகளை அலங்கரிப்பதற்காக. பணம் படைத்தவர்கள் சிற்பங்கள், சித்திரங்கள் சேர்ப்பதில் ஒருவரோடொருவர் போட்டியிடுகின்றனர். புத்தருடைய சிலைகளும், செப்புக் கிண்ணங்களும், முகம்மதிய ஈட்டிகளும் எவனிடம் அதிகம் இருக்கின்றனவோ அவனைக்கலையில் ஆர்வமுள்ளவனென்றும், கலைகளை ஆதரிப்பவனென்றும் உலகம் போற்றுகிறது.

**போலீ:** மூளை கலங்கித்தான் போயிருக்கவேண்டும்; என் கொள்ளுத்தாத்தா சிறுவயதில் உபயோகித்த ஹுக்கா என்னிடமிருக்கிறது. அதை என்னிடமிருந்து வாங்கிக்கொள்ளுவதற்கு ஒரு பணம் படைத்த முட்டாளைக் கண்டு பிடிக்க முடியுமா?

**இளையவன்:** (முகஸ்துதியாக) நாங்கள் முயற்சி செய்கிறோம். நல்ல விலை போவதற்கு அது சரித்திர முக்யத்வம் வாய்ந்ததாக இருக்கவேண்டும். சரித்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். உங்களுடைய கொள்ளுத்தாத்தா பிரக்யாதிபெற்றிருந்தவர் என்று நாங்கள் நிச்சயம் நம்புகிறோம்.

**போலீ:** இது, நீங்கள் எதைப் புகழ் என்று சொல்லுகிறீர்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது. சப்பாத்திகளுக்கு நெய் சரியாகத் தடவவில்லை என்பதற்காக, தம் இரு மனைவியரையும் ஒரே சமயத்தில் மென்னியைத் திருகிக்கொன்றார். அதற்குப் பிறகு ஒருவரும் அவரைக் கலியாணம் செய்துகொள்ள இசையவில்லை. இதிருக்கட்டும். இவைகளை எதற்காக இங்கே புதைத்து வைத்திருந்தீர்கள்? இவைகளில் திருட்டுச் சொத்து ஒன்றும் இல்லையே!

**மூத்தவன்:** இல்லை, இல்லை, நான் சொல்லுவதைக் கேளுங்கள், கலைச் செல்வங்களாகிய சிற்பங்கள், சித்திரங்களின் பழமை அதிகமாக, அதிகமாக அவைகளுக்கு விலையும், மதிப்பும் அதிகமாகின்றன. நானூறு வருடங்களுக்கு முன் செய்தது என்று கண்டெடுத்த புத்த விக்கிரஹத்தின் விலை இருநூறு வருடங்களுக்குமுன் செய்த விக்கிரஹத்தைவிட இரண்டுமடங்காகிறது. காலத்திறனைக் காண்பிக்கக்கூடிய பழமையான சாமான்களெல்லாம் வெகு காலத்திற்கு முன்பே மியூஸியங்களினால் வாங்கப்பட்டுவிட்டன. கலைச் செல்வங்களைச் சேர்ப்பதில் ஆர்வமுள்ளவர்களின் ஹ்ருதயங்கள் உடையாமலிருப்பதற்காக, பழைய மெருகு கொடுக்கவேண்டி இருக்கிறது. மேலும் அமெரிக்கர்கள் இருக்கிறார்கள். இவர்கள் வெகு தூரத்திலிருக்கும் நாட்டிலிருந்து, யுத்தம் செய்வதற்காகவும், இந்தியாவைப் பார்ப்பதற்காகவும், இதனுடைய கலாசாரத்தைக் கொண்டுபோவதற்காகவும் வந்திருக்கிறார்கள். ஆதலால் புதிய வெண்கல, இரும்புச் சாமான்களைச் செய்து ஈர மண்ணில் புதைத்து வைப்பதினால் துருப்பிடித்து பழையவைகள் மாதிரி தோற்றமளிக்கச் செய்கிறோம்.

**போலீ:** சரி, சரி, மறுபடியும் இம்மாதிரியான குரங்குச் சேஷ்டைகளில் இறங்காதீர்கள். (மனதிற்குள் எப்படிச் சொல்லுவது) சட்டத்தைத் திருப்தி செய்தபிறகு நீங்கள் போகலாம்.

(ரகு சட்டைப் பையிலிருந்து சட்டத்தைத் திருப்தி செய்கிறான்).



அழகுத் தெய்வமான

மன்மதன், இளவேனில் ஒய்ந்ததும் பெண்மணிகளின் கூந்தலைத் தன் இருப்பிடமாகக் கொண்டான் என்பர் கவி காளிதாஸர். எந்த அழகிய கூந்தல் தேவதைகள் கண்ணையும் கருத்தையும் பிணிக்குமோ, அக் கூந்தலை வருஷம் முழுவதும் எல்லாப் பருவங்களிலும் கேசவர்த்தினியின் உதவியால் பெறுங்கள். மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

இளமையும் அழகும் கூந்தலுக்குத் தந்து கூந்தலை மனோஹரமாக்குவது கேசவர்த்தினி ஒன்றே.

முக அழகைக் கூந்தலினால் அழகு படுத்துங்கள். உங்கள் கூந்தலைக் கேசவர்த்தினி கொண்டு அழகுபடுத்திக் கொள்ளுங்கள்.

**கேசவர்த்தினி**

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

**விலை அணா 12**

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

**தென் இந்திய ரஸாயன சாலை**

**கோயமுத்தூர்.**

**நகப்பன்:** (கரகரவென்ற தொண்டையில்) தண்......ணீர். என் உயிர் போய்க் கொண்டிருக்கிறது.

**போலீ:** இப்பொழுது இவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகலாம். உங்களுக்கு வழி தெரியுமல்லவா?

(ரகு தலையசைத்தான். கிழவரை மிகவும் சிரமப்பட்டுத் தூக்கிக்கொண்டு போகிறார்கள். திரை விழும் சமயத்தில் போலீஸ்காரன் எதிர் திசையில் செல்லுகிறான். சில விநாடிகளுக்குப் பிறகு திரை மறுபடியும் தூக்கப்படுகிறது. ஆஸ்பத்திரியில் ஒரு வார்டு ஸ்பிரிங் கட்டிலில் முனகிக்கொண்டு கிழவன் படுத்திருக்கிறார்.)

**நகப்பன்:** நர்ஸ், டாக்டரை உடனே கூப்பிடு. என்னுடைய ஹ்ருதயம் நின்று விடும்போலிருக்கிறது.

**நர்ஸ்:** நீங்கள் கவலைப்படாமலிருந்தால், சீக்கிரம் குணமாகிவிடும்.

**நகப்பன்:** (பொறுமை யிழந்து) சீக்கிரம் டாக்டரைக்கூப்பிடு, நான் இறப்பதற்கு முன்.

**நர்ஸ்:** சரி, நான் கூப்பிட்டுக்கொண்டு வருகின்றேன்.

(அவள் போகிறாள்)

**நகப்பன்:** (தனக்குத்தானே பேசிக் கொள்ளுகிறார் தம் ஞாபகமிழந்து) இது, ஐயா, முகலாயச் சிற்பத்தின் கிடைத்தற்கரிய சின்னம்—பதினாறும் நூற்றாண்டு — பாதிபூர்சிக்ரியில் ருஷிய ஆராய்ச்சியாளர்களால் தோண்டி எடுக்கப்பட்டது. இது, அம்மா, நூர்ஜஹான் உபயோகித்த பௌடர் டப்பா—அவளுக்கு, சீனதேசத்து அரசியால் பரிசளிக்கப்பட்டது. ஒன்றும் சார்ல்ஸைக் கொலை செய்ய அனுமதித்த வாரண்டில் கையெழுத்திடுவதற்காக உபயோகிக்கப்பட்ட பேனா—பதினெட்டு காரட் தங்கநிப் மூடியில் வைரங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன—ரூபாய் 700 விலை மிக மலிவு.

(டாக்டர் வருகிறார்)

நீங்கள் யார்? வாஸ்கோட காமாவா? உங்களைப் பார்த்ததில் மிக்க சந்தோஷம்.

**டாக்டர்:** (கதவருகில் வேகமாகச் சென்று உரத்த குரலில்) நர்ஸ்! ஐஸ் பையும் ஸ்மெல்லிங் ஸால்ட்டும் சீக்கிரம் கொண்டுவா.

**நர்ஸ்:** (திரை மறைவில்) இதோ வருகிறேன்.

(டாக்டர் நோயாளியின் நாடியைப் பரிசோதித்து விட்டு! சந்தேகத்துடன் தலையசைக்கிறார். நர்ஸ் வருகிறாள்.)

**டாக்டர்:** தர்மாமீட்டரை வைத்துப்பார். மோசமான கேஸ்போல் தோன்றுகிறது. ரத்தம் உள்ளே செலுத்த வேண்டியிருக்கும்.

**நகப்பன்:** என்னுடைய பிள்ளைகளுக்குச் சொல்லியனுப்புங்கள், தயவு செய்து டாக்டர்.

**டாக்டர்:** (நர்ஸிடம்) சொல்லியனுப்ப வேண்டியதுதான்; வெளியில் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

(நர்ஸ் போகிறாள். ஐஸ் பையைச் சரியாக வைத்துவிட்டு டெம்பரேசர் சார்டை டாக்டர் பார்த்துக் கொண்டிருக்கிறார். ரகுவும் ஜகனும் வருகிறார்கள்.)

**ரகு:** எப்படி யிருக்கிறார்?

**டாக்டர்:** ரத்தம் அதிகமாக நஷ்டமாகியிருக்கிறது. நாடியும் பலஹீனமாக இருக்கிறது. 'க்ளாவிகோ ஸெரிப்ரல் ஷாக்'. அதிர்ஷ்டமிருந்தால் பிழைக்கலாம். பையில் இருக்கும் ஐஸை அரை மணிக்கொருதரம் மாற்றுங்கள். அதிகம் அலட்டிக்கொள்ள வேண்டாமென்று சொல்லுங்கள். அவசியமானால் எனக்குச் சொல்லியனுப்புங்கள்.

**ரகு:** வந்தனம், டாக்டர்.

(டாக்டர் போகிறார்)

**நகப்பன்:** (அவர்களைப் படுக்கை யருகில் வரும்படி சைகை காட்டுகிறார்). உயிர் போவதற்குமுன் நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். என் வேளை நெருங்கி விட்டதாகத் தெரிகிறது. இந்த வியாபாரத்தைப்பற்றித்தான் எனக்குக்

கவலையாக இருக்கிறது. நீங்கள் இருவரும் சிறுவர்கள்—அனுபவமற்றவர்கள்.

ரகு: (தொண்டையடைக்க) உங்களுடைய உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லை என்று டாக்டர் சொன்னார். நீங்கள் கவலைப்படக் கூடாது.

தகபபன்: என்னுடைய பீரோவின் மேல் தட்டில் நமக்குச்சாமான் அனுப்பும் கம்பெனிகளின் லிஸ்ட் இருக்கிறது. திபெத்திலிருந்து கண்ணாடி மணிகளும், கற்களும் கொண்டுவருபவர்களின் பெயர்களும் இருக்கின்றன. கடையில் கொடுப்பதற்கு முன் அவைகளை நன்றாகப் பழசாக்கிவிடவேண்டும். விரிந்ததோ அல்லது உடைந்த பழைய சாமான்களுக்கு, சற்றும் பழுதில்லாச் சாமானைக்காட்டிலும் மதிப்பு அதிகம். பழைய கலைச்செல்வங்களைச் சேர்ப்பவர்கள் சிற்பத்தின் கால்களும், கைகளும் சரியாக இருந்தால் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார்கள். உடையுங்கள், வெட்டுங்கள். குழந்தைகள் அவைகளை வைத்துக்கொண்டு கொஞ்ச நாள் தெருக்களில் விளையாடட்டும்.

ஜகன்: இவைகளெல்லாம் எங்களுக்குத் தெரியும், அப்பா. யுத்தத்திலிருந்து கிடைத்த விசித்திர சாமான்களைச் சேர்த்திருப்பதாகச் சொன்னீர்களே.

தகப்பன்: நான் அதைப்பற்றிச் சொல்ல வந்து கொண்டிருந்தேன், எனக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்—மிகவும் பலஹீனமாக இருக்கிறது.

(தண்ணீர் சாப்பிடுகிறார்)

விசித்திரப் பொருள்கள் சேர்ப்பதிலும் பாஷன் உண்டு. 'சில சமயங்களில் புத்தச் சிலைகளை ஒருவரும் கவனிக்கமாட்டார்கள். சேகரிப்பவர் சைனாமணிகளும் பாரசீக மதுக் கோப்பைகளும் ரஷிய ஈட்டிகளும் வேண்டு மென்பார்கள். எப்பொழுதும் சேகரிப்பவர்களின் நாடியில் உங்களுடைய கைவிரல்கள் இருக்க வேண்டும். எந்தெந்தச்

பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

**குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து**

**சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்**

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

**போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்**

## டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

1, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளைதெரு, தெப்பகுளம் போஸ்ட்.

சமயத்தில் எதெதற்கு மோகமிருக்கு மென்று அறிய வேண்டும். இந்தயுத்தத் தையே எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு நாள் இது முடிந்துவிடும். யுத்தத் திற்குச் சென்றிருந்தும் குண்டுக்குத் தப்பியவர்கள், தங்களுடைய ஜனங் களின் மதிப்பைப் பெறுவதற்காக ஏதா வது எடுத்துப்போக விரும்புவர். நீங் கள் பலவித விசித்திரப் பொருள்களைச் சேகரித்து, சரிப்படுத்தி, லேபில் ஒட்டி, விற்பனைக்குத் தயாராக வைத்திருக்க வேண்டும். வேடிக்கையான உருவம் கொண்ட இரும்புத்துண்டை எடுத்துக் கொண்டு, ஹீரோஷிமாவை அழித்த அணுகுண்டிலிருந்த துண்டு எனச்சொல் லவேண்டும். பாதி எரிக்கப்பட்ட சிகார் துண்டை எடுத்து, யால்டாவில் ஸ்டாலி னேடு சம்பாஷிக்கும் போது சர்ச்சில் துரையினுல் உபயோகிக்கப்பட்டது என்றுபுகல வேண்டும். அதிசயமான பித் தளைப் பித்தான் தளபதி 'ஐஸன் ஹோவ ரின்' யூனிபாரத்திலிருந்தது என்று கூற வேண்டும். உங்கள் கற்பன சக்தியை உபயோகித்தீர்களானுல் இதற்கு முடிவே கிடையாது.

**ஜகன்:** சரி அப்பா! சிரமப்படுத்திக் கொள்ளாதீர்கள். உங்களுக்கு மூச்சுத் திண றுகிறது.

**தகப்பன்:** என்னுடைய தலைபாரமாக இருக்கிறது. கண்களைத் திறக்க முடிய வில்லை. பன்னிரண்டிடங்களில் முறிந் திருக்கிற மாதிரி முதுகெலும்பு வலிக்கி றது.

(வலியினுல் புரளுகிமுர்)

என்னுடைய கட்டிலை மாற்றக்கூ டாதா? நான் டாக்டரிடம் பத்துத் தட வைகள் சொன்னேன். இந்தக் கட்டில் உறுத்துகிறது.

**ரகு:** (உரத்த குரலில்) நர்ஸ்!

**நர்ஸ்:** (உள்ளே வந்து) என்ன வேண் டும்.

**ரகு:** இந்தக் கட்டிலை மாற்ற வேண்டு மென்று எங்கள் தகப்பனுர் சொல்லுகி முர். இது அவருடைய வலியை அதிகப் படுத்துகிறதாம்.

**நர்ஸ்:** தாங்கள் கட்டாயப்படுத்திஞல் மாற்றுகிறேன். இந்தக்கட்டிலில் ஒன்றும் கெடுதலில்லை. உண்மையில் இங்கு இருப் பவைகளில் மிகவும் உயர்ந்தது. இவ்வ ளவு நாட்கள் ஸ்பெஷல் வார்டில் இருந் தது. அமெரிக்காவிலிருந்து ஜெனரல் மாக் ஆர்தருடைய சாமான்களுடன் வந் தது. உங்களுக்குப் பிடிக்காவிட்டால் நான் வேறென்று கொண்டு வருகிறேன்.

**ரகு:** ஆம், வந்தனம்.

(அவள் போகிருள்)

**தகப்பன்:** (பரபரப்புடன்) அவள் சொன்னதைக் கேட்டீர்களா?

**மூத்தவன்:** என்ன?

**தகப்பன்:** (எழுந்து) நான் செத்த பிறகு மிகவும் அழகாகத்தான் வியாபா ரத்தை நடத்துவீர்கள். இது ஜெனரல் மாக் ஆர்தரின் சொந்தக்கட்டில் பார்த்தீர் களா?

(அவருடைய கண்களில் ஒரு பிரகாசம். எழுந்திருக்க முயற்சிக்கிமுர்.)

**இளையவன்:** தயவு செய்து வேண்டாம். நீங்கள் சொல்வது எங்களுக்குப் புரிகி றது. உங்களுக்கு ஓய்வு இருக்க வேண் டும்.

**தகப்பன்:** (கம்பளிகளை உதறித்தள்ளி விட்டு) ஓய்வாவது, மண்ணுங்கட்டி யாவது? முட்டாள்கள் மாதிரி ஒன்றும் செய்யாமல் நிற்கவேண்டாம்......

(கட்டிலிலிருந்து குதிக்கிமுர்)

ஜெனரல் மாக் ஆர்தரின் சொந்தக் கட் டில். ஒவ்வொரு ஸ்பிரிங்கையும் நூறு நூறு ரூபாய்க்கு விற்கலாம். வாருங்க கள், பிடியுங்கள். நர்ஸ் வருவதற்கு முன் நாம் போய்விடவேண்டும்.

(அதிக சிரமத்துடன் வேர்க்க விறு விறுக்க அக் கட்டிலைத் தூக்கிக்கொண்டு கதவின் வழியாக வெளியே செல்லுகின் றனர். மற்றெரு வழியாக நர்ஸ் உள்ளே வருகிருள்.)

**நர்ஸ்:** அட கடவுளே! நோயாளியும் கட்டிலும் எங்கே?

(அங்குமிங்கும் பார்க்கிருள். கூரை யைப் பார்க்கிருள். தலைசுற்றுகிறது.)

டாக்டர் டாக்டர்! உதவி!

(மூர்ச்சித்து, தடாலென்று கீழே விழுகி முள். திரை விழுகிறது)




★ ★ மைசூர் கவர்மெண்டு தயாரிப்பு ★ ★

எவ்விதமான

வேலைக்கும்

ஈடுகொடுக்கக்

கூடியவை



கட்டிட வேலையிலோ, சுரங்கத்திலே ரயில் பாதைகளைச் செப்பனிடவோ, எவ்வித வேலைக்கும் சுளகுப் பாறை ஈடு கொடுக்கவேண்டும்

பிரத்தியேகமான முறையில் உயர்ந்த இரும்பிலிருந்து உண்டுபண்ணப்பட்ட எங்கள் சுளகுப் பாறைகள் எத்தகைய கடுமையான வேலையிலும் நன்கு உழைக்கக்கூடியவை.

வெஸ்டுகோஸ்டு, நார்த்தர்ன் சர்க்கார் நீங்கலாக சென்னை மாகாணத்திற்கு வினியோகஸ்தர்கள்:—

**மெஸர்ஸ் V. கனகய்ய செட்டி & கோ**
**105**, நைனியப்பநாயக்கன் தெரு.
ஜி. டி. மதராஸ்.

**மெஸர்ஸ் D. B. மதன் & கோ.**
**39**, ஸகின்ட்லைன்பிச்சு,
ஜி. டி. மதராஸ்,

# டாடா அக்ரிகோ

கருவிகளையே வாங்குகள்

**தி டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்**

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

# பழமையும் புதுமையும்



நம் முன்னோர்கள் தங்களுடைய பற்களை ஆலம்விழுது, வேப்பங்குச்சி முதலியவைகளால் சுத்தம் செய்துகொண்டிருந்தார்கள்.

தற்காலத்தில் நாம் ரஸாயனசாஸ்திரத்தின் உதவியால் கோலினாஸ் பல்பேஸ்டைக் கொண்டு பற்களை சுத்தசெய்து சுத்தமாகவும் கெட்டியாகவும் வைத்துக்கொள்ள முடிகிறது.

ஏனென்றால் கோலினாஸ் நுரை பல் இடுக்குகளில் சென்று பரிஷ்காரப்படுத்தி, ருசி, வாய் கந்தம், யாவற்றையும் இனிமையாக்குகிறது.

# KOLYNOS

கோலினாஸ் சிக்கனமானது.

½ அங்குல பேஸ்ட் தான் தேவையானது.




KI.2 TAM




# டி எஸ். ஆர்.

தைலங்களுக்கு நிகரில்லை என்பது எல்லோருக்கும் கைகண்ட அனுபவம்.

வாசனைத் திரவியங்களுக்கோ கேட்பானேன். சுதந்திர இந்தியாவில் கோகுல் அம்பர் ஊதுவத்தி மணக்காத மாளிகையுமுண்டோ!

## T. S. R. & Co.

கும்பகோணம்.

Cauveri Colour Press, Kumbakonam.